VISIT…

தமிழ்
இசைத்தேன்

தமிழ் இசைத் தேன்

வைகோ

வெளியீடு

ஸ்ரீ வாரி பதிப்பகம்

73, மாரியம்மன்கோவில் தெரு,

பூளைமேடு புதூர், கோவை – 641 004

தொலைபேசி : 0422- 2560648 / 94424 10979

சந்தோஷ் – சத்யவனிதா

ஆயிரம் ஆண்டுகள் வாழ்க!

கோவை பூ.சா.கோ. சர்வஜன மேல்நிலைப்பள்ளியில் தமிழ் ஆசிரியராகப் பணிபுரிந்து வருகின்ற பெருந்தகை ஜி.ஆர். கோவிந்தராஜுலு அவர்கள், சென்னை தியாகராய நகரில் உள்ள கலைஞன் பதிப்பகத்தில் நூல்களைத் தெரிவு செய்து கொண்டு இருந்தபோது, அங்கே நான் அவர்களைச் சந்தித்தேன். வைகோ அவர்களின் இலக்கிய உரைகளைத் தொகுத்து நாங்கள் வெளியிட்டு இருக்கின்ற, **'தேன்மலர்கள்'** என்ற நூலை வாங்கிச் சென்றார்கள். அந்த நூலைப் படித்துச் சுவைத்தபின்னர், தமது பாராட்டுகளைத் தொலைபேசியில் தெரிவித்தார்கள்.

கோவை மாவட்டம், பல்லடம் வட்டம் வெங்கட்டாபுரம் கிராமத்தைச் சேர்ந்த, ஜி.ரங்கசாமி -பத்மாவதி ஆகியோரின் மகனாகப் பிறந்த கோவிந்தராஜுலு அவர்களின் உடன்பிறந்தவர்கள், சரஸ்வதி, சரோஜினி, ராஜாமணி, ஜீவரத்தினம், ஆகிய சகோதரிகளும், வேலுமணி என்ற சகோதரரும். விவசாயக் குடும்பம். பல்லடம் பகுதியில் வறட்சி ஏற்பட்டபோது, ரங்கசாமி, கோவை அருகே பூளைமேடு புதூர் பகுதிக்குக் குடிபெயர்ந்தார். அங்கே மளிகைக் கடை, உணவு விடுதி நடத்தி வந்தார். பி.லிட் முடித்த கோவிந்தராஜுலு அவர்கள், 1973 இல் இடைநிலை ஆசிரியராகப் பணியில் சேர்ந்தார். பின்னர் எம்.எட். படித்து, பணி உயர்வு பெற்று, 1986முதல் தமிழ் ஆசிரியராகப் பணி ஆற்றி வருகிறார். 35 ஆண்டுக்கால ஆசிரியப் பணியில் பெரும் மனநிறைவு கொள்கிறார்.

கோவிந்தராஜுலு-அமிர்தம் இணையருக்கு, பிரேம்குமார், சந்தோஷ் என இரண்டு மகன்கள். பிரேம்குமார் பி.டெக். டெக்ஸ்டைல்ஸ் பட்டம் பெற்று, மத்திய ஆப்பிரிக்கக் கண்டத்தில்,ருவாண்டா நாட்டில் பணி ஆற்றினார். தற்போது, ஜெர்மனியில் பிரெஸ்டன் பல்கலைக்கழகத்தில், எம்.டெக் படித்து வருகிறார். இவரது துணைவியார் வித்யா, பி.டெக் டெக்ஸ்டைல் படித்து, ருவாண்டாவில் கணவருடன் பணி ஆற்றினார். தற்போது, அவரும் ஜெர்மனி செல்கிறார்.

மணமகன் சந்தோஷ், பி.இ.முடித்து, சென்னை, பெருங்குடியில் ஃ போர்டு இன்ஃபோடெக் நிறுவனத்தில் பணி ஆற்றி வருகிறார். மணமகள் சத்யவனிதா, எம்.இ.படித்து முடித்து, சத்தியமங்கலம், பண்ணாரி அம்மன் பொறியியல் கல்லூரியில், விரிவுரையாளராகப் பணி ஆற்றினார்.

பழகுதற்கு இனிய பண்பாளரான திரு கோவிந்தராஜுலு அவர்கள், இளையமகன் சந்தோஷ் திருமண விழாவினையொட்டி, ஒரு நூலை வெளியிட விழைந்தார்கள். அரசியல் சார்பு அற்ற வைகோவின் உரைகள் இரண்டைத் தேர்வு செய்து, நூலாகத் தொகுத்துத் தருமாறு கேட்டுக் கொண்டார்கள். தமிழகத்தின் அனைத்துத் தரப்பு மக்களையும் வெகுவாக ஈர்த்த, திருவாசகம் இசைப்பேழை வெளியீட்டு விழாவில் வைகோ ஆற்றிய உரையும், பொள்ளாச்சிநல்லமுத்து கவுண்டர் நா.மகாலிங்கம் கல்லூரியின் பொன்விழா தொடக்க நிகழ்வில் (07.08.2007) ஆற்றிய உரையும் இந்த நூலில் இடம் பெற்று இருக்கின்றது.

'தமிழ்நாட்டில் நடைபெறுகிற ஒவ்வொரு திருமணத்திலும் ஒரு நூல் வெளியிடுதல் வேண்டும்' என்ற அடிப்படையில், 28.3.2008 அன்று கோவை அவினாசி சாலை, கோல்ட்வின்ஸ் ஸ்ரீ ராமலட்சுமி மகால் திருமண மண்டபத்தில் நடைபெற்ற சந்தோஷ்-சத்யவனிதா திருமணத்துக்கு வருகைதந்து, மணமக்களை வாழ்த்திச் சிறப்பித்த சான்றோர்கள் அனைவருக்கும் இந்த நூல் அன்பளிப்பாக வழங்கப்படுகிறது. இல்லறம் என்னும் நல்லறம் காணும் மணமக்கள் இருவரும், வாழ்வின் அனைத்து நலன்களையும் பெற்று, ஆயிரம் ஆண்டுகள் வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்திட, நம் இதய வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்வோம்.

இந்த நூல் குறித்து உங்கள் கருத்துகளை எனக்குத் தெரிவியுங்கள்.வைகோ நூல்கள், உரைகளின் ஒளிப்படக் குறுவட்டுகளைப் பெறத் தொடர்பு கொள்ளுங்கள்.

தமிழை நேராக அச்சிடுங்கள், ***சாய்த்து அச்சிடாதீர்கள்***
தமிழ்ச் சொற்களைத் தனித்தனியாக முழுமையாக எழுதுங்கள்!
ஒருமுறையேனும் உலகத்தைச் சுற்றி வாருங்கள்.
உங்கள் வாழ்க்கையை ஒரு நூலாக எழுதுங்கள்.

அருணகிரி
(9444 39 39 03)

திருமண வாழ்த்து

(நேரிசை வெண்பா)

சந்தோசு – சத்யா வனிதா தழைத்துயர்க!
சிந்தை மணக்கச் செழிப்புறுக! – வந்த நலம்
பேணும் குடும்பம் பெருமை நிதம்வளர்த்துக்
காணுக நாளும் களிப்பு.

நல்லமனப் பெற்றோர் நலம்காத்துச் சந்தோசும்
வல்லமைசேர் சத்ய வனிதாவும் – பல்வளமும்
சேர்ந்துயரும் அன்புச் செழிப்போடு வாழியவே
வேர்செழிக்கும் இன்பம் மிகுந்து

– செந்தலை **ந.கவுதமன்**
பூ.சா.கோ. சர்வஜன மேல்நிலைப்பள்ளி,
பூளைமேடு கோவை - 4.

திருவாசகத் தேன்

பொருநை ஆற்றின் சங்கீதம் - மேற்குத் தொடர்ச்சி மலைகளின் கம்பீரம் - நாட்டுப் புறப்பாடல்களின் திரை வடிவம் - தெற்குச் சீமையின் எங்கள் சீதனமாம் இளையராஜா அவர்களின் அருட்கொடையாக, ஆன்மிகப் பாடல்களைப் பல்வேறு இசைக் கருவிகளோடும், பல வகைக் குரல்களோடும் பிணைத்து - இணைத்து இசைப்பெட்டகமாகத் 'திருவாசகம் ஆரடோரியோ' என்னும் படைப்பினை வெளியிடுகின்ற இந்த நிகழ்ச்சியில் தலைமை ஏற்றுச் சிறப்பித்து, கடமை காரணமாக விடைபெற்றுச் சென்று இருக்கின்ற மத்திய அமைச்சர், எனது இனிய நண்பர் மாண்புமிகு ஜெய்பால் ரெட்டி அவர்களே,

முத்தமிழ் நாட்டுக்கு இசையின் மூலமாகப் புகழ்முடி சூட்டிய இசை மாமன்னர்- இந்த விழாவின் நாயகர் இளையராஜா அவர்களே,

கருத்து உரிமையின் கவசமாகத் திகழ்கிற 'இந்து' ஆங்கில நாளிதழின் ஆசிரியர் பெருமதிப்புக்கு உரிய என். ராம் அவர்களே,

வெள்ளித் திரையில் ஜொலிக்கின்ற உன்னதமான நட்சத்திரம் பெருமதிப்புக்கு உரிய ரஜினிகாந்த் அவர்களே,

என் அருமை நண்பர், நாடாளுமன்றத்திலும், சட்டமன்றத்திலும் ஆற்றல்மிகு உரைகளால் முத்திரை பதித்த, நட்புக்கு இலக்கணமான பீட்டர் அல்போன்ஸ் அவர்களே, பெருமதிப்புக்கு உரிய தட்சிணாமூர்த்தி சுவாமிகள் அவர்களே,

திருவாசகத்தின் பெருமையை, இளையராஜா அவர்களின் இசையின் ஆற்றலை, அகிலத்தின் எல்லாத் திசைகளுக்கும் எடுத்துச் செல்லுகிற திருப்பணியில் வாகை சூடி இருக்கின்ற 'தமிழ் மய்யத்தின்' நிறுவனரும், நிர்வாக இயக்குநருமான அருள்தந்தை ஜெகத் கஸ்பார் அவர்களே,

அருள்தந்தை வின்சென்ட் சின்னதுரை அவர்களே, தமிழ் மய்யத்தின் நிர்வாகிகளே, திரை உலகத்துப் பெருமக்களே, இசை உலகத்தின் வித்தகர்களே, அன்பு உடைய தாய்மார்களே, அருமைப் பெரியவர்களே, மக்கள் ஆட்சிக்கு மாண்பு சேர்க்கின்ற செய்தியாளர்களே, தொலைக்காட்சி நிறுவனங்களின் ஒளிப்பதிவாளர்களே, வணக்கம்.

இந்த நிகழ்ச்சியில் உரை ஆற்றக்கூடிய வாய்ப்புக் கிடைத்ததற்காக நன்றி தெரிவிக்கின்ற கடமை இருக்கின்றபோது, எதைச் சொல்லி நான் நன்றி

தெரிவிப்பது பொருத்தமாக இருக்கும் என்று எண்ணியதால் ஏற்பட்ட திகைப்பில், இளையராஜா திருவாசகத்தில் எந்தப் பாடல் வரிகளைத் தேர்ந்து எடுத்து, அவர் நெஞ்சில் நிறைந்த வரிகளாகவே அவர் படைத்து இருக்கின்ற இந்த சிம்பொனி ஆரடோரியாவில் வழங்கிய அந்த வரிகளையே நன்றியாக ஆக்கிக் கூறுவதே பொருத்தமானது எனக் கருதுகிறேன்.

பொல்லா வினையேன்
நின் பெருஞ்சீர்
புகழுமாறு ஒன்றறியேன்!
பொய்யாயின வெல்லாம் போயகல வந்தருளி
மெய்ஞான மாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே!
நின் பெருஞ் சீர் புகழுமாறு ஒன்றறியேன்

என்று மாணிக்கவாசகராகவே மாறி, இறை உணர்வோடு ஒன்றிப் போய்த் தன்னையே மானசீகமாகக் கருதி இளையராஜா பாடுகிறார். தமிழ் இசையாலும், தமிழ்ப் பண்ணாலும் எண்ணிப் பார்க்க முடியாத சாதனைகளைப் படைக்கின்ற ஒரு மாமேதை, முல்லை ஆற்றங்கரையில், இந்தக் கிராமத்தில் பிறப்பார் என்றுதான், அந்தக் கிராமம் தனக்குப் 'பண்ணைப்புரம்' என்று பெயர் சூட்டிக் கொண்டது.

தாயின் அன்பான அரவணைப்பில் வளர்ந்து, அண்ணன் பாவலர் வரதராஜன் பராமரிப்பில் பயின்று, ஏகலைவன் வில்வித்தை கற்றுக் கொண்டதைப்போலத் தானே இசைக் கருவியோடு ஆற்றலை வளர்த்துக் கொண்டு, திரை உலகில் அடி எடுத்து வைத்து, முதல் படைப்பிலேயே எவரெஸ்ட் சிகரமாக உயர்ந்துவிட்ட இளையராஜா அவர்களின் பெருமையைப் பாராட்டுகின்ற விழா இது!என் வாழ்நாளில் மறக்கமுடியாத இந்த வாய்ப்பைத் தந்து இருக்கின்ற இளையராஜா அவர்களுக்கும், அதே சொற்களை நன்றியாகத் தெரிவிக்கிறேன்.

இன்பச் சிலிர்ப்பு

நெருக்கடி நிலை காலத்தில், பாளையங்கோட்டை சிறைச்சாலையின் உயர்ந்த மதில் சுவர்களுக்கு உள்ளே பல மாதங்கள் நான் அடைபட்டுக் கிடந்த 1976 ஆம் ஆண்டில், காற்றின் அலைகளோடு தவழ்ந்து வந்த ஒரு பாடல் என் செவிகளில் மோதியபோது, என் உடலில் இன்பச் சிலிர்ப்பும், பரவசமும் ஏற்பட்டது.

ஒவ்வொரு நாளும் காலைப் பொழுதிலும், மாலையில் பறவைகள் மரங்களைத் தேடி ஓடுகிற வேளையிலும், அந்தத் திரை இசைப்பாடல் தொலைவில்

இருந்து வர வர, இந்தப் பாடலைத் தந்தவர் யார்? இசை அமைத்தவர் யார்? கிராமத்து மணம் கமழுகின்ற இந்த இசை எங்கோ வயல் வெளிகளில் ஒலித்தத் தெம்மாங்குச் சத்தம் போல் கேட்கிறதே, நம் இதயத்தை ஊடுருவுகிறதே என்று நான் திகைத்தேன்.

அந்தப் பாடல்தான் 'மச்சானைப் பாத்தீங்களா? மலை வாழைத் தோப்புக்குள்ளே' எனும் பாடல்! 'அன்னக்கிளி' படத்தின் பாடல்களில் தன்னைக் கால் பதித்துக் கொண்ட இளையராஜா அவர்களின் பரம இரசிகனாகிவிட்ட நான் அவரை விட்டுப் பிரிந்ததே இல்லை.

ஆம்! மோனமான இரவுகளில், நெடுந்தொலைவுக் கார் பயணங்களில் இரவிலும், பகலிலும் நான் விரும்பிக் கேட்கக்கூடிய திரை இசைப் பாடல்களில் என்றைக்கும் நான் மறக்க முடியாத பாடல்களை இசை அமைத்துத் தந்தவர் அல்லவா? காதல் ஓவியம், அலைகள் ஓய்வதில்லை, கடலோரக் கவிதைகள், 16 வயதினிலே, முதல் மரியாதை, முள்ளும் மலரும், ஆறிலிருந்து அறுபது வரை, நாயகன், மூன்றாம் பிறை, கேளடி கண்மணி, கவிக்குயில், இராஜபார்வை, கரகாட்டக்காரன், சின்னக்கவுண்டர், சின்னத்தம்பி, நீங்கள் கேட்டவை, சிந்து பைரவி, இளமை ஊஞ்சலாடுகிறது, பயணங்கள் முடிவதில்லை, உதயகீதம் என்று வரிசையாகச் சொல்லிக் கொண்டே போகலாம்.

840 திரைப் படங்களுக்கும் மேல் இசை அமைத்து இருக்கிறார். காலத்தை வென்று இருக்கக்கூடிய பாடல்களாகவே அமைத்து இருக்கிறார். அது மின்மினியைப் போல் மறைகின்ற பாடல்கள் அல்ல. இன்னும் நூறு, நூறு ஆண்டுகளுக்கு ஒலிக்கின்ற சாதகப் பறவைகளின் கானங்கள்தான் அவை.

1993 - ஆம் ஆண்டு இலண்டன் நகரத்தில் 'Royal Philharmonic Orchestra' குழுவினரின் இசைக் கருவிகளுக்கு நடுவில், நம்முடைய இளையராஜா அவர்கள் சிம்பொனி இசை அமைக்கிறார் என்ற செய்தி, மேற்கு உலகத்தைத் திடுக்கிடச் செய்தது. ஐரோப்பாக் கண்டமே அவரை உற்றுப் பார்த்தது.

இது அவ்வளவு எளிதான ஒன்று அல்ல. அவர் போற்றுகின்ற 'வான் லுட்விக் பீத்தோவன்' ஜெர்மனியில் பிறந்த அந்த மகா இசை மேதை, ஒன்பது சிம்பொனி அமைத்து இருக்கின்றார். அந்தப் பீத்தோவனைச் சின்னஞ்சிறு வயதில் பார்த்த மொஸார்ட், 'Watch this young fellow, he is going to create a stir in the musical world' 'இந்த இளைஞனைப் பார், இவன் சங்கீத உலகத்தில் பெரும் கிளர்ச்சியை ஏற்படுத்தப் போகிறான்' என்று மொஸார்ட் பாராட்டினார்.

அந்தப் பீத்தோவன், 'HEROICA' 'இரோய்க்கா' என்கின்ற அவரது மூன்றாவது

சிம்பொனியை, நெப்போலியனின் படையெடுப்புகளில் அவனது போர் வெற்றிகளைக் குறித்த சிம்பொனியாக, போர்க்களங்களில் வெற்றியை ஈட்டியதால் அந்த வெற்றிகளுக்கு, வீரத்துக்கு இலக்கணமான நெப்போலியனுக்கு அர்ப்பணிக்கிறேன்' என்று சொன்னார். ஆனால், அதே நெப்போலியன் தனக்குத்தானே முடிசூட்டிக் கொண்டு, தான்தான் பிரெஞ்சுப் பேரரசின் சக்கரவர்த்தி என்று அறிவித்தபோது, கொஞ்சம் கூட அச்சம் இன்றி, He did tore that dedication அந்த அர்ப்பணிப்புத் தாளைக் கிழிந்து எறிந்து நான் எதிர்க்கிறேன்' என்று சொன்னார் பீத்தோவன்.

அத்தகைய உணர்வு பெற்ற அவர், கொஞ்சம் கொஞ்சமாகச் செவிப்புலனை இழந்து, கேட்கின்ற வலிமை இழந்து, அடுத்தவர்கள் பேசுவதும் கேட்காத வேளையில், எட்டாவது, ஒன்பதாவது சிம்பொனி அமைத்தபோது அந்தக் கருவிகளின் இசை பரவுகிறபோது, இங்கே திரண்டு இருப்பதைப்போல அங்கே திரண்டு இருந்த பல்லாயிரக்கணக்கான மக்கள் எழுந்து நின்று கையொலி எழுப்பியபோது, அந்தப் பாராட்டு ஒலிகள்அவரின் காதுகளில் விழாததால், அவருடைய இசைக் கருவியின் மீது விழுந்து கண்ணீர் விட்டார். அந்தப் பீத்தோவன் படைத்த சாதனையை நம்முடைய இளையராஜா படைத்து இருக்கிறார்.

இசையின் பிறப்பிடம்

நான் நாடாளுமன்ற மாநிலங்கள் அவையில் சொன்னேன். இந்த நாட்டின் கவனத்துக்கு வராமல் போன காரணத்தினால் சொன்னேன். 'ஒரு கொரியாக்காரன் சாதிக்காததை, சீனாக்காரன் சாதிக்காததை, ஜப்பான்காரன் சாதிக்காததை, ஓர் இந்தியன் - ஒரு தமிழன் - ஒரு தென்னாட்டுத் தமிழன் எங்கள் பண்ணைப்புரத்து இளையராஜா சாதித்து இருக்கிறார்' என்று சொன்னேன்.

இளையராஜாவுக்கு ஆற்றல் எங்கிருந்து வந்தது? ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளாக உலகத்தில் தோன்றிய முதல் இசை - தமிழ் இசை என்ற காரணத்தினால், தடைகளை உடைத்து எறிந்து கொண்டு, அந்தத் தென்னாட்டுத் தமிழன் இசையைப் படைத்து இருக்கின்றார்.

இசை எங்கே இருந்து வந்தது? சாம வேதத்தில் இருந்து வந்தது அல்ல. 'ச ரி க ம ப த நி' என்றார்கள். சட்சமம், ரிஷிபம், காந்தாரம், மத்திமம், பஞ்சமம், தைவதம், நிசாதம் - ச ரி க ம ப த நி' என்று சொன்னார்கள்.

அதற்கு முன்பே இளங்கோ அடிகள்,

குடமுதல் இடமுறையா, குரல், துத்தம், கைக்கிளை,

உழை, இளி, விளரி, தாரம் என

விரிதரு பூங்குழல் விளங்கிய பெயரே

என்று பாடி இருக்கிறார்.

இங்கே பல நாடுகளுக்குப் போய் வந்தவர்கள் இருக்கின்றீர்கள். மதிப்புக்கு உரிய ராம் அவர்கள் இருக்கிறார்கள். உலகத்தின் பழமையான நாகரிகத்தை அடையாளம் காட்டிக் கொள்கிற ஈமக் கோபுரங்கள், மன்னர்கள் இறந்ததற்குப் பிறகு அவர்களின் உடல்களை அடக்கம் செய்து வைத்து இருக்கிறார்களே பிரமிடுகள், அந்த எகிப்தியப் பிரமிடுகளில் யாழ் கருவியின் தோற்றம் வடிவு அமைக்கப்பட்டு இருக்கின்றது. அங்கே 'யாழ்' என்கின்ற கருவி இருந்தது. 3,500 ஆண்டுகளுக்கு முற்பட்ட அந்த யாழ் இசைக் கருவி, இலண்டன் நகரத்தின் அருங்காட்சி அகத்தில் வைக்கப்பட்டு இருக்கின்றது.

அதைப்போலவே மெசபடோமியாவில் 5,000 ஆண்டுகளுக்கு முன்னால் இருந்த சுமேரிய நாகரிகம் பழமையான நாகரிகம். அங்கே இருந்த யாழ் இசைக்கருவி ஒன்று பாக்தாத் நகரத்தின் அருங்காட்சி அகத்தில் வைக்கப்பட்டு இருக்கின்றது.

''ஓர் இசைக்கருவியில் ஏழு சுரங்கள் வருகின்றன. ஏழு நரம்புகளைக் கொண்ட யாழ் இருந்தது'' என்று **'இட்ச்சு சுவான்'** என்கின்ற, கி.மு. 522-ஆம் ஆண்டு எழுதப்பட்ட ஒரு சீன இசை நூல் தெரிவிக்கிறது.

கிரேக்கத்தின் ஹோமர், யாழின் திறமையை - நரம்புக் கருவிகளின் திறமையைச் சொல்கிறார்.

அருமைச் சகோதரர்களே, மொஹஞ்சதாரோ, ஹரப்பாவில் நடந்த அகழ்வுகளைப் பற்றி ஈராஸ் பாதிரியார் குறிப்பிட்டு இருக்கின்றார். ''இங்கே யாழ் என்கின்ற அந்த இசைக்கருவியின் முத்திரை கிடைத்து இருக்கின்றது. இது பூர்வீகத் தமிழர்கள் - ஆதித் தமிழர்கள் பயன்படுத்திய கருவி'' என்று குறிப்பிட்டார்.

ஏழாயிரம் ஆண்டுகளுக்கு முன்னால் இருந்த **'பெருநாரை, பெருங்குருகு'** என்கின்ற இசை நூல்கள் தெரிவிக்கின்றன. இது ஒன்றும் கற்பனை அல்ல - கட்டுக்கதை அல்ல. லெமூரியாக் கண்டத்தில் - தென் மதுரையில் இசைக் கருவிகள் இருந்தன என்பதை, தஞ்சை ஆபிரகாம் பண்டிதர் 'கருணாமிர்த சாகரம்' என்னும் 1376 பக்கங்கள் கொண்ட தமது நூலில் - இருபதாம் நூற்றாண்டில் வந்த முதல் ஆராய்ச்சி நூலில் - 1917-ஆம் ஆண்டு வெளியிட்ட அந்த நூலில் யாழின் பெருமைகளைக் குறிப்பிடுகின்றார்.

விபுலானந்த அடிகள் எழுதிய 'யாழ் நூலில்' குறிப்பிடுகின்றார். 14 வகையான யாழ்கள் தமிழர்களிடம் 7,000 ஆண்டுகளுக்கு முன்னால் இருந்தன.

‘பேரியாழ்’ என்ற ஆயிரம் நரம்புகளைக் கொண்ட ஒரு யாழ் இருந்தது. உலகில் எந்த நாட்டிலும், எந்தக் காலத்திலும் இல்லாதது - தென்மதுரையில் இருந்தது. அது அழிந்துவிட்டது கடலிலே!

அதற்குப்பிறகு,

19 நரம்புகளைக் கொண்ட **‘மகரயாழ்’,**
14 நரம்புகளைக் கொண்ட **‘சகோடயாழ்’,**
7 நரம்புகளைக் கொண்ட **‘செங்கோட்டி யாழ்’,**
100 நரம்புகளைக் கொண்ட **‘கீசக யாழ்’,**
‘நாரத யாழ்’, ‘தும்புரு யாழ்’, ‘மருத்துவ யாழ்’,
‘மகதி யாழ்’, ‘கச்சவி யாழ்’, ‘திருக்குச்சிகை யாழ்’,
‘வராளி யாழ்’, ‘வல்லிகி யாழ்’, ‘வில் யாழ்’

என்கின்ற பதினாறு வகையான யாழ்கள் இருந்தன என்று குறிப்பிடுகின்றார். எனவே, இசை இங்கே பிறந்தது. இந்தத் தென்னாட்டில் பிறந்தது இசை. இசையின் வடிவில் இறைவனைக் கண்டார்கள்.

நான் விருப்பு, வெறுப்புகளுக்கு அப்பாற்பட்டு ஒரு பார்வையாளராக, ஓர் இரசிகனாக, இசையில் புலமை பெற்றவனாக அல்ல - ஒரு தமிழ்ப் பற்றாளன் என்கின்ற முறையில் அதைப் பார்க்கிறேன். தேவார மூவர்கள் அதைத்தான் சொன்னார்கள்.

‘ஏழிசையாய், இசைப்பயனாய், என்னுடைய தோழனுமாய்’

என்று சுந்தரமூர்த்தி நாயனார் இறைவனைப் பற்றிச் சொன்னார்.

அதே உணர்வில், **‘ஓசை, ஒலி எல்லாம் ஆனாய் நீயே’** என்று நாவுக்கரசராம் அப்பர் அடிகள் சொன்னார்கள்.

‘பதம் ஏழும் பண்ணும் உருதாளத்து ஒலி பலவும் நின்றான் இறைவன்’ என்று திருஞான சம்பந்தர் சொன்னார்.

இதைத்தான் கத்தோலிக்கத் திருச்சபையினர், தென்இந்திய கிறித்துவ மார்க்கத்தின் திருச்சபையினர் இங்கே வந்து இருக்கின்றார்களே, அவர்கள் போற்றுகின்ற விவிலியத்தில், புதிய ஏற்பாட்டில், யோவான் சுவிஷேசத்தில், அந்த அதிகாரத்தின் முதல் வசனம் -

‘ஆதியில் வார்த்தை இருந்தது. அந்த வார்த்தை தேவனிடத்தில் இருந்தது. அந்த வார்த்தை தேவனாகவே இருந்தது’

எனக் கூறுகிறது. அதைத்தான் சங்கீதத்தில் 122-ஆவது அதிகாரத்தின் மூன்றாவது வசனத்தில் “எருசலேம் இசைவிணைப்பான நகரமாகக்

கட்டப்பட்டு இருந்தது" எனக் கூறுகிறது. தாவீதின் சங்கீதங்கள் யூதர்களுக்கும், கிறித்தவர்களுக்கும் மகிழ்ச்சி ஊட்டுகின்ற சங்கீதங்கள், கிறித்து மார்க்கத் துறவிகளின் உள்ளத்தைக் கவர்ந்த காரணத்தினால் திருவாசகத்தைத் தந்த மாணிக்கவாசகரை அவர்கள் ஏற்றுக் கொண்டார்கள்.

ஆம். இந்தத் திருவாசகம் எப்படி வந்தது?

பன்னிரு திருமுறைகள்

தமிழில், சைவ இலக்கியத்தில் பன்னிரு திருமுறைகள் உண்டு. பன்னிரு திருமுறைகளுள் முதல் ஏழு திருமுறைகள் திருநாவுக்கரசரும், திருஞான சம்பந்தரும், சுந்தரமூர்த்தி நாயனாரும் தந்தவை.

எட்டாவது திருமுறை மாணிக்கவாசகரின் திருவாசகம் - முதல் பகுதி திருவாசகம்; இரண்டாம் பகுதி 'திருக்கோவையார்!'

ஒன்பதாவது திருமுறை ஒன்பது அடியார்கள் தந்த திருமுறைகள். திருமாளிகைத் தேவர், கருவூர்த் தேவர், சேந்தனார், சேதுராயர், கண்டராதித்தர், பூந்துருத்திக் காடநம்பி, புருடோத்தம நம்பி, திருவாழிய அமுதனார், வேணாட்டு அடிகள் ஆகிய ஒன்பது அடியார்கள் தீட்டியதுதான் ஒன்பதாம் திருமுறை.

பத்தாம் திருமுறை திருமூலர் தந்த 'திருமந்திரம்.'

11-ஆம் திருமுறை காரைக்கால் அம்மையார், நக்கீர தேவ நாயனார், கபிலதேவ நாயனார், பரணதேவ நாயனார், கோன் நாயனார், சேரமான் பெருமாள் நாயனார், பட்டினத்துப் பிள்ளையார், நம்பியாண்டார் நம்பி இவர்கள் தந்தவை.

12-ஆம் திருமுறை சேக்கிழார் தந்த'பெரியபுராணம்'.

இந்தப் பன்னிரெண்டு திருமுறைகளின் அடிப்படையும் 'நமசிவாய' என்ற ஐந்து எழுத்துதான். இந்த 'நமசிவாய' என்ற ஐந்து எழுத்தை வைத்துத்தான் சிவபுராணத்தைத் தொடங்குகிறார் மாணிக்கவாசகர். திருவாசகத்தைப் பற்றி வடலூர் வள்ளலார் அருட்பெருஞ்சோதி தனிப்பெருங்கருணை இராமலிங்க அடிகளார் கூறும்போது,

'வான் கலந்த மாணிக்கவாசக நின்வாசகத்தை
நான்கலந்து பாடுங்கால் நற்கருப்பஞ்சாற்றினிலே
தேன்கலந்து பால்கலந்து செழுங்கனித் தீஞ்சுவைகலந்து
ஊன்கலந்து உயிர்கலந்து உவட்டாமல் இனிப்பதுவே'

— எனப் பாடியதோடு,

‘வாட்டமிலா மாணிக்கவாசகரின் வாசகத்தைக்
கேட்டபோது, அங்கிருந்த கீழ்ப்பறவைச்சாதிகளும்
வேட்டமுறும் பொல்லா விலங்குகளும் மெஞ்ஞான
நாட்டமுறும் என்னில் இங்கு நானடைதல் வியப்பு அன்றே’

– என்றும் பாடினார்.

வடலூர் வள்ளலாரின் உள்ளத்தில் மாணிக்கவாசகர் திருவாசகம் இடம் பெற்றதைப்போல, இங்கிலாந்து நாட்டில் இருந்து வந்த ஜி.யு.போப் உள்ளத்திலும் இடம் பெற்றார். 1837-இல் தொடங்கி, 63 ஆண்டுகள் அவர் தமிழ் படித்தார். அவர் திருவாசகத்தில் உருகிப் போனார். பின்னர், இலண்டனில் ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகத்தில் பாலியால் கல்லூரியில் தமிழ்த் துறைத் தலைவர் ஆனார்.

அந்தக் கல்லூரியின் தலைவர் பெஞ்சமின் ஜோவர்ட் என்பவரோடு ஒரு நிலா வெளிச்சத்தில் நடந்து போகிறபோது, ‘தமிழில் இருக்கின்ற திருவாசகத்தைப் போன்றதொரு நூலை உலகில் இதுவரை நான் படித்தது இல்லை’ என்று அவர் சொன்னபோது, ‘அதனை மொழிபெயர்க்கலாமே’ என்று அந்தப் பல்கலைக்கழகத்தின் தலைவர் கூறினார்.

‘எனக்கு முதுமை வந்துவிட்டது. அதை மொழிபெயர்க்கும் ஆற்றல் இல்லை’ என்று போப் சொன்னபோது, **‘To have a fine work in progress is the way to live long, you will live till you finish it’** ஒரு நல்ல செயலுக்காகப் பெரிய பணியில் முன்னேறிச் செல்வது நீண்ட காலத்துக்கு வாழ வழி வகுக்கும். இதை முடிக்கும் வரை நீ உயிரோடு இருப்பாய்’ என்று பெஞ்சமின் ஜோவர்ட் சொன்னார். 1900 ஆம் ஆண்டு ஏப்ரல் 20 ஆம் நாள் அவருடைய மொழிபெயர்ப்பு வெளியாயிற்று. திருவாசகத்துக்குப் பலர் உரை தீட்டி இருக்கின்றார்கள். காலத்தின் அருமை கருதி நான் விரிவாகச் செல்ல விரும்பவில்லை.

திருவாசகம் 51 தலைப்புகளைக் கொண்டது. 656 அல்லது 658 பாடல்கள் என்று சொல்வார்கள். இந்த 51 தலைப்புகளில் பத்துப் பத்துப்பாட்டாக 19 பத்துகள் இருக்கின்றன. ஓர் அதிகாரத்துக்குக் குறள்கள் பத்து, மோசசின் கட்டளைகள் பத்து, சங்க இலக்கியங்களில், பத்துப்பாட்டு என்பது ‘‘முல்லைப்பாட்டு, குறிஞ்சிப்பாட்டு, திருமுருகாற்றுப்படை, பொருநர் ஆற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை, பட்டினப்பாலை, நெடுநல்வாடை, மதுரைக்காஞ்சி, மலைபடுகடாம்’’ என்று பத்து நூல்கள் உள்ளன. அதைப்போலத்தான் திருவாசகத்தில் 51 தலைப்புகளில் 19 பத்துகள் இருக்கின்றன.

அச்சப் பத்து	அடைக்கலப்பத்து	அருள்பத்து
அதிசயப் பத்து	அற்புதப் பத்து	அன்னைப் பத்து
ஆசைப் பத்து	உயிருண்ணிப் பத்து	கண்ட பத்து
குயில் பத்து	குலாப் பத்து	குழைத்த பத்து
செத்திலாப் பத்து	சென்னிப் பத்து	பிடித்த பத்து
பிரார்த்தனைப் பத்து	புணர்ச்சிப் பத்து	யாத்திரைப் பத்து
	வாழாப் பத்து.	

(கைதட்டல்)

இந்தப் பத்தில் இளையராஜா எதைப்பற்றிக் கொண்டார் தெரியுமா? இவர் மூன்று பத்தைப் பற்றிக் கொண்டார்.

இந்தப் பத்தொன்பது பத்துகளில் நமது இளையராஜா மூன்று பத்துகளுக்கு இசை அமைத்து இருக்கிறார். ஒன்று 'யாத்திரைப் பத்து'. அடுத்த பத்து என்ன தெரியுமா? (வைகோ திரும்பிப் பார்க்கிறார். இளையராஜா 'குயில் பத்து' என்கிறார். வைகோ; இல்லை. 'பிடித்த பத்து' என்று கூறுகிறார்.) நீங்கள் திருவாசகத்தில் உருகி ஐக்கியமாகி விட்டீர்கள். அதனால் அப்படிச் சொன்னீர்கள். நான் வெளியில் இருந்து பார்ப்பவன். நீங்கள் இசையமைத்த பாடல் 'பிடித்த பத்து'. அடுத்த பத்து "அச்சப்பத்து." அவர் தேர்ந்து எடுத்தது இந்த மூன்று 'பத்தில்' இருந்தும் ஒவ்வொரு பாடலுக்கு இசை அமைத்து உள்ளார். இவையன்றி அவர் சிவபுராணத்தில் இருந்து பாடல் எடுக்கிறார். 'நமசிவாய வாழ்க' என்னும் சொற்றொடர்தான் திருவாசகத்தின் தொடக்கம்!

ஏன் இந்தத் திருவாசகம் இயற்றப்பட்டது? இது பலருக்கும் தெரிந்த கதைதான். பாண்டிய நாட்டு அரசவையில் தென்னவன் பிரமராயன் என்கிற அமைச்சர் இருந்தார். வாதவூரில் பிறந்தவர். அவர்தான் வாதவூர் அடிகள் மாணிக்கவாசகர்! அவர் குதிரை வாங்குவதற்குச் சென்றபோது அரசுப் பணத்தை எல்லாம், அந்தணர் வடிவில் இருந்த சிவனடியாரோடு சேர்ந்து, சிவனுடைய திருப்பணிகளுக்குச் செலவு செய்து அழித்துவிட்ட காரணத்தினால், 'குதிரையோடு ஏன் வரத் தாமதம்?' என்று கோபித்து மன்னன் செய்தி அனுப்பியபோது, வாதவூரார் மனம் கலங்கிய நேரத்தில், இறைவனின் அருள்வாக்குக் கேட்டு, 'குதிரை வரும் என்று நீ ஓலை அனுப்பு. ஓலையை அனுப்பிவிட்டு நீ முன்னால் செல். பின்னால் குதிரைகள் வரும் என்று சொல்' என்ற சொற்களைக் கேட்டார்.

பிட்டுக்கு மண் சுமந்த பெருமான்

மாணிக்கவாசகர் என்ற பெயர் அப்பொழுது இல்லை. அவர் மன்னனிடத்தில் வந்து, 'குதிரைகள் வந்து கொண்டு இருக்கின்றன' என்று சொல்கிறார்.

குதிரைச் சேவகன் வருகிறான் - சிவன் வருகிறான் குதிரைச் சேவகனாக! நரிகளைக் குதிரைகள் ஆக்கி வருகிறான். குதிரைகள் இலாயத்தில் கட்டப்படுகின்றன.

இரவு நேரத்தில் அந்தக் குதிரைகள் மீண்டும் நரிகளாக மாறித் தளைகளை அறுத்துக் கொண்டு அனைத்தையும் கடித்துப் போட்டுவிட்டு ஓடுகின்றன.

நூலின் தலைப்பு : **பெண்ணின் பெருமை**

முதல் பதிப்பு : 12 மார்ச் 2008

ஆசிரியர், கணினி வடிவமைப்பு : ப. அருணகிரிநாதன்

நூலின் அளவு : டெம்மி சைஸ் 8½ x 5½

தாள் : 80 G.S.M. மேப் லித்தோ

முகப்பு அட்டை வடிவமைப்பு : விஜயன்
☎ 98402 75550

அச்சிட்டோர் : சிவசக்தி அச்சகம், சிவகாசி
☎ 04562-27 4005; 27 5005
Cell: 94433-79005

நன்கொடை : ரூ 10/-

ஆத்திரம் அடைந்த மன்னன், வாதவூராரைச் சிறையில் பூட்டுகிறான். சிறையில் கொடுமைகள் நடக்கின்றன. இறைவன் மேலும் திருவிளையாடல் செய்கிறான். வைகையில் தண்ணீர்ப் பெருக்கு எடுக்கிறது. காலங்கெட்ட காலத்தில் வைகையில் தண்ணீரா? கரை உடைத்துப் பாய்கிறதே வெள்ளம்? என்று கவலைப்பட்ட மன்னன், கரையை அடைப்பதற்கு வீட்டுக்கு ஒவ்வொருவராக வந்து பணியாற்றக் கட்டளை இடுகின்றான்.

பிட்டு வாணிச்சியான வந்தி என்ற செந்தமிழ்ச்செல்விக்கு, அந்தக் கிழவிக்குக்

வணங்குகிறேன்!

பதினொரு ஆண்டுக் காலமாக எனக்குத் தோள் கொடுத்து வருகின்ற என்னுடைய தோழர்கள், என்னுடைய அன்புச் சகோதரிகள், இந்தப் போராட்டக் காலத்தில், வைகோவுக்கு உறுதுணையாக இருங்கள் என்று சொன்ன தாய்மார்கள், வாழ்க்கையில் துயரங்களைச் சரிசமமாகப் பங்கெடுத்துக் கொள்கிற மாதர் குலத்தின் மணிவிளக்குகள், அவர்களின் வாழ்க்கைத் துணைவியர், அவர்கள் இருக்கிற இடத்துக்கு நான் இந்த இடத்தில் இருந்து என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

என் தாய் மாரியம்மாளின் காலைத் தொட்டு வணங்குவதைப் போலவே அவர்களைப் பெற்றெடுத்த தாய்மார்களின் காலைத் தொட்டு வணங்குகிறேன்.

– வைகோ

கரையை அடைப்பதற்கு வீட்டில் பிள்ளை ஒருவரும் இல்லை. எனவே, இறைவன் சிறுபிள்ளையாக மாறி, மண்வெட்டியுடனும், கூடையுடனும் ஓடிச்சென்று, 'நான் கரையை அடைக்கிறேன்; என்ன கொடுப்பாய்?' என்று கேட்டான். அதற்கு வந்தி, 'என்னிடம் ஒன்றும் இல்லை. உதிர்ந்த பிட்டு மட்டும்தான் இருக்கிறது' என்று சொல்ல, பிட்டை வாங்கிக் கொண்டு, கரையையும் அடைக்காமல் தண்ணீரில் குதிப்பதும், நீந்துவதும், விளையாடுவதுமாக இருந்தான். சேவகன் அதைக்கண்டு பிரம்பால் அடிக்க, அவன் முதுகில் விழுந்த அடி, அனைவரின் முதுகிலும் விழுந்தது, மன்னர் முதுகிலும் விழுந்தது.

அப்போது வானத்தில் இருந்து எழுந்த ஒலி, 'சிறையில் இருக்கின்ற வாதவூர் அடிகளை விடுவித்திடுக' எனக் கூற, அதன்பிறகு மன்னன் வேதனையுற்று விடுவிக்க, வெளியே வந்த வாதவூர் அடிகள் ஆலவாய்ச் சொக்கர் இடத்தில் அருள்பெற்றுப் புறப்படுகிறார். 'போய் வா! ஒவ்வொரு இடமாக பல்வேறு ஆலயங்களுக்குச் சென்று, உத்திரகோசமங்கை – காளையார் கோவில் சென்று, திருமுதுகுன்றம், திருக்கழுக்குன்றம் எல்லா இடங்களையும் தரிசித்துவிட்டுக் கடைசியில் திருச்சிற்றம்பலத்துக்கு வந்து சேர்வாய்' என அருள்வாக்கு சொன்னபடி சிற்றம்பலத்துக்குப் போனார். அங்கே திருவாசகத்தைப் பாடினார். இதுதான் திருவாசகம் தோன்றுவதற்கான அடிநாதம்.

'நமசிவாய வாழ்க' என்றுதான் முதலில் தொடங்குகிறது. ஆனால், நம்முடைய இளையராஜா அவர்கள் அதை முதலில் வைக்கவில்லை. முதலில் 'யாத்திரைப் பத்து' வைக்கிறார். யாத்திரைப் பத்து என்றால் என்ன? பயணம் புறப்படுவோம் இந்த மண்ணுலகைவிட்டு, இச்சைகளை விட்டு We start the journey என்று சொல்லுகிறவர்கள்...

'பூவார் சென்னி மன்னனெம் புயங்கப்
பெருமான் சிறியோமை
ஓவா துள்ளங் கலந்துணர்வாய் உருக்கும்
வெள்ளக் கருணையினால்
ஆ ஆ என்னப் பட்டன்பாய் ஆட்பட்
டீர்வந் தொருப்படுமின்
போவோம் காலம் வந்ததுகாண் பொய்விட்
டுடையான் கழல்புகவே.

இது யாத்திரைப் பத்து. அதற்கு அடுத்து, சிவபுராணத்தைப் பாடுகிறார். எடுத்த எடுப்பில் 'நமசிவாய வாழ்க' என்று வைக்காமல்,

'பொல்லா வினையேன் நின் பெருஞ்சீர்

புகழுமாறு ஒன்றறியேன்'

'உன்னைப் புகழக்கூடிய அறிவு ஆற்றல்எனக்கு இல்லையே' என்று மாணிக்கவாசகர் பாடுகிற பாடலை வைத்து இருக்கிறார். இளையராஜாவே மாணிக்கவாசகர் போல ஆகிவிடுகிறார். ஏறக்குறைய நான் 20 முறை இந்த இசைப் படைப்பைக் கேட்டேன். அதைக் கேட்கும்போதுதான் ஏன் இந்தப் பாடலை வைத்தார்? என்று எண்ணினேன்.

அமெரிக்க நாட்டிலும், இங்கிலாந்து நாட்டிலும் இசைக்கருவிகளை இசைக்கக்கூடிய, ஹாலிவுட் திரைப்படங்களுக்கு இசை அமைத்து வெற்றி கண்ட - விருது பெற்ற மாமேதை எழுதிய ஆங்கில வரிகளுக்கு இசைக்கருவிகளை இசைக்கிறார்களே, அந்தப் பாடல்களைத்தான் நீங்கள் கேட்டீர்கள்.

'பொல்லா வினையேன்' என்று சொல்கிறபோது இடையில் , I am just a man imperfect lowly. அடுத்த வரிகள் How can I reach for something Holy - என்ற ஆங்கில வரிகள் வருகின்றன. அந்த உன்னதமான இடத்தை நான் எப்படி அடைய முடியும்? இந்தப் பாடல் மிக அருமையான பாடல். இந்தப் பாடலை வைத்துவிட்டு, அதன்பிறகுதான்,

'நமசிவாய வாழ்க! நாதன் தாள் வாழ்க!
இமைப்பொழுதும் என்நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க!
கோகழி ஆண்ட குருமனிதன் தாள் வாழ்க!
ஆகமம் ஆகி நின்றண்ணிப்பான் தாள் வாழ்க!
ஏகன் அநேகன் இறைவனடி வாழ்க!'

எனும் சிவபுராண வரிகளை வைத்து இருக்கிறார் இளையராஜா! இந்தப் பாடலை இரண்டாவது பாடலாக வைத்து இருக்கிறார். அடுத்தப் பாடலும் மிக அருமையான பாடல்.

மாணிக்கவாசகர் மதுரையில் நடந்து செல்கிறார். ஆங்காங்கு பெண்கள் மர நிழல்களில், வீடுகளில், முற்றங்களில், ஊஞ்சல்களில், அமர்ந்தவாறும், நின்றவாறும் பாடிக் கொண்டு இருக்கிறார்கள். இளம் சிறுவர்கள் ஆங்காங்கு ஓடித் திரிகிறார்கள். கிளிகள் கொஞ்சுகின்றன. சோலையில் குயில்கள் கூவுகின்றன. தும்பிகள், வண்டுகள் ரீங்காரம் செய்து பாடிக் கொண்டு பறக்கின்றன. அது அரச வண்டு. அந்த வண்டைப் பார்த்துச் சொல்கிறார். 'ஏன் இப்படிப் பாடித் திரிகிறீர்கள்? இறைவனின் காலடியில் போய்ப் பாடுங்கள்' என்று சொல்வதற்காக,

'தினைத்தனை உள்ளதோர் பூவினில்தேன் உண்ணாதே
நினைத்தொறும், காண்டொறும் பேசுந்தொறும் எப்போதும்

அனைத்தெலும்பும் உள்நெக ஆனந்தத்தேன் சொரியும்
குனிப்புடையானுக்கே சென்றூதாய் கோத்தும்பீ'

எனப் பாடுகிறார். இதுதான் அவர் அமைத்து இருக்கின்ற பாடல். அதற்கு அடுத்து எங்கே வருகிறார்? 'பிடித்தப் பத்து' பாடலை எடுத்து ஆள்கிறார் இளையராஜா!

இதோ அந்தப் பாடல்:

"அம்மையே! அப்பா! ஒப்பிலா மணியே!
அன்பினில் விளைந்தஆ ரமுதே!
பொய்ம்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்கும்
புழுத்தலைப் புலையனேன் தனக்குச்
செம்மையே ஆய சிவபதம் அளித்த
செல்வமே சிவபெரு மானே
இம்மையே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே."

ஆக, பிடித்தப் பத்தில் இந்தப் பாடலைச் சொன்னார். அவன்தான் தமிழன்!

இந்த அரங்கத்தில் நிகழ்ச்சிகள் நடக்கின்றபோது ஒரு நடனக் காட்சியை அமைத்து இருந்தார்கள். நடனத்தைப் பற்றிப் பாரதியார் சொல்லுவார். 'எங்களிடமா இசை இல்லை? எங்கள் சுண்ணம் இடிக்கிற பெண்களின் இசைக்கு நிகர் உலகில் எங்கே இருக்கிறது? என்று சொன்னார் பாரதியார். அதுதான் திருப்பொற் சுண்ணம். பெண்கள் சுண்ணம் இடிக்கிறார்கள். சுண்ணம் இடிக்கிறபோது, உலக்கையை எடுத்து இங்கே நங்கைகள் இடித்துப் பாடினார்கள். உலக்கையைக் குத்துகிறபோது, சத்தத்தோடு அந்தப் பாடல் வெளி வரும்.

"முத்தணி கொங்கைகள் ஆட ஆட
மொய்குழல் வண்டினம் ஆட ஆடச்
சித்தஞ் சிவனொடும் ஆட ஆடச்
செங்கயற் கண்பனி ஆட ஆடப்
பித்தெம் பிரானொடும் ஆட ஆடப்
பிறவி பிறரொடும் ஆட ஆட
அத்தன் கருணை யொடு ஆட ஆட
ஆடப் பொற் சுண்ணம் இடித்து நாமே"

இந்தப் பாட்டை ஐந்தாவது பாடலாக வைத்துவிட்டு, கடைசியாக என்ன

வைக்கிறார்? அவர்தான் இளையராஜா! எவருக்கும் அஞ்சமாட்டோம். எதற்கும் அஞ்சமாட்டோம். கூற்றுவனே வந்தாலும் அஞ்சமாட்டோம். ஏன் மாணிக்கவாசகர் எழுதினார்? நாவுக்கரசருடைய கருத்து அவர் மனதிலே இருக்கிறது. பல்லவ நாட்டுச் சக்கரவர்த்தியின் மண்டபத்தில், 'யானையின் காலில் இட்டு உன் தலையை இடறச் செய்வோம்' என்றபோதும், சுண்ணாம்புக் காளவாயில் போட்டு உயிரைப் போக்குவோம் என்றபோதும், கல்லைக் கட்டிக் கடலில் தூக்கி எறிவோம் என்றபோதும், கொல்வோம் என்று மன்னன் முடிவெடுத்தபோதும்,

'நாமார்க்கும் குடியல்லோம்
நமனை அஞ்சோம்
நரகத்தில் இடர்ப்படோம்
நடலையல்லோம் –ஏமாப்போம் – பிணி அறியோம்!'

என்று முழங்கினாரே நாவுக்கரசர் பெருமான்! அதே பாடலை இங்கே மாணிக்கவாசகர் அச்சப்பத்துக்குக் கொண்டு வருகிறார்.

இளையராஜாவும் ஏறக்குறைய அப்படித்தான். எவருக்கும் தலைவணங்க மாட்டார். புகழ்ச்சிக்கும் மயங்க மாட்டார். புகழ் பலரை வீழ்த்திவிடும். பலரை வீழ்த்தி இருக்கிறது. புகழால் வீழ்த்த முடியாதவர்கள்தான் உலகில் உயர்ந்து இருக்கிறார்கள். அப்படிப்பட்ட ஒரு மாமனிதன் எங்கள் தமிழன் - எங்கள் தென்னாட்டுத் தமிழன். அதனால்தான் அச்சப்பத்தில் மாணிக்கவாசகர் சொல்கிறார். இதோ அந்தப் பாடல்.

"புற்றில்வாள் அரவும் அஞ்சேன்
பொய்யர்தம் மெய்யும் அஞ்சேன்
கற்றைவார் சடைஎம் அண்ணல்
கண்ணுதல் பாதம் நண்ணி
மற்றுமோர் தெய்வந் தன்னை
உண்டென நினைந்தெம் பெம்மான்
கற்றிலா தவரைக் கண்டால்
அம்மநாம் அஞ்சு மாறே."

நெருப்பை உமிழ்கின்ற வேங்கைக்கும் அஞ்சமாட்டேன். கட்டுத்தறியை உடைத்து வருகின்ற யானைக்கும் அஞ்சமாட்டேன். வளைவு இல்லாமல் நேராகப் பாய்ந்து வருகின்ற அம்புக்கும் அஞ்சமாட்டேன், கூற்றுவன் சீற்றம் அஞ்சேன், உயிர் முடிக்கும் எமனுக்கும் அஞ்சமாட்டேன்.

இதுதான் அவர் நிறைவாக வைத்த பாடல்! இந்த ஆறு பாடல்களோடு நம்முடைய தமிழ் இசையைக் கொண்டு மேற்கத்திய இசைக்கருவிகளோடு, டான்யூப் நதிக்கரையில், அங்கேரி நாட்டின் தலைநகர் புடாபெஸ்ட் நகரத்தில், இசைக்கலைஞர்களோடு - இசைக்கருவிகளோடு ஒலி வடிவங்களை இணைத்து, உலகின் தொன்மையான இசையை இந்த உலகத்தின் எட்டுத் திசைகளுக்கும் கொண்டு போய்ச் சேர்த்து இருக்கிறீர்கள். இதைக் கேட்கக் கேட்க, அவர்களின் நெஞ்சம் கவரக் கவர எவரும் செய்யாத ஒரு பணியைச் செய்து இருக்கிறீர்கள்.

நான் பாராட்ட விரும்புவது ஒரு தாய் பிள்ளையைப் பாராட்டுவதைப் போல. தமிழகமே தாயாகி விட்டது என்று சொன்னார்களே! ஆனால், யார் இவரைப் பாராட்டுகிறார்கள் என்று தெரியுமா? ஸ்டீபன் ஸ்வார்ட்ஸ் **(STEPHEN SCHWARTZ)** ஹாலிவுட் திரைப்படங்களில் ஆஸ்கார் விருதுபெற்ற இசை அமைப்பாளர். அவர் இளையராஜாவைப் பாராட்டி எழுதுகிறார்.

Last night at Sony Studios in New york City, I had the pleasure of hearing the almost finished mix of Ilaiyaraja's amazing work. நான் நேற்று இரவு நியூயார்க் நகரத்தின் சோனி ஸ்டுடியோவில் அநேகமாக முற்றுப் பெற்றுவிட்ட, இளையராஜா அவர்களின் அற்புதமான இசை ஆல்பத்தைச் செவி கொடுத்துக் கேட்கின்ற மகிழ்ச்சியைப் பெற்றேன்.

It is unlike anything I have ever heard before a stunning blend of Indian and western music and instruments. I asked Mr. Raja, if this was something different for him too, and he said he had never done anything like this piece before. I don't know if anyone has! இதுவரை இப்படி உலகில் எவரும் படைத்தது இல்லை என்று ஆஸ்கார் பரிசு பெற்ற ஹாலிவுட்டில் இருக்கின்ற இசை மேதை சொல்லி இருக்கிறார். இப்படிப்பட்ட பாராட்டைப் பெற்ற நீங்கள் திருவாசகத்துக்கு சிம்பொனி ஆரடோரியோ இசை அமைத்து இருக்கிறீர்கள்.

காற்றில் கலந்த ஒலி

தமிழ் இசை, சாதி, மத எல்லைகளைக் கடந்து இருக்கின்றது. கத்தோலிக்கப் பாதிரிமார்களும், திருச்சபை பாதிரிமார்களும், தமிழுக்குத் தொண்டு செய்தார்கள். திருவாசகத்தின் பெருமையை இசையாகத் தருகிறோம். எல்லைகளைக் கடந்து 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்று உலகத்துக்கு ஒரு காலத்தில் கொள்கையைத் தந்தோமே, நம்முடைய நாகரிகத்தை, நம்முடைய இசைக்கலையை உலகுக்குத் தருகின்ற இந்தப் பெருமை இன்னும் ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளுக்கு நிற்கும். காற்றில் ஒலி அலைகள் இருக்கின்ற வரையில் மாணிக்காவாசகரின் திருவாசகம் இருக்கும். ஒலி

அலைகள் இருக்கின்ற வரையில் இளையராஜாவின் படைப்புகள் இருக்கும்.

இந்த ஒலி நாடாவை முறையாக விலை கொடுத்து வாங்கிக் கேளுங்கள். அதில் இவர் சொல்லுகிறார். ஒரே ஒரு இடத்தில்தான் அவர் பேச்சு வருகிறது. முதல் ஐந்து பாடல்களைப் பதிவு செய்து முடித்தபிறகு, இளையராஜா ராக ஆலாபனை செய்கிறார். அந்த ஆலாபனை செய்கிறபோது, இசைக்கருவிகளில் இசை வருகிறது. 'அடடா இதுதான் சிம்பொனி ஆர்கெஸ்ட்ராவா? எவ்வளவு அருமையாக இருக்கிறது! இதில் மாணிக்கவாசகர் பாடலைப் பாடினால் எவ்வளவு நன்றாக இருக்கும்? இதற்கு எந்தப் பாட்டு சரியாக வரும்? முத்திநெறி அறியாத மூர்க்கரோடு முயல்வேனா? என்று சொல்லிவிட்டு, இது வார்த்தை பிரிக்கப் பிரிக்க வருகிறதே! இதற்கு என்ன டியூன் போடுவது? என்று சொல்லியவாறு,

'புற்றில்வாழ் அரவும் அஞ்சேன்
பொய்யர்தம் மெய்யும் அஞ்சேன்'

என்ற அந்த பாட்டைப் போட்டுவிட்டு, கடைசியாக 'வாதவூர் அடிகள் வாழ்க! வாழ்த்து உரைக்கும் அடியார் வாழ்க! என முடிக்கிறார்.

இங்கே அற்புதமாகப் பாடிய கல்லூரி நங்கைகள் அதைப் பாடலில் சேர்த்து இருந்தார்கள். வாதவூர் அடிகள் திருவாசகத்தின் மூலமாகத் தமிழ் இருக்கும் வரை வாழ்வார். எங்கள் இளையராஜா இந்த இசைப் படைப்பால் வாழ்வார். தமிழகம் அவருக்கு நன்றிக் கடன் பட்டு இருக்கிறது.

இயற்கைத் தாய் உங்களுக்கு நூறு ஆண்டுகளுக்கு மேலும் வாழுகின்ற ஆற்றலையும், உடல் நலத்தையும் கொடுத்து, இந்தத் தமிழகத்துக்கும், தமிழ் இசைக்கும் நீங்கள் பெரும் சேவை செய்ய வேண்டும் என்று சொல்லி, எளியேனாகிய எனக்கு இந்த அருமையான வாய்ப்பைத் தந்த உங்களுக்கு எந்நாளும் மறவாத நன்றியைக் கூறி விடைபெறுகிறேன்.

(30.6.2005 அன்று சென்னை மியூசிக் அகடமி அரங்கில் நடைபெற்ற "திருவாசகம் Oratorio" - இளையராஜாவின் சிம்.ஃபொனி இசைத் தொகுப்பு வெளியீட்டு விழாவில் வைகோ ஆற்றிய உரை)இந்த சிம்பொனி ஆரடோரியாவில் வழங்கிய அந்த வரிகளையே நன்றியாக ஆக்கிக் கூறுவதே பொருத்தமானது எனக் கருதுகிறேன்.

பொல்லா வினையேன்
நின் பெருஞ்சீர்
புகழுமாறு ஒன்றறியேன்!

பொய்யாயின வெல்லாம் போயகல வந்தருளி
மெய்ஞான மாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே!
நின் பெருஞ் சீர் புகழுமாறு ஒன்றறியேன்

என்று மாணிக்கவாசகராகவே மாறி, இறை உணர்வோடு ஒன்றிப் போய்த் தன்னையே மானசீகமாகக் கருதி இளையராஜா பாடுகிறார். தமிழ் இசையாலும், தமிழ்ப் பண்ணாலும் எண்ணிப் பார்க்க முடியாத சாதனைகளைப் படைக்கின்ற ஒரு மாமேதை, முல்லை ஆற்றங்கரையில், இந்தக் கிராமத்தில் பிறப்பார் என்றுதான், அந்தக் கிராமம் தனக்குப் 'பண்ணைப்புரம்' என்று பெயர் சூட்டிக் கொண்டது.

தாயின் அன்பான அரவணைப்பில் வளர்ந்து, அண்ணன் பாவலர் வரதராஜன் பராமரிப்பில் பயின்று, ஏகலைவன் வில்வித்தை கற்றுக் கொண்டதைப்போலத் தானே இசைக் கருவியோடு ஆற்றலை வளர்த்துக் கொண்டு, திரை உலகில் அடி எடுத்து வைத்து, முதல் படைப்பிலேயே எவரெஸ்ட் சிகரமாக உயர்ந்துவிட்ட இளையராஜா அவர்களின் பெருமையைப் பாராட்டுகின்ற விழா இது!என் வாழ்நாளில் மறக்கமுடியாத இந்த வாய்ப்பைத் தந்து இருக்கின்ற இளையராஜா அவர்களுக்கும், அதே சொற்களை நன்றியாகத் தெரிவிக்கிறேன்.

இன்பச் சிலிர்ப்பு

நெருக்கடி நிலை காலத்தில், பாளையங்கோட்டை சிறைச்சாலையின் உயர்ந்த மதில் சுவர்களுக்கு உள்ளே பல மாதங்கள் நான் அடைபட்டுக் கிடந்த 1976 ஆம் ஆண்டில், காற்றின் அலைகளோடு தவழ்ந்து வந்த ஒரு பாடல் என் செவிகளில் மோதியபோது, என் உடலில் இன்பச் சிலிர்ப்பும், பரவசமும் ஏற்பட்டது.

ஒவ்வொரு நாளும் காலைப் பொழுதிலும், மாலையில் பறவைகள் மரங்களைத் தேடி ஓடுகிற வேளையிலும், அந்தத் திரை இசைப்பாடல் தொலைவில் இருந்து வர வர, இந்தப் பாடலைத் தந்தவர் யார்? இசை அமைத்தவர் யார்? கிராமத்து மணம் கமழுகின்ற இந்த இசை எங்கோ வயல் வெளிகளில் ஒலித்தத் தெம்மாங்குச் சத்தம் போல் கேட்கிறதே, நம் இதயத்தை ஊடுருவுகிறதே என்று நான் திகைத்தேன்.

அந்தப் பாடல்தான் 'மச்சானைப் பாத்தீங்களா? மலை வாழைத் தோப்புக்குள்ளே' எனும் பாடல்! 'அன்னக்கிளி' படத்தின் பாடல்களில் தன்னைக் கால் பதித்துக் கொண்ட இளையராஜா அவர்களின் பரம இரசிகனாகிவிட்ட நான் அவரை விட்டுப் பிரிந்ததே இல்லை.

ஆம்! மோனமான இரவுகளில், நெடுந்தொலைவுக் கார் பயணங்களில்

இரவிலும், பகலிலும் நான் விரும்பிக் கேட்கக்கூடிய திரை இசைப் பாடல்களில் என்றைக்கும் நான் மறக்க முடியாத பாடல்களை இசை அமைத்துத் தந்தவர் அல்லவா? காதல் ஓவியம், அலைகள் ஓய்வதில்லை, கடலோரக் கவிதைகள், 16 வயதினிலே, முதல் மரியாதை, முள்ளும் மலரும், ஆறிலிருந்து அறுபது வரை, நாயகன், மூன்றாம் பிறை, கேளடி கண்மணி, கவிக்குயில், இராஜபார்வை, கரகாட்டக்காரன், சின்னக்கவுண்டர், சின்னத்தம்பி, நீங்கள் கேட்டவை, சிந்து பைரவி, இளமை ஊஞ்சலாடுகிறது, பயணங்கள் முடிவதில்லை, உதயகீதம் என்று வரிசையாகச் சொல்லிக் கொண்டே போகலாம்.

840 திரைப் படங்களுக்கும் மேல் இசை அமைத்து இருக்கிறார். காலத்தை வென்று இருக்கக்கூடிய பாடல்களாகவே அமைத்து இருக்கிறார். அது மின்மினியைப் போல் மறைகின்ற பாடல்கள் அல்ல. இன்னும் நூறு, நூறு ஆண்டுகளுக்கு ஒலிக்கின்ற சாதகப் பறவைகளின் கானங்கள்தான் அவை.

1993 - ஆம் ஆண்டு இலண்டன் நகரத்தில் 'Royal Philharmonic Orchestra' குழுவினரின் இசைக் கருவிகளுக்கு நடுவில், நம்முடைய இளையராஜா அவர்கள் சிம்பொனி இசை அமைக்கிறார் என்ற செய்தி, மேற்கு உலகத்தைத் திடுக்கிடச் செய்தது. ஐரோப்பாக் கண்டமே அவரை உற்றுப் பார்த்தது.

இது அவ்வளவு எளிதான ஒன்று அல்ல. அவர் போற்றுகின்ற 'வான் லுட்விக் பீத்தோவன்' ஜெர்மனியில் பிறந்த அந்த மகா இசை மேதை, ஒன்பது சிம்பொனி அமைத்து இருக்கின்றார். அந்தப் பீத்தோவனைச் சின்னஞ்சிறு வயதில் பார்த்த மொஸார்ட், 'Watch this young fellow, he is going to create a stir in the musical world' 'இந்த இளைஞனைப் பார், இவன் சங்கீத உலகத்தில் பெரும் கிளர்ச்சியை ஏற்படுத்தப் போகிறான்' என்று மொஸார்ட் பாராட்டினார்.

அந்தப் பீத்தோவன், 'HEROICA' 'இரோய்க்கா' என்கின்ற அவரது மூன்றாவது சிம்பொனியை, நெப்போலியனின் படையெடுப்புகளில் அவனது போர் வெற்றிகளைக் குறித்த சிம்பொனியாக, போர்க்களங்களில் வெற்றியை ஈட்டியதால் அந்த வெற்றிகளுக்கு, வீரத்துக்கு இலக்கணமான நெப்போலியனுக்கு அர்ப்பணிக்கிறேன்' என்று சொன்னார். ஆனால், அதே நெப்போலியன் தனக்குத்தானே முடிசூட்டிக் கொண்டு, தான்தான் பிரெஞ்சுப் பேரரசின் சக்கரவர்த்தி என்று அறிவித்தபோது, கொஞ்சம் கூட அச்சம் இன்றி, He did tore that dedication அந்த அர்ப்பணிப்புத் தாளைக் கிழிந்து எறிந்து நான் எதிர்க்கிறேன்' என்று சொன்னார் பீத்தோவன்.

அத்தகைய உணர்வு பெற்ற அவர், கொஞ்சம் கொஞ்சமாகச் செவிப்புலனை இழந்து, கேட்கின்ற வலிமை இழந்து, அடுத்தவர்கள் பேசுவதும் கேட்காத

வேளையில், எட்டாவது, ஒன்பதாவது சிம்பொனி அமைத்தபோது அந்தக் கருவிகளின் இசை பரவுகிறபோது, இங்கே திரண்டு இருப்பதைப்போல அங்கே திரண்டு இருந்த பல்லாயிரக்கணக்கான மக்கள் எழுந்து நின்று கையொலி எழுப்பியபோது, அந்தப் பாராட்டு ஒலிகள் அவரின் காதுகளில் விழாததால், அவருடைய இசைக் கருவியின் மீது விழுந்து கண்ணீர் விட்டார். அந்தப் பீத்தோவன் படைத்த சாதனையை நம்முடைய இளையராஜா படைத்து இருக்கிறார்.

இசையின் பிறப்பிடம்

நான் நாடாளுமன்ற மாநிலங்கள் அவையில் சொன்னேன். இந்த நாட்டின் கவனத்துக்கு வராமல் போன காரணத்தினால் சொன்னேன். 'ஒரு கொரியாக்காரன் சாதிக்காததை, சீனாக்காரன் சாதிக்காததை, ஜப்பான்காரன் சாதிக்காததை, ஓர் இந்தியன் - ஒரு தமிழன் - ஒரு தென்னாட்டுத் தமிழன் எங்கள் பண்ணைப்புரத்து இளையராஜா சாதித்து இருக்கிறார்' என்று சொன்னேன்.

இளையராஜாவுக்கு ஆற்றல் எங்கிருந்து வந்தது? ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளாக உலகத்தில் தோன்றிய முதல் இசை - தமிழ் இசை என்ற காரணத்தினால், தடைகளை உடைத்து எறிந்து கொண்டு, அந்தத் தென்னாட்டுத் தமிழன் இசையைப் படைத்து இருக்கின்றார்.

இசை எங்கே இருந்து வந்தது? சாம வேதத்தில் இருந்து வந்தது அல்ல. 'ச ரி க ம ப த நி' என்றார்கள். சட்சமம், ரிஷிபம், காந்தாரம், மத்திமம், பஞ்சமம், தைவதம், நிசாதம் - ச ரி க ம ப த நி' என்று சொன்னார்கள்.

அதற்கு முன்பே இளங்கோ அடிகள்,

குடமுதல் இடமுறையா, குரல், துத்தம், கைக்கிளை,

உழை, இளி, விளரி, தாரம் என

விரிதரு பூங்குழல் விளங்கிய பெயரே

என்று பாடி இருக்கிறார்.

இங்கே பல நாடுகளுக்குப் போய் வந்தவர்கள் இருக்கின்றீர்கள். மதிப்புக்கு உரிய ராம் அவர்கள் இருக்கிறார்கள். உலகத்தின் பழமையான நாகரிகத்தை அடையாளம் காட்டிக் கொள்கிற ஈமக் கோபுரங்கள், மன்னர்கள் இறந்ததற்குப் பிறகு அவர்களின் உடல்களை அடக்கம் செய்து வைத்து இருக்கிறார்களே பிரமிடுகள், அந்த எகிப்தியப் பிரமிடுகளில் யாழ் கருவியின் தோற்றம் வடிவு அமைக்கப்பட்டு இருக்கின்றது. அங்கே 'யாழ்' என்கின்ற கருவி இருந்தது. 3,500 ஆண்டுகளுக்கு முற்பட்ட அந்த யாழ் இசைக் கருவி, இலண்டன்

நகரத்தின் அருங்காட்சி அகத்தில் வைக்கப்பட்டு இருக்கின்றது.

அதைப்போலவே மெசபடோமியாவில் 5,000 ஆண்டுகளுக்கு முன்னால் இருந்த சுமேரிய நாகரிகம் பழமையான நாகரிகம். அங்கே இருந்த யாழ் இசைக்கருவி ஒன்று பாக்தாத் நகரத்தின் அருங்காட்சி அகத்தில் வைக்கப்பட்டு இருக்கின்றது.

''ஓர் இசைக்கருவியில் ஏழு சுரங்கள் வருகின்றன. ஏழு நரம்புகளைக் கொண்ட யாழ் இருந்தது'' என்று **'இட்ச்சு சுவான்'** என்கின்ற, கி.மு. 522-ஆம் ஆண்டு எழுதப்பட்ட ஒரு சீன இசை நூல் தெரிவிக்கிறது.

கிரேக்கத்தின் ஹோமர், யாழின் திறமையை - நரம்புக் கருவிகளின் திறமையைச் சொல்கிறார்.

அருமைச் சகோதரர்களே, மொஹஞ்சதாரோ, ஹரப்பாவில் நடந்த அகழ்வுகளைப் பற்றி ஈராஸ் பாதிரியார் குறிப்பிட்டு இருக்கின்றார். ''இங்கே யாழ் என்கின்ற அந்த இசைக்கருவியின் முத்திரை கிடைத்து இருக்கின்றது. இது பூர்வீகத் தமிழர்கள் - ஆதித் தமிழர்கள் பயன்படுத்திய கருவி'' என்று குறிப்பிட்டார்.

ஏழாயிரம் ஆண்டுகளுக்கு முன்னால் இருந்த **'பெருநாரை, பெருங்குருகு'** என்கின்ற இசை நூல்கள் தெரிவிக்கின்றன. இது ஒன்றும் கற்பனை அல்ல - கட்டுக்கதை அல்ல. லெமூரியாக் கண்டத்தில் - தென் மதுரையில் இசைக் கருவிகள் இருந்தன என்பதை, தஞ்சை ஆபிரகாம் பண்டிதர் 'கருணாமிர்த சாகரம்' என்னும் 1376 பக்கங்கள் கொண்ட தமது நூலில் - இருபதாம் நூற்றாண்டில் வந்த முதல் ஆராய்ச்சி நூலில் - 1917-ஆம் ஆண்டு வெளியிட்ட அந்த நூலில் யாழின் பெருமைகளைக் குறிப்பிடுகின்றார்.

விபுலானந்த அடிகள் எழுதிய 'யாழ் நூலில்' குறிப்பிடுகின்றார். 14 வகையான யாழ்கள் தமிழர்களிடம் 7,000 ஆண்டுகளுக்கு முன்னால் இருந்தன. 'பேரியாழ்' என்ற ஆயிரம் நரம்புகளைக் கொண்ட ஒரு யாழ் இருந்தது. உலகில் எந்த நாட்டிலும், எந்தக் காலத்திலும் இல்லாதது - தென்மதுரையில் இருந்தது. அது அழிந்துவிட்டது கடலிலே!

அதற்குப்பிறகு,

19 நரம்புகளைக் கொண்ட **'மகரயாழ்'**,
14 நரம்புகளைக் கொண்ட **'சகோடயாழ்'**,
7 நரம்புகளைக் கொண்ட **'செங்கோட்டி யாழ்'**,
100 நரம்புகளைக் கொண்ட **'கீசக யாழ்'**,
'நாரத யாழ்', 'தும்புரு யாழ்', 'மருத்துவ யாழ்',
'மகதி யாழ்', 'கச்சவி யாழ்', 'திருக்குச்சிகை யாழ்',

'வராளி யாழ்', 'வல்லிகி யாழ்', 'வில் யாழ்'

என்கின்ற பதினாறு வகையான யாழ்கள் இருந்தன என்று குறிப்பிடுகின்றார். எனவே, இசை இங்கே பிறந்தது. இந்தத் தென்னாட்டில் பிறந்தது இசை. இசையின் வடிவில் இறைவனைக் கண்டார்கள்.

நான் விருப்பு, வெறுப்புகளுக்கு அப்பாற்பட்டு ஒரு பார்வையாளராக, ஓர் இரசிகனாக, இசையில் புலமை பெற்றவனாக அல்ல - ஒரு தமிழ்ப் பற்றாளன் என்கின்ற முறையில் அதைப் பார்க்கிறேன். தேவார மூவர்கள் அதைத்தான் சொன்னார்கள்.

'ஏழிசையாய், இசைப்பயனாய், என்னுடைய தோழனுமாய்'

என்று சுந்தரமூர்த்தி நாயனார் இறைவனைப் பற்றிச் சொன்னார்.

அதே உணர்வில், **'ஓசை, ஒலி எல்லாம் ஆனாய் நீயே'** என்று நாவுக்கரசராம் அப்பர் அடிகள் சொன்னார்கள்.

'பதம் ஏழும் பண்ணும் உருதாளத்து ஒலி பலவும் நின்றான் இறைவன்' என்று திருஞான சம்பந்தர் சொன்னார்.

இதைத்தான் கத்தோலிக்கத் திருச்சபையினர், தென்இந்திய கிறித்துவ மார்க்கத்தின் திருச்சபையினர் இங்கே வந்து இருக்கின்றார்களே, அவர்கள் போற்றுகின்ற விவிலியத்தில், புதிய ஏற்பாட்டில், யோவான் சுவிஷேசத்தில், அந்த அதிகாரத்தின் முதல் வசனம் -

'ஆதியில் வார்த்தை இருந்தது. அந்த வார்த்தை தேவனிடத்தில் இருந்தது. அந்த வார்த்தை தேவனாகவே இருந்தது'

எனக் கூறுகிறது. அதைத்தான் சங்கீதத்தில் 122-ஆவது அதிகாரத்தின் மூன்றாவது வசனத்தில் "எருசலேம் இசைவிணைப்பான நகரமாகக் கட்டப்பட்டு இருந்தது" எனக் கூறுகிறது. தாவீதின் சங்கீதங்கள் யூதர்களுக்கும், கிறித்தவர்களுக்கும் மகிழ்ச்சி ஊட்டுகின்ற சங்கீதங்கள், கிறித்து மார்க்கத் துறவிகளின் உள்ளத்தைக் கவர்ந்த காரணத்தினால் திருவாசகத்தைத் தந்த மாணிக்கவாசகரை அவர்கள் ஏற்றுக் கொண்டார்கள்.

ஆம். இந்தத் திருவாசகம் எப்படி வந்தது?

பன்னிரு திருமுறைகள்

தமிழில், சைவ இலக்கியத்தில் பன்னிரு திருமுறைகள் உண்டு. பன்னிரு திருமுறைகளுள் முதல் ஏழு திருமுறைகள் திருநாவுக்கரசரும், திருஞான சம்பந்தரும், சுந்தரமூர்த்தி நாயனாரும் தந்தவை.

எட்டாவது திருமுறை மாணிக்கவாசகரின் திருவாசகம் - முதல் பகுதி திருவாசகம்; இரண்டாம் பகுதி 'திருக்கோவையார்!'

ஒன்பதாவது திருமுறை ஒன்பது அடியார்கள் தந்த திருமுறைகள். திருமாளிகைத் தேவர், கருவூர்த் தேவர், சேந்தனார், சேதுராயர், கண்டராதித்தர், பூந்துருத்திக் காடநம்பி, புருடோத்தம நம்பி, திருவாழிய அமுதனார், வேணாட்டு அடிகள் ஆகிய ஒன்பது அடியார்கள் தீட்டியதுதான் ஒன்பதாம் திருமுறை.

பத்தாம் திருமுறை திருமூலர் தந்த 'திருமந்திரம்.'

11-ஆம் திருமுறை காரைக்கால் அம்மையார், நக்கீர தேவ நாயனார், கபிலதேவ நாயனார், பரணதேவ நாயனார், கோன் நாயனார், சேரமான் பெருமாள் நாயனார், பட்டினத்துப் பிள்ளையார், நம்பியாண்டார் நம்பி இவர்கள் தந்தவை.

12-ஆம் திருமுறை சேக்கிழார் தந்த'பெரியபுராணம்'.

இந்தப் பன்னிரெண்டு திருமுறைகளின் அடிப்படையும் 'நமசிவாய' என்ற ஐந்து எழுத்துதான். இந்த 'நமசிவாய' என்ற ஐந்து எழுத்தை வைத்துத்தான் சிவபுராணத்தைத் தொடங்குகிறார் மாணிக்கவாசகர். திருவாசகத்தைப் பற்றி வடலூர் வள்ளலார் அருட்பெருஞ்சோதி தனிப்பெருங்கருணை இராமலிங்க அடிகளார் கூறும்போது,

'வான் கலந்த மாணிக்கவாசக நின்வாசகத்தை
நான்கலந்து பாடுங்கால் நற்கருப்பஞ்சாற்றினிலே
தேன்கலந்து பால்கலந்து செழுங்கனித் தீஞ்சுவைகலந்து
ஊன்கலந்து உயிர்கலந்து உவட்டாமல் இனிப்பதுவே'

— எனப் பாடியதோடு,

'வாட்டமிலா மாணிக்கவாசகரின் வாசகத்தைக்
கேட்டபோது, அங்கிருந்த கீழ்ப்பறவைச்சாதிகளும்
வேட்டமுறும் பொல்லா விலங்குகளும் மெஞ்ஞான
நாட்டமுறும் என்னில் இங்கு நானடைதல் வியப்பு அன்றே'

- என்றும் பாடினார்.

வடலூர் வள்ளலாரின் உள்ளத்தில் மாணிக்கவாசகர் திருவாசகம் இடம் பெற்றதைப்போல, இங்கிலாந்து நாட்டில் இருந்து வந்த ஜி.யு.போப் உள்ளத்திலும் இடம் பெற்றார். 1837-இல் தொடங்கி, 63 ஆண்டுகள் அவர் தமிழ் படித்தார். அவர் திருவாசகத்தில் உருகிப் போனார். பின்னர், இலண்டனில் ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகத்தில் பாலியால் கல்லூரியில்

தமிழ்த் துறைத் தலைவர் ஆனார்.

அந்தக் கல்லூரியின் தலைவர் பெஞ்சமின் ஜோவர்ட் என்பவரோடு ஒரு நிலா வெளிச்சத்தில் நடந்து போகிறபோது, 'தமிழில் இருக்கின்ற திருவாசகத்தைப் போன்றதொரு நூலை உலகில் இதுவரை நான் படித்தது இல்லை' என்று அவர் சொன்னபோது, 'அதனை மொழிபெயர்க்கலாமே' என்று அந்தப் பல்கலைக்கழகத்தின் தலைவர் கூறினார்.

'எனக்கு முதுமை வந்துவிட்டது. அதை மொழிபெயர்க்கும் ஆற்றல் இல்லை' என்று போப் சொன்னபோது, **'To have a fine work in progress is the way to live long, you will live till you finish it'** ஒரு நல்ல செயலுக்காகப் பெரிய பணியில் முன்னேறிச் செல்வது நீண்ட காலத்துக்கு வாழ வழி வகுக்கும். இதை முடிக்கும் வரை நீ உயிரோடு இருப்பாய்' என்று பெஞ்சமின் ஜோவர்ட் சொன்னார். 1900 ஆம் ஆண்டு ஏப்ரல் 20 ஆம் நாள் அவருடைய மொழிபெயர்ப்பு வெளியாயிற்று. திருவாசகத்துக்குப் பலர் உரை தீட்டி இருக்கின்றார்கள். காலத்தின் அருமை கருதி நான் விரிவாகச் செல்ல விரும்பவில்லை.

திருவாசகம் 51 தலைப்புகளைக் கொண்டது. 656 அல்லது 658 பாடல்கள் என்று சொல்வார்கள். இந்த 51 தலைப்புகளில் பத்துப் பத்துப்பாட்டாக 19 பத்துகள் இருக்கின்றன. ஓர் அதிகாரத்துக்குக் குறள்கள் பத்து, மோசசின் கட்டளைகள் பத்து, சங்க இலக்கியங்களில், பத்துப்பாட்டு என்பது ''முல்லைப்பாட்டு, குறிஞ்சிப்பாட்டு, திருமுருகாற்றுப்படை, பொருநர் ஆற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை, பட்டினப்பாலை, நெடுநல்வாடை, மதுரைக்காஞ்சி, மலைபடுகடாம்'' என்று பத்து நூல்கள் உள்ளன. அதைப்போலத்தான் திருவாசகத்தில் 51 தலைப்புகளில் 19 பத்துகள் இருக்கின்றன.

அச்சப் பத்து	**அடைக்கலப்பத்து**	**அருள்பத்து**
அதிசயப் பத்து	**அற்புதப் பத்து**	**அன்னைப் பத்து**
ஆசைப் பத்து	**உயிருண்ணிப் பத்து**	**கண்ட பத்து**
குயில் பத்து	**குலாப் பத்து**	**குழைத்த பத்து**
செத்திலாப் பத்து	**சென்னிப் பத்து**	**பிடித்த பத்து**
பிரார்த்தனைப் பத்து	**புணர்ச்சிப் பத்து**	**யாத்திரைப் பத்து**
	வாழாப் பத்து.	

(கைதட்டல்)

இந்தப் பத்தில் இளையராஜா எதைப்பற்றிக் கொண்டார் தெரியுமா? இவர்

மூன்று பத்தைப் பற்றிக் கொண்டார்.

இந்தப் பத்தொன்பது பத்துகளில் நமது இளையராஜா மூன்று பத்துகளுக்கு இசை அமைத்து இருக்கிறார். ஒன்று 'யாத்திரைப் பத்து'. அடுத்த பத்து என்ன தெரியுமா? (வைகோ திரும்பிப் பார்க்கிறார். இளையராஜா 'குயில் பத்து' என்கிறார். வைகோ; இல்லை. 'பிடித்த பத்து' என்று கூறுகிறார்.) நீங்கள் திருவாசகத்தில் உருகி ஐக்கியமாகி விட்டீர்கள். அதனால் அப்படிச் சொன்னீர்கள். நான் வெளியில் இருந்து பார்ப்பவன். நீங்கள் இசையமைத்த பாடல் 'பிடித்த பத்து'. அடுத்த பத்து "அச்சப்பத்து." அவர் தேர்ந்து எடுத்தது இந்த மூன்று 'பத்தில்' இருந்தும் ஒவ்வொரு பாடலுக்கு இசை அமைத்து உள்ளார். இவையன்றி அவர் சிவபுராணத்தில் இருந்து பாடல் எடுக்கிறார். 'நமசிவாய வாழ்க' என்னும் சொற்றொடர்தான் திருவாசகத்தின் தொடக்கம்!

ஏன் இந்தத் திருவாசகம் இயற்றப்பட்டது? இது பலருக்கும் தெரிந்த கதைதான். பாண்டிய நாட்டு அரசவையில் தென்னவன் பிரமராயன் என்கிற அமைச்சர் இருந்தார். வாதவூரில் பிறந்தவர். அவர்தான் வாதவூர் அடிகள் மாணிக்கவாசகர்! அவர் குதிரை வாங்குவதற்குச் சென்றபோது அரசுப் பணத்தை எல்லாம், அந்தணர் வடிவில் இருந்த சிவனடியாரோடு சேர்ந்து, சிவனுடைய திருப்பணிகளுக்குச் செலவு செய்து அழித்துவிட்ட காரணத்தினால், 'குதிரையோடு ஏன் வரத் தாமதம்?' என்று கோபித்து மன்னன் செய்தி அனுப்பியபோது, வாதவூரார் மனம் கலங்கிய நேரத்தில், இறைவனின் அருள்வாக்குக் கேட்டு, 'குதிரை வரும் என்று நீ ஓலை அனுப்பு. ஓலையை அனுப்பிவிட்டு நீ முன்னால் செல். பின்னால் குதிரைகள் வரும் என்று சொல்' என்ற சொற்களைக் கேட்டார்.

பிட்டுக்கு மண் சுமந்த பெருமான்

மாணிக்கவாசகர் என்ற பெயர் அப்பொழுது இல்லை. அவர் மன்னனிடத்தில் வந்து, 'குதிரைகள் வந்து கொண்டு இருக்கின்றன' என்று சொல்கிறார். குதிரைச் சேவகன் வருகிறான் - சிவன் வருகிறான் குதிரைச் சேவகனாக! நரிகளைக் குதிரைகள் ஆக்கி வருகிறான். குதிரைகள் இலாயத்தில் கட்டப்படுகின்றன.

இரவு நேரத்தில் அந்தக் குதிரைகள் மீண்டும் நரிகளாக மாறித் தளைகளை அறுத்துக் கொண்டு அனைத்தையும் கடித்துப் போட்டுவிட்டு ஓடுகின்றன. ஆத்திரம் அடைந்த மன்னன், வாதவூராரைச் சிறையில் பூட்டுகிறான். சிறையில் கொடுமைகள் நடக்கின்றன. இறைவன் மேலும் திருவிளையாடல் செய்கிறான். வைகையில் தண்ணீர்ப் பெருக்கு எடுக்கிறது. காலங்கெட்ட காலத்தில் வைகையில் தண்ணீரா? கரை உடைத்துப் பாய்கிறதே வெள்ளம்? என்று கவலைப்பட்ட மன்னன், கரையை அடைப்பதற்கு வீட்டுக்கு

ஒவ்வொருவராக வந்து பணியாற்றக் கட்டளை இடுகின்றான்.

பிட்டு வாணிச்சியான வந்தி என்ற செந்தமிழ்ச்செல்விக்கு, அந்தக் கிழவிக்குக் கரையை அடைப்பதற்கு வீட்டில் பிள்ளை ஒருவரும் இல்லை. எனவே, இறைவன் சிறுபிள்ளையாக மாறி, மண்வெட்டியுடனும், கூடையுடனும் ஓடிச்சென்று, 'நான் கரையை அடைக்கிறேன்; என்ன கொடுப்பாய்?' என்று கேட்டான். அதற்கு வந்தி, 'என்னிடம் ஒன்றும் இல்லை. உதிர்ந்த பிட்டு மட்டும்தான் இருக்கிறது' என்று சொல்ல, பிட்டை வாங்கிக் கொண்டு, கரையையும் அடைக்காமல் தண்ணீரில் குதிப்பதும், நீந்துவதும், விளையாடுவதுமாக இருந்தான். சேவகன் அதைக்கண்டு பிரம்பால் அடிக்க, அவன் முதுகில் விழுந்த அடி, அனைவரின் முதுகிலும் விழுந்தது, மன்னர் முதுகிலும் விழுந்தது.

அப்போது வானத்தில் இருந்து எழுந்த ஒலி, 'சிறையில் இருக்கின்ற வாதவூர் அடிகளை விடுவித்திடுக' எனக் கூற, அதன்பிறகு மன்னன் வேதனையுற்று விடுவிக்க, வெளியே வந்த வாதவூர் அடிகள் ஆலவாய்ச் சொக்கர் இடத்தில் அருள்பெற்றுப் புறப்படுகிறார். 'போய் வா! ஒவ்வொரு இடமாக பல்வேறு ஆலயங்களுக்குச் சென்று, உத்திரகோசமங்கை – காளையார் கோவில் சென்று, திருமுதுகுன்றம், திருக்கழுக்குன்றம் எல்லா இடங்களையும் தரிசித்துவிட்டுக் கடைசியில் திருச்சிற்றம்பலத்துக்கு வந்து சேர்வாய்' என அருள்வாக்கு சொன்னபடி சிற்றம்பலத்துக்குப் போனார். அங்கே திருவாசகத்தைப் பாடினார். இதுதான் திருவாசகம் தோன்றுவதற்கான அடிநாதம்.

'நமசிவாய வாழ்க' என்றுதான் முதலில் தொடங்குகிறது. ஆனால், நம்முடைய இளையராஜா அவர்கள் அதை முதலில் வைக்கவில்லை. முதலில் 'யாத்திரைப் பத்து' வைக்கிறார். யாத்திரைப் பத்து என்றால் என்ன? பயணம் புறப்படுவோம் இந்த மண்ணுலகைவிட்டு, இச்சைகளை விட்டு We start the journey என்று சொல்லுகிறவர்கள்...

'பூவார் சென்னி மன்னனெம் புயங்கப்
பெருமான் சிறியோமை
ஓவா துள்ளங் கலந்துணர்வாய் உருக்கும்
வெள்ளக் கருணையினால்
ஆ ஆ என்னப் பட்டன்பாய் ஆட்பட்
டீர்வந் தொருப்படுமின்
போவோம் காலம் வந்ததுகாண் பொய்விட்
டுடையான் கழல்புகவே.

இது யாத்திரைப் பத்து. அதற்கு அடுத்து, சிவபுராணத்தைப் பாடுகிறார்.

எடுத்த எடுப்பில் 'நமசிவாய வாழ்க' என்று வைக்காமல்,

'பொல்லா வினையேன் நின் பெருஞ்சீர்
புகழுமாறு ஒன்றறியேன்'

'உன்னைப் புகழக்கூடிய அறிவு ஆற்றல்எனக்கு இல்லையே' என்று மாணிக்கவாசகர் பாடுகிற பாடலை வைத்து இருக்கிறார். இளையராஜாவே மாணிக்கவாசகர் போல ஆகிவிடுகிறார். ஏறக்குறைய நான் 20 முறை இந்த இசைப் படைப்பைக் கேட்டேன். அதைக் கேட்கும்போதுதான் ஏன் இந்தப் பாடலை வைத்தார்? என்று எண்ணினேன்.

அமெரிக்க நாட்டிலும், இங்கிலாந்து நாட்டிலும் இசைக்கருவிகளை இசைக்கக்கூடிய, ஹாலிவுட் திரைப்படங்களுக்கு இசை அமைத்து வெற்றி கண்ட - விருது பெற்ற மாமேதை எழுதிய ஆங்கில வரிகளுக்கு இசைக்கருவிகளை இசைக்கிறார்களே, அந்தப் பாடல்களைத்தான் நீங்கள் கேட்டீர்கள்.

'பொல்லா வினையேன்' என்று சொல்கிறபோது இடையில் , I am just a man imperfect lowly. அடுத்த வரிகள் How can I reach for something Holy - என்ற ஆங்கில வரிகள் வருகின்றன. அந்த உன்னதமான இடத்தை நான் எப்படி அடைய முடியும்? இந்தப் பாடல் மிக அருமையான பாடல். இந்தப் பாடலை வைத்துவிட்டு, அதன்பிறகுதான்,

'நமசிவாய வாழ்க! நாதன் தாள் வாழ்க!
இமைப்பொழுதும் என்நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க!
கோகழி ஆண்ட குருமனிதன் தாள் வாழ்க!
ஆகமம் ஆகி நின்றண்ணிப்பான் தாள் வாழ்க!
ஏகன் அநேகன் இறைவனடி வாழ்க!'

எனும் சிவபுராண வரிகளை வைத்து இருக்கிறார் இளையராஜா! இந்தப் பாடலை இரண்டாவது பாடலாக வைத்து இருக்கிறார். அடுத்தப் பாடலும் மிக அருமையான பாடல்.

மாணிக்கவாசகர் மதுரையில் நடந்து செல்கிறார். ஆங்காங்கு பெண்கள் மர நிழல்களில், வீடுகளில், முற்றங்களில், ஊஞ்சல்களில், அமர்ந்தவாறும், நின்றவாறும் பாடிக் கொண்டு இருக்கிறார்கள். இளம் சிறுவர்கள் ஆங்காங்கு ஒடித் திரிகிறார்கள். கிளிகள் கொஞ்சுகின்றன. சோலையில் குயில்கள் கூவுகின்றன. தும்பிகள், வண்டுகள் ரீங்காரம் செய்து பாடிக் கொண்டு பறக்கின்றன. அது அரச வண்டு. அந்த வண்டைப் பார்த்துச் சொல்கிறார். 'ஏன் இப்படிப் பாடித் திரிகிறீர்கள்? இறைவனின் காலடியில் போய்ப் பாடுங்கள்' என்று சொல்வதற்காக,

‘தினைத்தனை உள்ளதோர் பூவினில்தேன் உண்ணாதே
நினைத்தொறும், காண்டொறும் பேசுந்தொறும் எப்போதும்
அனைத்தெலும்பும் உள்நெக ஆனந்தத்தேன் சொரியும்
குனிப்புடையானுக்கே சென்றூதாய் கோத்தும்பீ’

எனப் பாடுகிறார். இதுதான் அவர் அமைத்து இருக்கின்ற பாடல். அதற்கு அடுத்து எங்கே வருகிறார்? ‘பிடித்தப் பத்து’ பாடலை எடுத்து ஆள்கிறார் இளையராஜா!

இதோ அந்தப் பாடல்:

“அம்மையே! அப்பா! ஒப்பிலா மணியே!
அன்பினில் விளைந்தஆ ரமுதே!
பொய்ம்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்கும்
புழுத்தலைப் புலையனேன் தனக்குச்
செம்மையே ஆய சிவபதம் அளித்த
செல்வமே சிவபெரு மானே
இம்மையே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே.”

ஆக, பிடித்தப் பத்தில் இந்தப் பாடலைச் சொன்னார். அவன்தான் தமிழன்!

இந்த அரங்கத்தில் நிகழ்ச்சிகள் நடக்கின்றபோது ஒரு நடனக் காட்சியை அமைத்து இருந்தார்கள். நடனத்தைப் பற்றிப் பாரதியார் சொல்லுவார். ‘எங்களிடமா இசை இல்லை? எங்கள் சுண்ணம் இடிக்கிற பெண்களின் இசைக்கு நிகர் உலகில் எங்கே இருக்கிறது? என்று சொன்னார் பாரதியார். அதுதான் திருப்பொற் சுண்ணம். பெண்கள் சுண்ணம் இடிக்கிறார்கள். சுண்ணம் இடிக்கிறபோது, உலக்கையை எடுத்து இங்கே நங்கைகள் இடித்துப் பாடினார்கள். உலக்கையைக் குத்துகிறபோது, சத்தத்தோடு அந்தப் பாடல் வெளி வரும்.

“முத்தணி கொங்கைகள் ஆட ஆட
மொய்குழல் வண்டினம் ஆட ஆடச்
சித்தஞ் சிவனொடும் ஆட ஆடச்
செங்கயற் கண்பனி ஆட ஆடப்
பித்தெம் பிரானொடும் ஆட ஆடப்
பிறவி பிறரொடும் ஆட ஆட
அத்தன் கருணை யொடு ஆட ஆட
ஆடப் பொற் சுண்ணம் இடித்து நாமே”

இந்தப் பாட்டை ஐந்தாவது பாடலாக வைத்துவிட்டு, கடைசியாக என்ன வைக்கிறார்? அவர்தான் இளையராஜா! எவருக்கும் அஞ்சமாட்டோம். எதற்கும் அஞ்சமாட்டோம். கூற்றுவனே வந்தாலும் அஞ்சமாட்டோம். ஏன் மாணிக்கவாசகர் எழுதினார்? நாவுக்கரசருடைய கருத்து அவர் மனதிலே இருக்கிறது. பல்லவ நாட்டுச் சக்கரவர்த்தியின் மண்டபத்தில், 'யானையின் காலில் இட்டு உன் தலையை இடறச் செய்வோம்' என்றபோதும், சுண்ணாம்புக் காளவாயில் போட்டு உயிரைப் போக்குவோம் என்றபோதும், கல்லைக் கட்டிக் கடலில் தூக்கி எறிவோம் என்றபோதும், கொல்வோம் என்று மன்னன் முடிவெடுத்தபோதும்,

'நாமார்க்கும் குடியல்லோம்
நமனை அஞ்சோம்
நரகத்தில் இடர்ப்படோம்
நடலையல்லோம் –ஏமாப்போம் – பிணி அறியோம்!'

என்று முழங்கினாரே நாவுக்கரசர் பெருமான்! அதே பாடலை இங்கே மாணிக்கவாசகர் அச்சப்பத்துக்குக் கொண்டு வருகிறார்.

இளையராஜாவும் ஏறக்குறைய அப்படித்தான். எவருக்கும் தலைவணங்க மாட்டார். புகழ்ச்சிக்கும் மயங்க மாட்டார். புகழ் பலரை வீழ்த்திவிடும். பலரை வீழ்த்தி இருக்கிறது. புகழால் வீழ்த்த முடியாதவர்கள்தான் உலகில் உயர்ந்து இருக்கிறார்கள். அப்படிப்பட்ட ஒரு மாமனிதன் எங்கள் தமிழன் - எங்கள் தென்னாட்டுத் தமிழன். அதனால்தான் அச்சப்பத்தில் மாணிக்கவாசகர் சொல்கிறார். இதோ அந்தப் பாடல்.

"புற்றில்வாள் அரவும் அஞ்சேன்
பொய்யர்தம் மெய்யும் அஞ்சேன்
கற்றைவார் சடைஎம் அண்ணல்
கண்ணுதல் பாதம் நண்ணி
மற்றுமோர் தெய்வந் தன்னை
உண்டென நினைந்தெம் பெம்மான்
கற்றிலா தவரைக் கண்டால்
அம்மநாம் அஞ்சு மாறே."

நெருப்பை உமிழ்கின்ற வேங்கைக்கும் அஞ்சமாட்டேன். கட்டுத்தறியை உடைத்து வருகின்ற யானைக்கும் அஞ்சமாட்டேன். வளைவு இல்லாமல் நேராகப் பாய்ந்து வருகின்ற அம்புக்கும் அஞ்சமாட்டேன், கூற்றுவன் சீற்றம் அஞ்சேன், உயிர் முடிக்கும் எமனுக்கும் அஞ்சமாட்டேன்.

இதுதான் அவர் நிறைவாக வைத்த பாடல்! இந்த ஆறு பாடல்களோடு நம்முடைய தமிழ் இசையைக் கொண்டு மேற்கத்திய இசைக்கருவிகளோடு, டான்யூப் நதிக்கரையில், அங்கேரி நாட்டின் தலைநகர் புடாபெஸ்ட் நகரத்தில், இசைக்கலைஞர்களோடு - இசைக்கருவிகளோடு ஒலி வடிவங்களை இணைத்து, உலகின் தொன்மையான இசையை இந்த உலகத்தின் எட்டுத் திசைகளுக்கும் கொண்டு போய்ச் சேர்த்து இருக்கிறீர்கள். இதைக் கேட்கக் கேட்க, அவர்களின் நெஞ்சம் கவரக் கவர எவரும் செய்யாத ஒரு பணியைச் செய்து இருக்கிறீர்கள்.

நான் பாராட்ட விரும்புவது ஒரு தாய் பிள்ளையைப் பாராட்டுவதைப் போல. தமிழகமே தாயாகி விட்டது என்று சொன்னார்களே! ஆனால், யார் இவரைப் பாராட்டுகிறார்கள் என்று தெரியுமா? ஸ்டீபன் ஸ்வார்ட்ஸ் **(STEPHEN SCHWARTZ)** ஹாலிவுட் திரைப்படங்களில் ஆஸ்கார் விருதுபெற்ற இசை அமைப்பாளர். அவர் இளையராஜாவைப் பாராட்டி எழுதுகிறார்.

Last night at Sony Studios in New york City, I had the pleasure of hearing the almost finished mix of Ilaiyaraja's amazing work. நான் நேற்று இரவு நியூயார்க் நகரத்தின் சோனி ஸ்டுடியோவில் அநேகமாக முற்றுப் பெற்றுவிட்ட, இளையராஜா அவர்களின் அற்புதமான இசை ஆல்பத்தைச் செவி கொடுத்துக் கேட்கின்ற மகிழ்ச்சியைப் பெற்றேன்.

It is unlike anything I have ever heard before a stunning blend of Indian and western music and instruments. I asked Mr. Raja, if this was something different for him too, and he said he had never done anything like this piece before. I don't know if anyone has! இதுவரை இப்படி உலகில் எவரும் படைத்தது இல்லை என்று ஆஸ்கார் பரிசு பெற்ற ஹாலிவுட்டில் இருக்கின்ற இசை மேதை சொல்லி இருக்கிறார். இப்படிப்பட்ட பாராட்டைப் பெற்ற நீங்கள் திருவாசகத்துக்கு சிம்பொனி ஆரடோரியோ இசை அமைத்து இருக்கிறீர்கள்.

காற்றில் கலந்த ஒலி

தமிழ் இசை, சாதி, மத எல்லைகளைக் கடந்து இருக்கின்றது. கத்தோலிக்கப் பாதிரிமார்களும், திருச்சபை பாதிரிமார்களும், தமிழுக்குத் தொண்டு செய்தார்கள். திருவாசகத்தின் பெருமையை இசையாகத் தருகிறோம். எல்லைகளைக் கடந்து 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்று உலகத்துக்கு ஒரு காலத்தில் கொள்கையைத் தந்தோமே, நம்முடைய நாகரிகத்தை, நம்முடைய இசைக்கலையை உலகுக்குத் தருகின்ற இந்தப் பெருமை இன்னும் ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளுக்கு நிற்கும். காற்றில் ஒலி அலைகள் இருக்கின்ற வரையில் மாணிக்காவாசகரின் திருவாசகம் இருக்கும். ஒலி

அலைகள் இருக்கின்ற வரையில் இளையராஜாவின் படைப்புகள் இருக்கும்.

இந்த ஒலி நாடாவை முறையாக விலை கொடுத்து வாங்கிக் கேளுங்கள். அதில் இவர் சொல்லுகிறார். ஒரே ஒரு இடத்தில்தான் அவர் பேச்சு வருகிறது. முதல் ஐந்து பாடல்களைப் பதிவு செய்து முடித்தபிறகு, இளையராஜா ராக ஆலாபனை செய்கிறார். அந்த ஆலாபனை செய்கிறபோது, இசைக்கருவிகளில் இசை வருகிறது. 'அடடா இதுதான் சிம்பொனி ஆர்கெஸ்ட்ராவா? எவ்வளவு அருமையாக இருக்கிறது! இதில் மாணிக்கவாசகர் பாடலைப் பாடினால் எவ்வளவு நன்றாக இருக்கும்? இதற்கு எந்தப் பாட்டு சரியாக வரும்? முத்திநெறி அறியாத மூர்க்கரோடு முயல்வேனா? என்று சொல்லிவிட்டு, இது வார்த்தை பிரிக்கப் பிரிக்க வருகிறதே! இதற்கு என்ன டியூன் போடுவது? என்று சொல்லியவாறு,

'புற்றில்வாழ் அரவும் அஞ்சேன்
பொய்யர்தம் மெய்யும் அஞ்சேன்'

என்ற அந்த பாட்டைப் போட்டுவிட்டு, கடைசியாக 'வாதவூர் அடிகள் வாழ்க! வாழ்த்து உரைக்கும் அடியார் வாழ்க! என முடிக்கிறார்.

இங்கே அற்புதமாகப் பாடிய கல்லூரி நங்கைகள் அதைப் பாடலில் சேர்த்து இருந்தார்கள். வாதவூர் அடிகள் திருவாசகத்தின் மூலமாகத் தமிழ் இருக்கும் வரை வாழ்வார். எங்கள் இளையராஜா இந்த இசைப் படைப்பால் வாழ்வார். தமிழகம் அவருக்கு நன்றிக் கடன் பட்டு இருக்கிறது.

இயற்கைத் தாய் உங்களுக்கு நூறு ஆண்டுகளுக்கு மேலும் வாழுகின்ற ஆற்றலையும், உடல் நலத்தையும் கொடுத்து, இந்தத் தமிழகத்துக்கும், தமிழ் இசைக்கும் நீங்கள் பெரும் சேவை செய்ய வேண்டும் என்று சொல்லி, எளியேனாகிய எனக்கு இந்த அருமையான வாய்ப்பைத் தந்த உங்களுக்கு எந்நாளும் மறவாத நன்றியைக் கூறி விடைபெறுகிறேன்.

(30.6.2005 அன்று சென்னை மியூசிக் அகடமி அரங்கில் நடைபெற்ற "திருவாசகம் Oratorio" - இளையராஜாவின் சிம்.ஃபொனி இசைத் தொகுப்பு வெளியீட்டு விழாவில் வைகோ ஆற்றிய உரை)



‘இலக்கியங்களில் மனித உரிமைகள்’

பொருப்பிலே பிறந்து தென்னன் புகழிலே கிடந்து சங்கத்து
இருப்பிலே இருந்து வையை ஏட்டிலே தவழ்ந்த பேதை
நெருப்பிலே நின்று கற்றோர் நினைவிலே நடந்தோர் என
மருப்பிலே பயின்ற பாவை
மருங்கிலே வளர்கின்ற
மாத்தமிழ் பெருமை சேர்க்கும்

நல்லமுத்துக் கவுண்டர் மகாலிங்கம் கல்லூரியின் பொன்விழா நுழைவாயிலின் நினைவாக, தமிழ்த்துறையினர் நடத்துகின்ற இந்த இனிய நிகழ்ச்சிக்கு வருகை தந்து இருக்கின்ற அனைவருக்கும் வணக்கம்.

நான் நாணுகிற அளவுக்கு என்னைப் புகழ்ந்து உரைத்து, உரை ஆற்றுகின்ற அரியதோர் வாய்ப்பினையும் வழங்கி இருக்கின்ற, நல்லமுத்து கவுண்டர் மகாலிங்கம் கல்லூரியின் நிர்வாகக் குழுவினர்க்கு, தலைமை தாங்குகின்ற பெருந்தகையாளர்க்கு, கல்லூரி முதல்வருக்கு நன்றி தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

வழக்கமாக கல்லூரியில் வகுப்புகள் எந்த நேரத்தில் முடிவு அடையும்? மரங்களின் கிளைகளை நோக்கிப் பறவைகள் மீண்டும் திரும்புவதைப் போல விடுதிகளுக்கும், வீடுகளுக்கும் மாணவக் கண்மணிகள் செல்கின்ற நேரம் எது? என்று நான் விழாத் தலைவரைக் கேட்டேன். 'மாலை 4 மணி' என்று கூறினார். அப்படி விடைபெற்றுச் செல்லும் வேளையில் நான் உரை ஆற்றுவதையும் செவிமடுக்கலாம் என்று இந்த அரங்கத்தில் நிறைந்து இருக்கக்கூடிய மாணவச் செல்வங்களே, உங்கள் நேரத்தை எனக்காக ஒதுக்கி இருக்கிறீர்கள். இது கட்டாயம் அல்ல. இது வகுப்பு அறையும் அல்ல. இந்த விழாவில் பங்கெடுத்துத் தீர வேண்டும் என்ற தேவையும் இல்லை. ஆயினும், விருந்து ஓம்புகின்ற பண்புக்கே தமிழ்க் குலத்தில் சிகரத்தில் இருக்கின்ற கொங்குச் சீமை மக்களின் பண்பாட்டை நினைவூட்டுகின்ற விதத்தில், என்னைப் பெருமைப்படுத்துகிற நிலைக்கு மீண்டும் ஒருமுறை மாணவர்களுக்கும், மாணவிகளுக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

'இலக்கியங்களில் மனித உரிமைகள்' எனும் தலைப்பில் உரையாற்ற அழைத்து இருக்கிறீர்கள். காலத்துக்கு ஏற்ற தலைப்பைத் தந்து இருக்கிறீர்கள். மனிதகுல வரலாற்றில் நாகரீகத்தின் அடையாளமும் சாட்சியமும்தான் இலக்கியம். அப்படியானால் எந்த இலக்கியத்தை முன்வைப்பது? இந்தப் பூவுலகில் இருக்கக்கூடிய மொழிகள் அனைத்திலும் மூத்தமொழியாகிய தமிழின் இலக்கியங்களுக்கு நிகரான இலக்கியங்கள், வேறு எந்த மொழியிலும் கிடையாது. அறிமுக உரையிலும் வரவேற்பு உரையிலும் நமது பேராசிரியர்கள் குறிப்பிட்டதைப்போல், நான் தமிழ் இலக்கியம் எனும் ஆழ்கடலில் நீந்திச் செல்ல நேரம் கிடையாது.

ஆனால், ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்னால் எழுதப்பட்ட நூல்களில், தமிழ் இலக்கியத்தில் உலகப் பொதுமறையாகப் போற்றப்படுகிற வான்புகழ் வள்ளுவர் வகுத்த திருக்குறள் பாடலை இங்கே வரவேற்பு உரையில் குறிப்பிட்டாரே,

இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டின் பரந்து
கெடுக உலகு இயற்றியான்

இப்படி ஒரு கருத்தை எந்த நாட்டு இலக்கியத்திலும், ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்னால் எந்தப் புலவனும் சிந்தித்து இருக்க முடியாது.

மனிதர்களுக்கு எவை உரிமை? பசியில் இருந்து விடுதலைப் பெற்று, அவன் வாழ்வதற்குத் தேவையான உணவைப் பெற்று, அந்த உரிமை மறுக்கப்படுகிற இடங்களில் போராடி, அந்த உரிமையை நிலை நாட்டுவதற்கு இன்றளவும் உலகம் பல்வேறு களங்களைக் காணும்

நேரத்தில், ஒருவனுக்கு உணவு இல்லை, அவன் பசியோடு இருக்கிறான் என்றால், இந்த உலகமே அழியட்டும், இந்த அமைப்பே நொறுங்கட்டும், அதை உருவாக்கியவனே அழிந்து நொறுங்கட்டும்' என்ற கருத்தைச் சொன்னவர் வள்ளுவர்.

'ஆற்றுவார் ஆற்றல் பசி ஆற்றல்' என்று குறிப்பிட்டதோடு, அப்பசியைப் போக்குகின்றவனின் ஆற்றல் அதையும் விஞ்சியது என்ற உணர்வைத்தான் நெடுங்காலத்திற்குப் பிறகு வந்த எட்டையபுரத்துக் கவிஞன், 'இதுவரை இருக்கின்ற விதி என்பது வேறு; "தனி ஒருவனுக்கு உணவு இல்லை என்றால், இந்த ஜெகத்தினை அழித்திடுவோம்" என்றான். பசியைப் போக்குகின்ற, பசியை எதிர்க்கக்கூடிய இந்த உணர்வு, சிந்தனை தமிழர்களிடம் இருந்தது.

அதனால்தான் ஐம்பெருங்காப்பியங்களுள் ஒன்றாகிய மணிமேகலையில், அட்சயப் பாத்திரத்தை ஏந்தி வருகின்ற மணிமேகலை, அமுதசுரபியைத் தூக்கி வருகிற மணிமேகலை, ''வாருங்கள் என்னிடம்; துன்பப்படுபவர்கள், பார்வை அற்றவர்கள், காது கேளாதவர்கள், பேச முடியாதவர்கள், நோயின் பிடியில் தவிப்பவர்கள், ஆதரவு அற்றவர்கள், அனாதைகள் இவர்கள் எல்லோரும் என்னிடத்தில் வருக; 'காணார், கேளார், பேசார், கால்முடம் ஆனோர், பசியால் வாடுகிறவர்கள் எல்லோரும் வாருங்கள். இந்த அட்சயப் பாத்திரத்தில் இருந்து அள்ளித் தருகிறேன்' என்று சொன்னாள்.

எவரும் பசியோடு இருத்தல் ஆகாது என்ற கருத்தைச் சொன்ன தமிழன்தான், ''யாதும் ஊரே யாவரும் கேளிர்'' என்ற உணர்வுகளை விதைத்தான். அந்தக் காலத்தில் இங்கே வருணாசிரமம் இல்லை - வைதீகம் பிரித்து வைத்த மனுதர்மக் கொடுமையும் இல்லை. ஆகவேதான், ''பிறப்பு ஒக்கும் எல்லா உயிர்க்கும்'' என்ற கருத்தை வள்ளுவப் பெருந்தகை முன்வைத்தார். ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்னால் இருந்த சிந்தனை.

மன்னர் ஆட்சிக் காலத்தில், உரிமைகளுக்காகப் போராடக்கூடிய உணர்வு நம் இலக்கியங்களில் தீட்டப்பட்டு இருக்கிறது. ஆகவேதான், தமிழ்த்துறையினர் 'இலக்கியங்களில் மனித உரிமைகள்' என்றனர். தேவார மூவர்களின் இலக்கியம், சமய இலக்கியம். ஆனால், சைவநெறி தழைத்து ஓங்குவதற்காக இயற்றப்பட்ட அந்த சமய இலக்கியங்களில், மன்னனையும் எதிர்க்கின்ற உணர்வு உண்டு. மன்னரின் அவைக் களத்திற்குச் சென்றாலும்கூட, மண்டியிடும் மனப்பான்மை இல்லை என்ற காரணத்தினால்தான், மகேந்திர பல்லவ மன்னரின் ஆளுமை - அதிகாரத்தை - ஆட்சியை எதிர்த்து,

நாமார்க்கும் குடியல்லோம் நமனை அஞ்சோம்
நரகத்தில் இடர்படோம் ஏமாப்போம் பிணியறியோம்
பணிவோம் அல்லோம் –
இன்பமே எந்நாளும் துன்பமில்லை

என்று பாடினார் திருநாவுக்கரசர். இப்படிப் பாடுவதற்கு, சொல்வதற்கு உனக்கு உரிமை இல்லை; இந்தக் கருத்தை நாங்கள் ஏற்பதற்கு இல்லை என்று, அவரது உயிரைப் பறிப்பதற்காக சமணர்களின் ஏவுதலினாலே, 'யானையின் காலால் இவர் தலையை இடறச் செய்யுங்கள்' என்று நாவுக்கரசரின் தலையை இடறச் சொல்கின்ற உத்தரவு பிறப்பிக்கப்பட்ட வேளையிலும், உரிமைக்குப் போராடுகின்ற உணர்வு அக்கவிஞனுக்கு, அப்பர் அடிகள் என்று தமிழ் உலகம் போற்றுகின்ற நாவுக்கரசர் பெருமானுக்கு இருந்ததனால்தான்,

சுண்ணவெண் சந்தனச் சாந்தும்
சுடர்திங்கள் சூடாமணியும்
வண்ண வரிவை உடையும்
பவள நிறமும் வளரும்
அண்ணல் அரண்முரண் ஏறும்
திண்ணன் கெடிலப் புனலும்
உடையார் ஒருவர் தமர்தாம்
அஞ்சுவது யாதொன்றும் இல்லை
அஞ்ச வருவதும் இல்லை

என்று பாடி, மன்னனையே எதிர்க்கக்கூடிய உணர்வு திருநாவுக்கரசருக்கு இருந்தது.

சட்டத்துக்கு முன்னால் எல்லோரும் சமம். உரிமைகள் எல்லோருக்கும் சமமாக இருக்க வேண்டும். இந்த உரிமைகளை நிலைநாட்டுவதற்காகத் தான், இருபதாம் நூற்றாண்டில், இரண்டாம் உலகப்போர் முடிந்ததற்குப் பிறகு, 1948 ஆம் ஆண்டு டிசம்பர்த் திங்கள் 10 ஆம் நாள், உலக நாடுகளின் பொதுமன்றமாகிய ஐ.நா. சபை பொதுமன்றத்தில், மனித உரிமைகள் பிரகடனம் செய்யப்பட்டது.

'சட்டத்துக்கு முன்னால் எல்லோரும் சமம்' என்ற கோட்பாட்டின் அடிப்படையில், ஒருவரை ஒருவர் வருத்துதல் ஆகாது; கொடுமை செய்தல் ஆகாது என்ற இந்தக் கருத்தை எண்ணிப் பாருங்கள். தமிழ்த் துறையில்,

ஆங்கிலத்துறையில் இலக்கியங்களைப் படிக்கின்றீர்கள். தமிழர்களின் காப்பியங்களில், சிலப்பதிகாரத்திற்கு ஈடான காப்பியம் இன்னொன்று இல்லை.

நான் காலத்தின் அருமை கருதி, ஒவ்வொன்றையும் விவரித்துச் சொல்லாமல், சொல்ல வரும் செய்திகளைக் கொஞ்சம் வேகமாகச் சொல்ல வேண்டிய கட்டாயத்துக்கு ஆளாகி இருக்கின்ற காரணத்தினால், நான் அங்கொன்றும் இங்கொன்றுமாகச் சில நிகழ்ச்சிகளை, நிலைமைகளை மாத்திரம் உங்கள் மனத்திரையில் பதிவு செய்ய விரும்புகிறேன்.

'எல்லோரும் சமம்' என்ற கோட்பாடு எப்போது வந்தது? இதேபோன்ற அரசவையிலே, மன்னனின் சபையில், பாண்டிய மன்னரின் அவைக்களத்தில், 'அட அறிவுக் கெட்டுப்போன அரசனே' என்று, ஒரு சாதாரண வணிகக் குடும்பத்தில் பிறந்த கண்ணகிப் பெருந்தேவி கேட்டாள்.

'தேரா மன்னா செப்புவது உடையேன்' என்றாள்.

"கண்களில் நீரோடு வந்து இருக்கிற பெண்ணே, நீ யாரம்மா?" என்று கேட்ட மாத்திரத்தில்,

'வாயிற் கடைமணி நடுநா நடுங்க
ஆவிற் கடைமணி உகுநீர் நெஞ்சு சுடத் தான் தன்
அரும்பெறல் புதல்வனை ஆழியில் மடித்தோன்
பெரும்பெயர் புகார் என் பதியே'

என்று ஒரு சரித்திரத்தை முன்வைத்தாள்.

'என் கண்ணீருக்கா நீ காரணம் கேட்கிறாய்? ஒரு பசுவின் கண்ணீருக்காக, பசுவுக்குத் தீங்கு நேர்ந்துவிட்டது என்ற காரணத்திற்காகத் தன் மகனைத் தேர்க்காலில் இட்ட மனுநீதிச் சோழ மன்னன் பிறந்த சோழ மண்டலத்தில் இருந்து வந்து இருக்கிறேன்' என்றாள். இப்படி உரிமைகளுக்காகப் போராடுகிற உணர்வு நம் காப்பியங்களில் தீட்டப்பட்டு இருக்கிறது.

இதைப்போல, இலக்கியங்கள் இந்த உரிமைகளை எங்கெல்லாம் வலியுறுத்துகிறது என்று பார்த்தால், பழமையான நாகரீகங்கள் எங்கெல்லாம் வளர்ந்தது என்று பார்த்தால், அப்படி வளர்ந்த நாகரீகங்களுள் ஒன்றுதான் கிரேக்கத்து நாகரீகம். அங்கே ஒரு நீதிமன்றம். அந்த நீதிமன்றத்தில் நிறுத்தப்படுகிறவன், சிந்தனையாளன் சாக்ரடீஸ். அவனுடைய கருத்துகள் அங்கே விதைக்கப்பட்ட காரணத்தினால், அவனுக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது. அவன் சொன்ன

கருத்துகளே கிரேக்கத்தின் அக்கால இலக்கியமாயிற்று. ஆகவேதான், 'கிரேக்கத்தின் இயேசுநாதராகிய சாக்ரடீஸைப் பற்றி நான் குறிப்பிடுகிறேன்' என்று கவிஞன் ஷெல்லி சொன்னான். அதே சாக்ரடீஸின் வாழ்க்கையை, பலர் நாடகங்களாகத் தீட்டி இருக்கிறார்கள். கதைகளாகத் தீட்டி இருக்கிறார்கள். நாம் அதுவரை அறியாத செய்திகளை உள்ளடக்கி, சாக்ரடீஸின் வாழ்க்கையை நாடகமாக ஒருவன் தருகிறான். அது அந்த நாட்டின் இலக்கியம்.

வாள்முனையைத் தூண்டிய பேனா முனை

இங்கே வரலாற்றுப் பேராசிரியர்கள் இருக்கிறார்கள். உரிமைகளுக்காகத் தான் உலகத்தில் போர்க்களங்கள் அமைந்தன. புரட்சிகள் நடைபெற்றன. உரிமைகளை நிலைநாட்டவே வாள் ஏந்தி, இரத்தம் சிந்தி இருக்கிறார்கள். அடிமை விலங்குகளை உடைப்பதற்காக, உரிமை பெறுவதற்காக நடத்தப்பட்ட புரட்சிகளுக்குக் காரணமானவை அனைத்தும் இலக்கியங்கள் தாம்! வாள் முனையை ஏந்திச் செல்பவர்களைத் தூண்டிவிட்டது பேனா முனைதான்!


ரூசோ

'மனிதர்கள் எல்லோரும் சுதந்திரமாகத்தான் பிறக்கிறார்கள்; ஆனால், அவர்கள் எங்கு பார்த்தாலும் அடிமை விலங்குகளில் பூட்டப்பட்டுக் கிடக்கிறார்கள்' என்று, 'சமுதாய ஒப்பந்தத்தின்' தொடக்கத்தில் எழுதிய பிரெஞ்சு நாட்டுச் சிந்தனையாளன் ரூசோ, **'Man is born free: but, he is everywhere in chain'** என்று ரூசோ எழுதிய அதே பிரெஞ்சு நாட்டில், நான் குறிப்பிட்ட இந்த நாடகத்தைத் தீட்டியவன் வால்டேர். ''அழிவின் உச்சியிலே இருக்கிறது பிரெஞ்சு நாடு. சர்வாதிகாரத்தின் கொடுமுடியில் இருக்கிறான் மன்னன் லூயி. இந்தக் கொடுமை நீடிக்குமானால், இந்தப் பிரெஞ்சு நாடே அழிந்துவிடும்'' என்று எழுதியதற்காக, 1717 ஆம் ஆண்டு மே மாதம் 16 ஆம் நாள், வால்டேர் சிறையில் அடைக்கப்பட்டான்.

எந்தச் சிறையில்? பிரெஞ்சுப் புரட்சி வெடிப்பதற்குக் காரணமான பாஸ்டைல் சிறையில் அவன் அடைக்கப்பட்டான். அந்தச் சிறையில் இருந்தபோதுதான் அவன் சாக்ரடீஸின் நாடகத்தை எழுதினான். நான் படித்த சாக்ரடீஸ் நாடகங்களை விட, வால்டேர் காட்டக்கூடிய இந்த சாக்ரடீஸ் நாடகத்தில், ஏன் அவனுக்கு விஷம் கொடுக்கப்பட்டது? எதனால் அவனுக்கு மரணதண்டனை விதிக்கப்பட்டது? என்ற பல புதிய செய்திகள் இருக்கின்றன. நீங்கள் அவற்றைப் படிக்க வேண்டும்.

எனவே, உரிமைகளுக்காகப் போராடுகிற உணர்வை ஏற்படுத்திக் கொடுத்தவன் வால்டேர். அவர் எழுதிய நூல்கள், நாடகங்கள், அந்த நாட்டு மக்களின் உள்ளத்தில் எரிமலையாக வெடிக்கச் செய்வதற்குக் காரணமான இந்த பிரெஞ்சுப் புரட்சியைக் குறித்து, அதனையே சரித்திர நாவல் ஆக்கினான். அதுவும் இலக்கியம்தான்.

அவன், இங்கிலாந்து நாட்டில் பிறந்த கார்லைல். பிரெஞ்சுப் புரட்சியின் கதாபத்திரங்களை, அவன் நாடகத்தின் கதாபாத்திரங்களாக ஆக்குகிறான். நான் உரிமைகளின் வரலாற்றிலே எடுத்துச் சொல்ல இருக்கின்ற பேரறிஞர் அண்ணா அவர்கள், கார்லைலின் எழுத்தைப் பற்றிக் குறிப்பிடுகிறபோது, 'வலிமை அற்றவனின் பாதையிலே தடையாக இருக்கக்கூடிய கருங்கல், வலிமை உள்ளவன் பாதையில் படிக்கட்டாக மாறுகிறது'' என்று கார்லைல் எழுதிய கருத்தை, தன் தம்பிமார்களுக்கு அறிஞர் அண்ணா அவர்கள் தந்தார்களே, அந்தக் கார்லைல், பிரெஞ்சுப் புரட்சியின் வரலாற்றைக் காவியமாக்கித் தந்தான்.

மனித உரிமைச் சாசனம்

இங்கே உரை ஆற்றிய பேராசிரியர் அவர்கள், இங்கிலாந்து நாட்டில், 1815 ஆம் ஆண்டு மனித உரிமைச் சாசனத்தின் முன்னோடியாக விளங்கிய 'மேக்னா கார்டா'வைப் பற்றிச் சொன்னார்கள். வாள் முனையில் கையெழுத்து இட்டான் மன்னன் ஜான். அது 'மனித உரிமைச் சாசனம்' என்கிறார்கள். பின்னர் வந்த மனித உரிமைப் பிரகடனம், 1948 ஆம் ஆண்டு டிசம்பர் 10.

இதற்கு வித்து இட்டவன் யார்? ஒரு இலக்கியவாதி. ஒரு தலைசிறந்த கவிஞன். இலக்கிய உலகில் இன்றைக்கும் ஜொலித்துக் கொண்டு இருக்கின்ற, அழியாப் புகழ்ப்பெற்ற மகா கவிஞன் ஷெல்லி. அவன்தான் முதன்முதலாக 1812 ஆம் ஆண்டில், 'மனித உரிமைப் பிரகடனம்' என்று வெளியிட்டவன். 'இலக்கியத்தில் மனித உரிமைகள்' என்று தலைப்புத் தந்தீர்கள். மனிதஉரிமைகள் என்ற சொல்லை முதன்முதலாகப் பயன்படுத்தியவனே ஷெல்லி என்பதை, இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். எந்த இலண்டன் மாநகரத்தைப் பற்றி இங்கே ஜோதிமணி அவர்கள் குறிப்பிட்டார்களோ, சுவஸ்திக் கொடி தாங்கிய ஜெர்மானியர்கள் கொட்டம் அடித்துக் கொண்டு இருந்த காலத்தில், இலண்டன் மாநகரத்தில் குண்டுகள் தொடர்ந்து மழையைப்போல் விழுந்து கொண்டு இருந்த நேரத்தில், பதுங்கு குழிகளைப் பற்றிக் குறிப்பிட்டீர்களே, அந்தக் காலத்தில் 'உலக இலக்கியம்' என்ற சொல்லை முதன்முதலாகப் பயன்படுத்தியவன் அந்த ஜெர்மனியக் கவிஞன் கதே என்பதை, இந்த நேரத்திலே குறிப்பிட்டுக் காட்டுவது பொருத்தமாக இருக்கும்.

மனித உரிமைகள் பிரகடனத்தை அவன் வெளியிடுவதற்கு அடக்குமுறை இருந்த காரணத்தினால், அந்தப் பிரகடனத்தைத் துண்டுத் தாள்களில் எழுதி, பாட்டில்களில் அடைத்து, நீரோடைகளிலும், நதிகளிலும், கடற்கரை ஓரங்களிலும் வீசினார்கள். பலூன்களில் கட்டி அனுப்பினார்கள். இப்படி வீசிய ஷெல்லியின் மனிதஉரிமைப் பிரகடனத்தின் உட்பிரிவுகள் 31. ஷெல்லியின் அந்த மனித உரிமைப் பிரகடனம்தான், 1948 இல் **Universal Declaration of Human Rights'** என்ற ஐ.நா. மன்றத்தின் மனித உரிமைப் பிரகடனத்துக்கு அடிப்படையாக அமைந்தது. அதன் உட்பிரிவுகள் 30. எனவே, இலக்கியங்களிலே மனித உரிமைகள் என்கிறபோது, ஒரு கவிஞன்தான் அதைத் தருகிறான்.

Mask of Anarchy

மான்செஸ்டர் நகரத்தில், 1816 ஆம் ஆண்டு ஒரு பெரிய அடக்குமுறை நடக்கிறது. எண்ணற்றத் தொழிலாளர்கள் கொல்லப்படுகிறார்கள். அந்தக் கொடுமையான நிகழ்வுகளை, இத்தாலி நாட்டில் கேள்விப்படுகிற கவிஞன் ஷெல்லியின் இதய எரிமலையில் பூகம்பம் வெடிக்கிறது. தாங்க முடியவில்லை அவனால். அவன் தீட்டிய காவியம்தான் 'அராஜகத்தின் முகமூடி' **(Mask of Anarchy)** அற்புதமான படைப்பு. இன்றைக்குத் தொழிலாளத் தோழர்கள் உலகெங்கும் போர்க்கொடி ஏந்திப் போராடிய வரலாற்றைச் சொல்லுகிறார்களே, இதோ அவன் சொல்கிறான்.

ஷெலலி

கழனியில் இரத்தத்தை வியர்வையாகக் கொட்டி உழுது கொண்டு இருக்கக்கூடிய உழவனுக்கு உண்ண உணவு இல்லை என்றான். இன்னொரு கவிஞன் அல்லாமா இக்பால் சொன்னார். "உழுது கொண்டு இருக்கக்கூடிய விவசாயிக்கு, கழனியில் பாடுபடுகிறவனுக்கு உணவு இல்லை என்றால், விளைகின்ற செந்நெல் அவனுக்குப் பயன்படாது என்றால், அது எங்கோ கோபுரமாகக் குவிக்கப்படுகிறது என்றால், கழனிகளைத் தீயிட்டுக் கொளுத்துங்கள், எங்கும் நெருப்புப் பரவட்டும்" என்று சொன்னானே, அதே வரிகளைத்தான் கவிஞன் ஷெல்லி சொல்கிறான்.

நீங்கள் விதைக்கிறீர்கள்; எவனோ அறுக்கிறான்.
நீங்கள் செல்வத்தைத் தேடுகிறீர்கள்; எவனோ குவிக்கிறான்.
நீங்கள் நெய்கிறீர்கள்; எவனோ அணிகிறான்.

நீங்கள் ஆயுதங்களை வார்ப்பிக்கிறீர்கள்;
அந்த ஆயுதங்களை எவனோ ஏந்துகிறான்

என்று சொல்லிவிட்டு,

இனிமேல், வரப்போகிற சமுதாயமே, இதை எண்ணிப்பார்த்து உன்னுடைய சிந்தனையைக் கூர் ஏற்றிக் கொள்.

நீங்கள் விதையுங்கள்;
எந்தக் கொடுங்கோலனையும் அறுக்க விடாதீர்கள்.
செல்வத்தைத் தேடுங்கள்;
எந்த ஏமாற்றுக்காரனையும் குவிக்க விடாதீர்கள்.
ஆடைகளை நெய்யுங்கள்;
எந்தச் சோம்பேறியையும் உடுத்த விடாதீர்கள்.
ஆயுதங்களை வார்ப்பியுங்கள்;
நீங்களே ஏந்துவதற்காக!

இந்தக் கவிதை, ஷெல்லி தந்த கவிதை!

'மனித உரிமைகள் பிரகடனம்' என்கின்ற அந்த அடிப்படைத் தத்துவத்தைத் தந்த கவிஞன் ஷெல்லி, இதைக்குறிப்பிடுகிற காலம் 1812.

1848. நீங்கள் குறிப்பிட்டீர்களே உலகத் தொழிலாளர்களின் உரிமைப் பிரகடனம் என்று கார்ல் மார்க்ஸ் அறிவித்து, கையெழுத்து இட்ட பிரகடனம். அந்தப் பிரகடனத்தில் **'Workers of the world unite; you have nothing to lose, but your chains'** உங்கள் விலங்குகளைத் தவிர எதையும் இழக்கப்போவது இல்லை' என்றார். இதுவும் உரிமைப் பிரகடனம்தான்!

நான் பிரெஞ்சுப் புரட்சியைச் சுட்டிக்காட்டி, இங்கிலாந்து நாட்டில் கவிஞன் ஷெல்லி தந்த எழுச்சியை வர்ணித்துவிட்டு, அதன் தொடர்ச்சியாக மனித உரிமைகள் எங்கே மறுக்கப்பட்டன என்ற காட்சிக்கு உங்களைக் கொண்டுபோக விரும்புகிறேன்.

உலகில் மனித உரிமைகள் மண்ணோடு மண்ணாகப் புதைக்கப்பட்ட இடம், எங்கே தெரியுமா? சுதந்திரம் பிரகடனம் செய்யப்பட்ட அமெரிக்க நாட்டில், மனித உரிமைகள் என்று பிரகடனத்தில் சொல்லப்பட்ட நாட்டில், கோடிக்கணக்கானவர்கள் நாயினும் கேவலமாக, மிருகங்களைவிடக் கொடுமையானவர்களாக, இழிவுபடுத்தப்பட்டார்கள். நினைத்துப் பார்க்க முடியாத கொடுமை! தங்கள் உரிமைகளை இழந்தவர்களாக, உண்பதற்கும்

உடுப்பதற்கும் வசிப்பதற்கும் உரிமை இழந்தவர்களாக, மனிதன் என்ற உணர்வுடன் அடிப்படையில் இயங்க முடியாதவர்களாக இருந்த நீக்ரோக்கள் கருப்பர்கள், அவர்கள் மீதான கொடிய அடக்குமுறையை எதிர்த்து, அவர்களின் அடிமை விலங்குகளை உடைத்து, அதற்காகத் தன் ஆவியைத் தந்தவன் ஆபிரகாம் லிங்கன்.

'Uncle Tom's Cabin'

அற்புதமான சக்தியாக உருவான ஆபிரகாம் லிங்கன் குறிப்பிடுகிறான். அடிமைகளுக்கு வாழ்வு அளிக்க வேண்டும், அவர்கள் உரிமை பெறுவதற்காகப் போராட வேண்டும் என்று எண்ணத்தை எனக்கு ஏற்படுத்திக் கொடுத்தது, ஒரு பெண்மணி எழுதிய புத்தகம் என்று அருமையாகச் சொன்னார். ஹேரியட் பீச்சர் ஸ்டோவ் 1852 ஆம் ஆண்டில் எழுதிய புத்தகம், **'Uncle Tom's Cabin'** 'இந்த நூல்தான் எனக்கு இந்த உணர்வை ஏற்படுத்தியது' என்று சொன்னார்.

1852 ஆம் ஆண்டில் இந்தப் புத்தகத்தை எழுதுகிறபோது, அமெரிக்க நாட்டில் இருந்த நிலைமையை எழுதுகிறார். 10 ஆண்டுகள் கழித்து, 1862 ஆம் ஆண்டு, வெள்ளை மாளிகையில் ஆபிரகாம் லிங்கனைச் சந்தித்தார். அப்பொழுது லிங்கன் குடியரசுத் தலைவர். 10 வயதில் பள்ளிக்கூடத்திற்குப் போனபோது லிங்கன் ஒரு கவிதை எழுதினார். அப்போது அவனுக்குத் தெரிந்த ஆற்றலை வைத்து ஆபிரகாம் லிங்கன் எழுதுகிறார். **'Abraham Lincon's hand and pen do good. But God knows when?'** ஆபிரகாம் லிங்கனின் கரமும் அவனுடைய பேனாவும் சிறப்புச் செய்யும்; அது எப்பொழுது என்பது ஆண்டவனுக்குத்தான் தெரியும்."

ஆபிரகாம் லிங்கன் வாழ்நாள் முழுவதும் போராடி, பல தோல்விகளைச் சந்தித்து, வெற்றி பெற்றதற்குப் பின்னர், 1863 ஆம் ஆண்டு ஜனவரி முதல் நாள், ஆண்டின் தலைநாளில், வெள்ளை மாளிகைக்கு உள்ளே வருகிறார். ஆயிரக்கணக்கானவர்களோடு கைகுலுக்கிக்கொண்டே வருகின்றார். அத்தனை பேரிடத்திலும் கைகுலுக்கிவிட்டு, ஓவல் அலுவலக மேஜைக்கு வந்து, சரித்திரப் பிரசித்தி பெற்ற பிரகடனத்தில், அடிமைகளுக்கு உரிமைகள் வழங்குகிற அந்தச் சட்டத்திற்குக் கையெழுத்திட வருகிறார். பேனாவைக் கையில் எடுக்கிறார். எப்பொழுதோ அவரிடத்தில் கொடுக்கப்பட்ட பொன்னிறமான தங்கப்பேனா, அதைக் கையில் எடுத்து கையெழுத்துப் போடப்போகிறபோது, கை லேசாக நடுங்குகிறது. பேனாவைக் கீழே வைத்து விடுகிறார்.

"நான் பலரிடத்தில் கைகுலுக்கிவிட்டு வந்தேன். அதனால் இந்தக் கையில் ஒரு தளர்ச்சி ஏற்படுகிறது. ஓய்வு எடுத்துக் கொள்கிறேன். இந்தக்

கையெழுத்தில் ஒரு சிறு தடுமாற்றத்தைப் பார்த்தாலும், ஆபிரகாம் லிங்கன் அடிமைகளுக்கு வாழ்வு அளிக்கும் உரிமைப் பிரகடனத்தில் கையெழுத்திடப்போகிறபோது அவரது உள்ளத்தில் ஏதோ தயக்கமும் தடுமாற்றம் இருந்தது என்று வருங்காலம் சபித்துவிடக்கூடாது என்பதற்காக, சற்று நேரம் கழித்துக் கையெழுத்து இடுகிறேன்" என்று சொன்னார் லிங்கன்.

ஸ்டோ

நான் முதலில் குறிப்பிட்ட **'Uncle Tom's Cabin'** எனும் அற்புதமான இலக்கியக் காவியத்தை எழுதிய ஹேரியட் பீச்சர் ஸ்டோ என்கிற அம்மையாரைப் பார்த்தபோது, **You are that little woman?** நீ தான் அந்தப் பெண்மணியா? **You have created the civil war** உள்நாட்டு யுத்தத்தை ஏற்படுத்தியப் பெண்மணி நீதானா? என்று கேட்டுப் பாராட்டினார். இந்த 'Uncle Tom's Cabin' எனும் புத்தகம் ஒரு இலக்கியம் அல்லவா?

ஒரு அதியசமான காட்சி!

சிலபேருக்கு மர்ம நாவலைப் படிக்கிறபோது விறுவிறுப்பாக இருக்கும். மர்மநாவலும் ஒரு இலக்கியம்தான். கடைசிக் காட்சியில் என்ன ஆவான் என்கிற பயத்தில், சிலபேர் எனக்குத் தெரியும், கிளைமேக்ஸ் படித்துவிட்டு மனதைத் தயார்படுத்திக் கொள்வார்கள். அதில் சுவாரஸ்யமே இருக்காது. சினிமாவுக்குப் போகிறீர்கள். நாம் ரொம்ப கஷ்டப்பட்டு டிக்கெட் வாங்கிப் போயிருப்போம். அந்தப் படம் திரில்லராக இருக்கலாம். அல்லது சோகம் நிறைந்த படமாக இருக்கலாம். காதல் காவியமாக இருக்கலாம். அது லைலா மஜ்னு கதையாகி விடுமோ? தேவதாஸ் முடிவாகி விடுமோ? அல்லது சுமைதாங்கியைப்போல் கிறிஸ்தவ சாமியாராகிப் போய் விடுவானோ? என்று பற்பல சந்தேகம் வந்து, திரைப்படத்தில் லயித்து இருக்கிறபோது ஒரு இடைஞ்சல்.

யாராவது ஒருவன், ஏற்கனவே படத்தைப் பார்த்துவிட்டு வந்து, நம் முன்னாலோ பின்னாலோ உட்கார்ந்துகொண்டு, 'கதாநாயகன் வருகிறானா? இப்ப அங்க போகிறானா? வில்லன் வந்து விடுவான். வெற்றி பெறுவான்' என்று கதையைப் பூராவும் சொல்லி விடுவான். 'ஏனய்யா நான் காசு கொடுத்துப் படம் பார்க்க வந்து இருக்கிறேன். நீ கதையைச் சொல்லிவிட்டால் நான் எதுக்கய்யா பார்க்க வேண்டும்' என்போம். முடிவைத் தெரிந்துகொள்வதில் இருக்கிற ஆர்வம். சிலபேர் படத்தைப் பற்றிச் சொல்ல வருவார்கள். படத்தைப்பற்றி ஆரம்பிக்கும்போதே, 'நான் படத்தைப் பார்த்துக் கொள்வேன், நீங்கள் சொல்ல வேண்டாம்' என்போம்.

மாணவச்செல்வங்களே,

'Uncle Tom's Cabin' என்ற இந்தப் புத்தகத்தைத் தொடராகத்தான் எழுதினார்கள் அந்த அம்மையார். சொன்னால், ஆச்சர்யப்படுவீர்கள். அந்தப் புத்தகத்தின் கடைசி அத்தியாயத்தைத்தான், முதலில் எழுதினார்கள். படிக்கிறவர்களின் கண்களில் கண்ணீரை வரவழைக்கக்கூடிய நூல் அது. நான் சில நூல்களைப் படிக்கிறபோது மனம் கலங்கி இருக்கிறேன். இந்த நூலைப் படிக்கிறபோதும் என்னை அறியாமல் கலங்கினேன். அப்பொழுது நான் நினைத்தேன். இப்பொழுது படிக்கும்போதே மனதிற்கு இவ்வளவு கலக்கம் தருகிறதே, அந்த நாட்டில், அந்தக் காலகட்டத்தில் இது எவ்வளவு உணர்ச்சியை ஏற்படுத்தி இருக்கும்? இதைப் படித்த எத்தனைபேர் கலங்கி இருப்பார்கள்? என்று நினைத்தேன்.

ஹேரியட் பீச்சர் ஸ்டோவ் அம்மையார், தன் பிள்ளைகளை அழைத்து, தான் எழுதிய கடைசி அத்தியாயத்தை வாசித்துக் காண்பித்தார். கடைசிப் பக்கம். இதை அவர் வாசித்தவுடன், அந்தப் பிள்ளைகள் கதறி அழுது விட்டார்கள். அதன்பிறகுதான் அவர் தொடக்கத்தில் இருந்து கதையை எழுதத் தொடங்கினார். எனக்குத்தெரிய எந்த ஒரு படைப்பும், கடைசி அத்தியாயத்தை முதலில் எழுதி, பின்னர் முதலில் இருந்து எழுதத் தொடங்கியதாக நான் படித்ததே இல்லை.

அமெரிக்காவில் நிறவெறிக் கொடுமை

அமெரிக்காவில் கருப்பர்கள் மனிதர்களாகவே நடத்தப்படவில்லை. தட்டுமுட்டுச் சாமான்களைப்போல் நடத்தப்பட்டார்கள். மிருகங்களைவிடக் கேவலமாக நடத்தப்பட்டார்கள். பத்து மாதம் வயிற்றில் சுமந்து பெற்ற குழந்தையை, தன் தோள்மீதும் மார்மீதும் போட்டுப் பாலூட்டி வளர்த்த குழந்தையை, ஒரு தாய் உயிருக்கும் மேலாக நேசிப்பாள். அப்படிப்பட்ட தாயிடம் இருந்து, கருப்பர் இனத்தைச் சேர்ந்த தாயிடம் இருந்து, ஒரு வயதுப்பிள்ளையை இரண்டு வயதுப் பிள்ளையைப் பிரித்து எடுத்துச் செல்வார்கள்.

கொழுகொழுவென்று இருக்கும் பத்து மாதக் குழந்தை. அடிமைச் சந்தையில் விலைக்கு வாங்கும் வியாபாரி வருகிறான். அந்தத் தாய் அழுதுகொண்டே இருக்கிறாள். எங்கே இளம் குழந்தையைப் பிரித்து விடுவார்களோ என்று. வாங்க வருகிறவன், அந்தக் குழந்தையைத் தட்டிப் பார்க்கிறான். கன்னத்தைக் கிள்ளிப் பார்க்கிறான். அதனுடைய புன்முறுவலும், கொடுக்கிற பொருளைக் கையால் வாங்குகிற இலாவகத்தையும் பார்த்துவிட்டு, 'இந்தக் குழந்தை மிகவும் சுறுசுறுப்பாக

இருக்கிறது' என்று சொல்லி, அவன் விலைக்குக் கொடுக்க வந்தவனிடத்தில்போய், 'அந்தக் குழந்தையை மட்டும் தனியாகக் கொடு' என்று கேட்டான்.

தாய் கதறினாள். 'என்னையும் குழந்தையோடு சேர்த்து விற்று விடுங்கள்' என்று. இல்லை இந்தக் குழந்தையைத் தனியாக வாங்கி, இன்னும் ஒரு ஆண்டு வளர்த்தால், எப்படி ஆட்டுக் குட்டியை வாங்கித் தீனிபோட்டு அதைச் சந்தைக்கு அனுப்பினால் அதிகப் பணம் கிடைக்கும் என்று கருதுகிறார்களோ அதைப்போல, இந்தக் குழந்தையை இன்னும் ஒரு ஆண்டு கழித்து விற்றால், இரண்டு மடங்கு லாபம் கிடைக்கும் என்று வாங்கிக்கொண்டு போகிறான். இவை எல்லாம் உண்மையாக நடந்த நிகழ்வுகள். அந்தக் குழந்தையைப் பிரிந்த தாய், இன்னொருவனிடம் விற்கப்படுகிறாள். படகில் போய்க்கொண்டு இருக்கும்போது, தண்ணீரில் குதித்து இறந்து போகிறாள்.

இப்படிப்பட்ட காட்சிகள் வரக்கூடிய கதையில், ஒரேயொரு சிறு சம்பவம். திருமணமாகி 4 ஆண்டுகள் ஆகின்றன. குழந்தை 3 வயது. கணவனைப் பிரித்து விடுகிறார்கள். அவனை வேறொரு சந்தைக்கு விற்று விடுகிறார்கள். மனைவியிடம் வந்து கதறுகிறான். 'இனி என் வாழ்நாளில் உன்னைப் பார்க்க முடியாது. நாம் மனிதர்கள் அல்ல. நமக்கு உணர்ச்சிகள் கிடையாது. நாம் எதையும் சிந்திக்கக்கூடாது. நமக்கென்று எங்கே இருக்கிறான் இறைவன்?' என்று தன் ஆத்திரத்தை எல்லாம் கொட்டிச் சொல்கிறபோது, அவள் சமாதானம் சொல்கிறாள்.

அப்பொழுது அவன் ஒரு சம்பவத்தைச் சொல்கிறான். என் முதலாளி, என்னை அடிமையாக வைத்து இருக்கிற பண்ணைக்காரன், எஜமான் என்னை எப்படிக் கொடுமைப்படுத்துகிறான் தெரியுமா? ஆசையாக ஒரு நாய் வளர்த்தேன் என் குடிசையில். அந்த நாய் என்னைச் சுற்றிச்சுற்றி வரும். அந்த நாய் என்னிடத்தில் அதிக பிரியம் காட்டுவதை அவனால் சகிக்க முடியவில்லை. இந்த அடிமைகளுக்கும் அன்பு காட்டக்கூடிய ஒரு பிராணி வேண்டுமா? என்று கருதி என்னை அழைத்து, 'இந்த நாயைக் கழுத்தில் கல்லைக்கட்டி அடித்து ஏரியில் போட்டுக் கொன்று விடு' என்று சொன்னான். 'நான் முடியாது' என்று மறுத்தேன். சவுக்கால் அடித்தான். பலமான இரும்புச் சங்கிலியால் கட்டி வைத்தார்கள். என் உடம்பில் இருந்து ரத்தம் கொட்டிக்கொண்டே இருந்தது. இதற்குப்பிறகும், அவனுக்குச் சமாதானம் ஆகவில்லை.

என் பிரியமுள்ள நாயை அவன் என்ன செய்தான் தெரியுமா? அதனுடைய கழுத்தில் கல்லைக்கட்டி, வேலைக்காரர்களை அழைத்து, அதனை

கல்லைக்கொண்டு அடிக்கச் சொன்னான். அதன் உடம்பில் இருந்து உதிரம் கொட்டுகிறது. அந்த நாயைத் தூக்கி ஏரியில் வீசுகிறார்கள்.

அந்த ஒரு இடம்தான் என்னை உலுக்கி விட்டது. 'அப்போது அந்த நாய், என்னைப் பரிதாபமாகப் பார்த்தது. என்னை நீ காப்பாற்ற மாட்டாயா? எனக்கு நீ ஏன் உதவி செய்ய மறுக்கிறாய்? அது தண்ணீரில் மூழ்கிறபோது அதன் கண்களில் இருந்து வந்த பார்வை, நான் கொஞ்சம் கொஞ்சமாகச் சாகிறேனே, என் எஜமானாகிய நீ என்னை ஏன் காப்பாற்ற மறுக்கிறாய்? என்று கேட்டுக்கொண்டே அந்த ஏரியில் மூழ்கிச் செத்துப்போனது' என்றான். இந்த நாயின் நிலைமையில்தான் அடிமைகள் இருந்தார்கள்.

கருப்பர்கள் மனிதர்களே அல்ல

அமெரிக்காவின் சுதந்திரப் பிரகடனத்தில், 'மனிதர்கள் எல்லோரும் சம உரிமை உடையவர்கள்' என்று இருக்கிறது. **'Men are created equal'** சமமாகப் படைக்கப்பட்டவர்கள் என்ற சொல் இருக்கிறது. ஆனால், அமெரிக்க நாட்டின் சுப்ரீம் கோர்ட்டின் தலைமை நீதிபதி கொடுத்த தீர்ப்பு, 'நீக்ரோக்கள் அடிமைகள். மனிதர்கள் அல்ல. அமெரிக்காவின் மனிதர்கள் பட்டியலில் இந்த நீக்ரோக்களைச் சேர்க்க முடியாது. இவர்கள் மனிதர்களே அல்ல. ஆகவே, மனித உரிமைகள் என்ற கேள்வியே எழவில்லை' இது சுப்ரீம் கோர்ட் தீர்ப்பு. டிரெட்ஸ்காட் வழக்கில் வழங்கப்பட்ட தீர்ப்பு. 1852 ஆம் ஆண்டில் வந்த கொடுமையான தீர்ப்பு இது.

'மனிதர்களே அல்ல' என்று மறுக்கப்பட்ட நிலையை எதிர்த்து எழுதிய, **'Uncle Tom's Cabin'** புத்தகம், தெற்கு மாநிலங்களிலே தடை செய்யப்பட்டது. அமெரிக்க நாட்டின் விடுதலைப் போராட்ட வரலாற்றில், உள்நாட்டுப் போரில், ஆபிரகாம் லிங்கன் அடிமை ஒழிப்புச் சாசனத்தில் கையெழுத்து இட்டாரே, அதற்குக் காரணமாக அமைந்த உள்நாட்டுப் போரில், இந்த நூல்தான் அந்த உணர்வுகளை ஏற்படுத்தியது. மனித உரிமை இலக்கியங்கள் என்று பார்க்கிறபோது, இந்தப் பெண்மணி எழுதிய நூலை, வரலாற்றில் ஒரு மைல் கல்லாகவே நான் பார்க்கிறேன்.

எத்தனையோ கவிஞர்கள் இருக்கிறார்கள். வால்ட் விட்மன் சொன்னான், **'புல்லின் சிலைகள்'** என்கின்ற அற்புதமான கவிதையில்! என் நண்பனே, இது புத்தகம் அல்ல. - இது ஒரு மனிதன். இதைத் தொட்டுப்பார். நான் எழுதியது புத்தகம் அல்ல, 'மனிதன்' என்று குறிப்பிட்ட அந்த நாட்டிலே தான், உரிமைகளைப் பெறுவதற்காக இலக்கியங்கள் தீட்டப்பட்டதைச் சுட்டிக் காட்டினேன்.

கார்க்கியின் 'தாய்'

உழைப்பினைச் சுரண்டி, மனிதர்கள் அடிமைகளாக நடத்தப்படும் ஒரு சமூக அமைப்பை எதிர்த்து, அன்றைய சோவியத் ரஷ்யாவில் புரட்சி வெடித்தது. அந்தப் புரட்சியைத் தலைமை தாங்கி நடத்தியவர் மாமேதை லெனின். இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில், உரிமைகளுக்காக நடைபெற்ற ரஷ்யப் புரட்சிக்குக் காரணமாகச் சொல்லப்பட்ட பல நூல்களில், மாக்சிம் கார்க்கியின், 'தாய்' என்ற அற்புதமான நூலைச் சொல்வார்கள். அது ஒரு இலக்கியம்.

'26 பேரும் அந்த இள நங்கையும்'

அதைப்போல, '**புயல் பறவை**' என்கின்ற பாடல் தொகுப்பு, '**ராஜாளி**' என்கின்ற பாடல் தொகுப்பு மிக அற்புதமானவை. இவைகளை விட லெனினை மிகவும் கவர்ந்தது, **'The 26 mens and a single girl'** '***26* பேரும் அந்த இள நங்கையும்**' என்ற மாக்சிம் கார்க்கியின் இந்தக் கதைதான், லெனினின் நெஞ்சைக் கவர்ந்த கதை என்று, அவரது துணைவியார் குரூப்ஸ்காயா குறிப்பிட்டு உள்ளார். மாஸ்கோ நகரத்தில் ஒரு ஈர நிலவறையில் நோயாலும், பசியாலும், வாடி வதங்கிய 26 தொழிலாளர்களை அடைத்து வைத்து இருக்கிறார்கள். அதன் மேல்தட்டத்தில் தையல் தொழில் நடைபெறுகிறது. அங்கே, தையல் தொழிலில் ஈடுபட்டு இருக்கிறாள் 16 வயது நங்கை தானியா. இந்த 26 பேரும் மிகக் கொடுமையான முறையில் சித்திரவதைக்கு ஆளாக்கப்படுகிறார்கள். உண்ண உணவு இல்லை. நோய்களுக்கு மருந்து இல்லை. பல்வேறு நோய்களில் அவர்கள் அப்படியே நிலவறையில் வாடி வதங்குகிறார்கள். அவர்களது வேதனைகளையும், தானியா அவர்களுக்கு உதவியதையும் எழுதி இருக்கிறார்.

கார்க்கி

இலக்கியங்கள்தான் சமூக மாற்றங்களைக் கொண்டு வந்தது. மிகப்பெரிய மாற்றங்கள் என்று சொல்லப்பட்ட பிரெஞ்சுப் புரட்சியாகட்டும், அமெரிக்க உள்நாட்டுப் போராகட்டும், மார்க்ஸின் குரலாகட்டும், ரஷ்யப் புரட்சியாகட்டும், அதற்குப்பின்னர் சீனத்தில் விடுதலைக்காக ஏற்பட்ட மிகப்பெரிய புரட்சியை மாவோ நடத்திக் காட்டினானே, இவை எல்லாவற்றுக்கும் அடிப்படை இலக்கியங்களே. '**நூறு பூக்கள் மலரட்டும், நூறு சிந்தனைகள் முகிழ்க்கட்டும்**' என்ற கவிஞன் மாவோவின் கவிதைகளே சீனத்தில் உணர்வுகளை ஊட்டிற்று.

ஏழை படும் பாடு

இந்தப் புரட்சிகளின் காலத்திற்குப் பின்னாலே மீண்டும் வருகிறது, இந்த இருபதாம் நூற்றாண்டில் கியூபாவின் புரட்சி. அதை நடத்திய மாபெரும் தலைவன் இன்றைக்கும் உயிரோடு இருக்கிறான். அவன்தான் ஃபிடல் காஸ்ட்ரோ. அவன் மனதைக் கவர்ந்த புத்தகங்களுள் ஒன்றுதான் விக்டர் ஹ்யூகோ எழுதிய **'Les miserables'** - **'ஏழை படும் பாடு'** என்ற புத்தகம்.

மூன்றாம் நெப்போலியனின் சர்வாதிகாரத்தை எதிர்த்து எழுதியதற்காகச் சிறைபிடிக்கப்பட்டு, நாடு கடத்தப்பட்ட விக்டர் ஹ்யூகோ அவர் சிறையில் எழுதிய புத்தகம், **'ஏழை படும் பாடு'** என்ற தலைப்பிலே வந்தது. 'இந்த இலக்கியங்கள் படைத்த உணர்வுகள், பிரெஞ்சுப் புரட்சியில் நான் படித்த வால்டேரின் நூல்கள், இவைதாம் இந்த மண்ணில், வியட்நாம் மண்ணில் விடுதலைக் கொடியை உயர்த்தக்கூடிய உணர்ச்சியைத் தந்தது' என்று ஹோ-சி-மின் சொன்னார். நம் காலத்தில், நம் கண்முன்னே, அமெரிக்காவுக்கு எதிரான போரில் வியட்நாம் வெற்றி பெற்றது.

கடையனின் கடைத்தேற்றம்

அடிமை வாழ்வை எதிர்த்துப் போராடியவர்கள் அமெரிக்க நாட்டில் மட்டும் அல்ல, கருப்பர்களின் தாய் மண்ணாகிய ஆப்பிரிக்கக் கண்டத்திலே மிக இழிவாக நடத்தப்பட்ட கருப்பர் மக்களுக்காகவே வாழ்ந்து, 27 ஆண்டுகள் ரோபென் தீவுச்சிறையில் வாடிய நெல்சன் மண்டேலா எழுதுகிறார். 'எனக்கு இந்த உணர்வுகளை ஊட்டிய இலக்கியம் எது தெரியுமா? இந்திய நாட்டுக்கு விடுதலை வாங்கிக் கொடுத்த அண்ணல் மகாத்மாவின் மனம் கவர்ந்த அதே நூல்தான். 'ஜான் ரஸ்கின் எழுதிய **'Unto this Last'(கடையனின் கடைத்தேற்றம்)**. இந்த நூல்தான் எனக்கும் உணர்வு ஊட்டியது என்று யார் சொல்வது? நெல்சன் மண்டலோ சொன்னார். மகாத்மா காந்தி சொன்னார்: '1942 ஆம் ஆண்டில் இந்த ஆகஸ்ட் 8 இல்தான் புரட்சி வெடித்தது அல்லவா? அந்தக் காலகட்டத்தில் சொன்னார். என் வாழ்வை மாற்றி அமைத்தது ரஸ்கின் எழுதிய **'Unto this Last'(கடையனின் கடைத்தேற்றம்)** என்கிற நூல்தான்' என்று. ஒரு இலக்கியம் மகாத்மாவின் வாழ்வையே நெறிப்படுத்தியது என்று அவர் கூறுகிறார் என்றால், எவ்வளவு வலிமை வாய்ந்தவை இலக்கியங்கள்!



எந்தச் சமுதாயத்திலே இலக்கியம் மதிக்கப்படுகிறதோ, எந்தச் சமுதாயம் இலக்கியத்தின் நெறிகளைப் போற்றுகிறதோ, அந்தச் சமுதாயம் உயர்வாக இருக்கும். எந்த சமுதாயம் இலக்கியத்தின் நெறிகளை மறக்கிறதோ, அந்தச் சமுதாயம் பாழ்பட்டுப்போகும்.

இன்றைக்கு, வரலாற்றின் திருப்புமுனையில் நின்று கொண்டு இருக்கிறோம் நாம். இங்கே நான் அரசியல் பேச மாட்டேன். அரசியல் பேசும் இடமும் இது அல்ல.

உலகம் போற்ற வாழ்ந்தவன் தமிழன். இந்த உலகமே இப்படித்தான் இருக்க வேண்டும் என்ற நெறிகளை, இலக்கியத்தில் தந்தவன் தமிழன். அவனுடைய எதிர்காலம் என்ன? தமிழ்ச் சமுதாயத்தின் எதிர்காலம் என்ன? என்பதைக் கவனிக்கின்ற நேரத்தில், இந்த நாட்டின் விடுதலைப் போராட்டத்திற்கு எவையெல்லாம் காரணமாக இருந்தன என்று ஆய்வு நடத்தியபோது, எண்ணற்ற நூல்களைச் சொல்லலாம்.

கீதாஞ்சலி

கவியரசர் ரவீந்திரநாத் தாகூர், ஜாலியன் வாலாபாக் கொடுமைக்குப்பின் ஆங்கில அரசு தந்த பட்டங்களை உதறினார். **'கீதாஞ்சலி'** கவிதை தந்த தாகூரின் கவிதைகளில்தான், அறிவார்ந்த மக்களாக இருக்க வேண்டும், அச்சம் இன்றி இருக்க வேண்டும் என்று நாவுக்கரசர் சொன்னதை, வள்ளுவர் சொன்னதை, தாகூர் சொல்கிறார்.


ரவீந்திரநாத் தாகூர்

'Where the mind is without fear,
where knowledge is free
where the head is held high.....
into that heaven of freedom,
My father, let my country awake'

எங்கே மனம் அச்சம் அற்று இருக்கிறதோ, எங்கே அறிவு தலை நிமிர்ந்து இருக்கிறதோ, அந்த சுதந்திரத்தின் சொர்க்கத்தில் இந்த நாடு விழித்து எழட்டும். அறிவு தலைதூக்கி நிற்க வேண்டும். பகுத்தறிவு தலைதூக்கி இருக்க வேண்டும்.

எப்பொருள் யார்யார் வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு

என்று வள்ளுவப் பெருந்தகை சொன்னார். அந்தப் பகுத்தறிவை ஊட்ட

வேண்டிய வேளை எப்பொழுது வந்தது? 'பிறப்பால் இவன் உயர்ந்தவன், பிறப்பால் இவன் தாழ்ந்தவன், பிறக்கும்பொழுதே அடிமையாகப் பிறக்கிறான், தொழுவத்தில் அடைக்கப்பட்டு இருக்கிற பட்டிமாடுகளைப் போல நடத்தலாம் என்பது தமிழர்களின் தத்துவம் அல்ல. தமிழர்களின் வாழ்க்கை அல்ல. தமிழர்களின் நெறி அல்ல.

அப்படித் திணிக்கப்பட்ட வர்ணாசிரமத்தை எதிர்த்து, நமக்கு முற்றிலும் மாறுபட்ட கருத்துகளை எதிர்த்து, ஒரு கலாச்சாரப் படையெடுப்பு நடத்தப்பட்டதன் விளைவாக, தமிழகம் தாழ்ந்து விட்ட காரணத்தினாலே அதை எதிர்த்துத் தந்தை பெரியார் போர்முரசு கொட்டினாரே, அந்த வழியில் இந்த நாட்டின் இளைஞர் சமுதாயத்தை வார்ப்பித்தவர் பேரறிஞர் அண்ணா. அவர் வடித்த நாடகங்கள், சிறுகதைகள், நாவல்கள், கட்டுரைகள், தம்பிக்குத் தீட்டிய கடிதங்களே இலக்கியங்கள்தாம். அவற்றின் மூலமாகத் தம் தம்பிகளை அவர் வார்ப்பித்தார்.

அண்ணாவின் இலக்கியம்

அதைப்பற்றி நிறையச் சொல்வதற்கு நேரம் இல்லை. ஒரேயொரு நாடகம்தான். **'சிவாஜி கண்ட இந்து ராஜ்யம்' அல்லது 'சந்திரமோகன்'.** அது மராட்டியத்தின் வீர வரலாறு. ஆம், சிவாஜியின் வாளுக்கு முன்னால் கல்யாண் கோட்டை விழுந்தது. புரந்தர் கோட்டை சாய்ந்தது. அவனை எதிர்த்து நிற்கும் படைகள் எங்கும் இல்லை. ஆனால், அந்த சத்திரபதி சிவாஜிக்கு, வாளின் முனையில் சேனைகளைச் சிதறடித்த சிவாஜிக்கு, முடிசூட்டும் படலம் வருகிறபோது; அவன் காகபட்டரின் காலைக் கழுவி, மண்டியிட்டு, தங்க நாணயங்களால் அவனை அபிஷேகம் செய்து, பாப விமோசனம் பெற வேண்டும்' என்றகொடுமை இருந்தது அல்லவா, இதை அண்ணல் அம்பேத்கார் அவர்கள் அருமையாகத் தீட்டி இருக்கிறார்.

இதைத்தான் சந்திரமோகனில் அறிஞர் அண்ணா கூறினார். காடுகளில் பாசறைகள், மலைகளில் கோட்டைகள், இவை எல்லாம் யாரால் வந்தது? சிவாஜியின் வாள் தந்தது. அது உலர்ந்த சருகைக் கண்டு பதுங்குவானேன்? என்று சொல்லிவிட்டு, 'வாள் ஏந்த வேண்டிய தேவை இல்லை. பகுத்தறிவு ஆயுதம் ஏந்திச் செல்லுங்கள்' என்றார். எனவே, இந்த நாட்டின் வரலாற்றில் எந்த இலக்கியங்கள் தமிழனுக்கு வாழ்வு கொடுத்ததோ, உயர்வு கொடுத்ததோ, வழிகாட்டிய அதே இலக்கியத்தின் மூலமாக மறுமலர்ச்சியை உருவாக்கித் தந்தவர் பேரறிஞர் அண்ணா.

'இங்கே பாவேந்தர் பாடலில் சொன்னார்கள்.
கொலை வாளினை எடடா

மிகுகொடியோர் செயல் அறவே
மண்மீது உழைப்பார் எல்லாம் வறியராம்
அவர் புண் மீது அம்பு பாய்ச்சும் புலையர் செல்வராம்
அதைத்தன் கண்மீது பகலில் கண்டு
அந்திக்குப்பின் விண்மீனாய் கொப்பளித்த
விரிவானம் பாராய் தம்பி'

மஞ்சுக்கூட்டம் நிறைந்து இருக்கிறது பொள்ளாச்சி நகரில். இக்கூட்டம் நடைபெறும் நேரத்திலே மழை மேகங்கள் சூழ்ந்து இருக்கின்றன. இந்த மழை மேகங்கள் கலைந்து, நிர்மலமான இரவில், விழிகளின் படலத்துக்குள் பதியக்கூடும் தாரகைகள், நட்சத்திரங்கள், கவிஞர்களுக்குப் பலவிதமான கற்பனைகளைத் தரும். விண்நிலவு ஓடிச்செல்கிறபோது காதலர்களுக்குப் புதிய கனவுகளைத் தருவதுபோல! ஆனால், பாவேந்தர் பார்வையில், 'ஒடுக்கப்பட்ட, துன்புறும் ஏழை மக்களுக்கு இழைக்கப்படும் கொடுமைகளைக் கண்டு, வானம் புண்ணாகக் கொப்பளித்து விட்டது. அதுதான் விண்மீன்' என்றாரே, அந்தப் பாவேந்தன் படைத்தவை இலக்கியங்கள்!

பிரேம்சந்தின் 'ரங்கபூமி'

இலக்கியங்கள் என்று சொல்கிறபோது, கதை, நாடகம், நாவல் என எல்லாமே இலக்கியங்கள்தாம்! பிரேம்சந்த் ஒரு அருமையான நாவல் ஆசிரியர். இன்றைக்கு மண்ணில் நிலத்திற்காக நடக்கின்ற போராட்டத்தை, நிலங்களைக் கபளீகரம் செய்வதற்கு, எங்கெங்கோ இருந்து கோடீஸ்வரர்கள் பணவலையை வீசி ஏழை விவசாயிகள் வாழ்வைச் சீரழிக்கிற கொடுமை நடக்கிறது என்று சொல்கிறோமே, இதைத்தான் **'ரங்கபூமி'** என்கின்ற அருமையான நாவலாக பிரேம்சந்த் படைத்து இருக்கிறார். சூர்தாஸ், ஒரு குருட்டுப் பிச்சைக்காரன். அவனது கிராமத்தில் 2 ஏக்கர் நிலம் அவனது பூர்வீகச் சொத்து. அங்கே பெரிய பண்ணையார் இருக்கிறார். நிலங்களை எல்லாம் வளைத்துப்போட்டு விட்டார். இந்த நிலத்தை குறைந்த விலைக்கு எனக்குக் கொடுத்து விடு என்று சூர்தாசிடம் கேட்கிறான். அவன் தர மறுக்கிறான்.

எதற்காகத் தெரியுமா? அந்தப் பகுதியில் இருக்கக்கூடிய ஆடு,மாடுகள், இந்த நிலத்தில் வளருகிற புல்லை மேய்ந்து வயிறு வளர்க்கின்றன. 'இந்தக் கால்நடைகளுக்கு என் நிலம் பயன்படுகிறது; எனவே இதை விற்க மாட்டேன்' என்கிறான். கொடுமைகள் நடக்கிறது. அவன் குடிசை தீ இடப்படுகிறது. பேரப்பிள்ளைகள் கூக்குரல் இடுகிறார்கள்,அழுகிறார்கள்.

அப்பொழுது அவன் சொல்கிறான்: 'நேற்று மாலை பள்ளி மாணவர்கள் விளையாடிக் கொண்டு இருந்தார்கள். அவர்கள் விளையாடும் சத்தம் என் செவியிலே கேட்டது. அவர்களுக்குள் சிறிய சண்டை வந்து விட்டது. அப்போது யாரோ ஒருவன் அடித்து விடுகிறான். அவன் அழுகிறான். உடனே இன்னொருவன் சொல்கிறான், விளையாட்டுத்தானே, இதற்கு ஏன் அழுகிறாய்? இதற்கெல்லாம் அழலாமா? என்று இந்த விளக்கத்தைச் சொல்லிவிட்டு, 'குடிசை எரிந்தால் என்ன? இன்னொரு குடிசையைக் கட்டிக்கொள்வோம், அந்தக் குடிசையையும் எரித்தால், மீண்டும் கட்டிக்கொள்வோம், 10 முறை எரித்தால் 10 முறை கட்டிக்கொள்வோம், 100 முறை எரித்தால், 100 முறை கட்டிக்கொள்வோம்' என இப்படியே பேரப்பிள்ளைகளுக்குச் சொல்லிக்கொண்டு இருக்கிறான்.

கடைசியில் அவன் கட்டாரியால் சாய்க்கப்படுகிறான். மரணவாசலில் உயிர் ஊசலாடுகிறது. அவனைத் தாக்கியவர்கள் உட்பட எல்லோரும் கூடுகிறார்கள். அப்பொழுது சொல்கிறான், 'எனக்கு உங்கள் யார் மீதும் கோபம் இல்லை. பள்ளிப் பிள்ளைகள் விளையாட்டுத்தானே? வாழ்க்கையும் ஒரு விளையாட்டுதான். உங்கள் விருப்பத்தை நீங்கள் நிறைவேற்றினீர்கள், என் எண்ணத்தை நான் நிறைவேற்றினேன். ஆகவே, இதில் எனக்கு எந்தக் கோபமும் இல்லை' என்று சொல்லிக்கொண்டே செத்துப்போகிறான்.

அதாவது, தன் நிலத்தை மட்டும் அல்ல, அந்த நிலத்தைப் பிறருக்கு ஆடு,மாடுகளுக்குப் பயன்படுத்துகிற அந்த உணர்வு இருந்தது என்று சொன்னால், தான் ஏறி வந்த மணித்தேரை, வாடுகிற முல்லைக்கொடிக்குத் தந்துவிட்ட மன்னர்கள் வாழ்ந்த நாடு இந்த நாடு. பிறருடைய துயரத்தைத் தாங்கிக் கொள்ள முடியாமல், தங்களை அர்ப்பணித்துக் கொண்ட கண்ணப்பர்கள் வாழ்ந்த நாடு இந்த நாடு.

இப்படிப்பட்ட நாட்டில், உரிமைப் போராட்டத்தைப் பற்றிச் சொல்கிற வேளையில், எத்தனையோ சொல்லிக் கொண்டே போகலாம். நாடக இலக்கியங்கள், சிறுகதை இலக்கியங்கள், அதிலும், மராட்டியத்து காண்டேகரின் அற்புதமான படைப்புகள். தமிழகத்தின் எத்தனையோ படைப்பாளிகள் இவற்றை எல்லாம் நான் சொல்லிக்கொண்டு போகிறதைவிட, இன்றைக்கு இந்தக் காலகட்டத்தில் அண்ணா அவர்கள் குறிப்பிட்டதை நான் குறிப்பிட்டேன் அல்லவா?

அறிஞர் அண்ணா அவர்கள், அமெரிக்க நாட்டின் யேல் பல்கலைக்கழகத்துக்குச் சென்றார்கள். அங்கே இதைப்போல மாணவர்கள்

அண்ணாவிடத்திலே தமிழ் கோட்பாடுகளைப் படிக்கப் போனார்கள். அவர்களுக்கு அண்ணா ஆங்கிலத்தில் சொல்லிக் கொடுத்தார். தமிழனின் பெருமையை, திருக்குறளை எடுத்துச் சொன்னார். இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னால் தமிழகத்தில் இருந்த நெறிகளை, யேல் பல்கலைக் கழக மாணவர்களுக்கு, தமிழ் இலக்கியத்தை எடுத்துச் சொன்னார்.

இதயத் தராசில் எடைபோடுங்கள்

அந்தப் பல்கலைக் கழகத்திற்கு ஒரு கோட்பாடு இருக்கிறது. அது அண்ணாவின் மனதை மிகவும் கவர்ந்தது. **If not I, then Who? If not now, then when?** ஒவ்வொரு இளைஞனும், ஒவ்வொரு தங்கையும், நான் இல்லாவிட்டால் வேறு யார் எதையும் சாதிப்பதற்கு? எந்தத் துறையாக இருக்கட்டும். நீங்கள் தேர்ந்து எடுக்கிற எந்தத் துறையாக இருக்கட்டும். எழுத்துத் துறையா? சிற்பியைப்போல கவிதைத் துறையா? பொறியியல் துறையா? கழனியில் வாழ்க்கை நடத்துகிற விவசாயமா? ஓவியமா? கலைகளா? நாட்டின் தலைவிதியினைத் தீர்மானிக்கும் அரசியலா? எந்தத் துறையை வேண்டுமானாலும் நீங்கள் தேர்ந்து எடுத்துக் கொள்ளுங்கள்.

என்னால் முடியும் என்ற நம்பிக்கைக்கு வாருங்கள். என்னால் முடியாவிட்டால் பிறகு யாரால்? இதை எப்பொழுது நடத்துவது? நாளையா? நாளை மறுநாளா? ஒத்தி வைக்காதீர்கள். **If not now, then when?** பிறகு எப்பொழுது? இப்போதே எந்த உணர்வோடு இந்தக் கருத்துகளைப் பேரறிஞர் அண்ணா கூறினார் என்கிறேனே, நிகழ்கால உலகத்திற்கு வருவோம். சற்றுநேரத்திற்கு உங்கள் செவிகளில் விழுகிற கருத்துகளைத் தருகிறவன் கருப்புத் துண்டு அணிந்து இருக்கிற ஒரு அரசியல் கட்சியைச் சேர்ந்தவன், ஒரு குறிப்பிட்ட கோட்பாட்டிற்காக வாழ்நாளில் பெரும்பகுதியைச் செலவழித்தவன் என்பதைச் சற்று நேரத்திற்கு மறந்துவிட்டு, உங்களுடைய இதயத்தைத் தராசின் முனையில் வைத்துக்கொண்டு,

அச்சமும் அவலமும் ஆர்வமும் நீக்கி
செற்றமும் உவகையும் செய்யாது காத்து
ஞமன்கோல் அன்ன சீர்மைத் தாகி
சிறந்த பெயர் அறங்கூர் அவையமாக

வாழ்ந்த தமிழகத்தில், உங்கள் இதயத்தைத் தராசு முனையில்

வைத்துக்கொண்டு நான் சொல்வதை எடைபோட்டுப் பாருங்கள்.

உரிமைப் போராட்டங்கள்

நிகழ்காலத்திற்கு வருவோம். இன்றைக்கு உரிமைக்குப் போராடுகின்ற சமூகம் எது? அடிப்படை உரிமைகளுக்குப் போராடுகிறவர்கள் யார்? பாலஸ்தீனத்தில் உரிமைப் போராட்டம், கிழக்குத் தைமூரில் உரிமைப் போராட்டம், போஸ்னியாவில் உரிமைப் போராட்டம், கொசோவாவில் உரிமைப் போராட்டம், ஏன், ஆஸ்திரேலியாவில்கூட அனீஃப் முகமதுவை விடுவிப்பதற்கு உரிமைப் போராட்டம். இவை எல்லாம் நம் கண்முன்னால் நடக்கும் காட்சிகள்!

ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்னால் வள்ளுவன் வாழ்ந்த தமிழகத்தை, கரிகாலன் வென்ற தமிழகத்தை, இளங்கோ வர்ணித்த தமிழகத்தை, அதற்குப்பின்னர் தேவார மூவர் வாழ்ந்த தமிழகத்தை, அப்பர் அடிகள் உலவிய தமிழகத்தை, பாவேந்தர் பாடிய தமிழகத்தை, அண்ணா அரசியல் ஒளிவிளக்கை உயர்த்திப் பிடித்த தமிழகத்தைச் சுட்டிக்காட்டாமல் போனால், நான் கடமை தவறியவன் ஆவேன்.

நம் கண் முன்னால் உரிமைகள் எங்கு மறுக்கப்படுகிறது என்று பாருங்கள். இந்த நாட்டின் எதிர்காலத்தைத் தீர்மானிக்கிற தலைமுறை உங்கள் தலைமுறை. என்னுடைய தலைமுறை அல்ல. இனி அடுத்த 20 ஆண்டுகள் இந்தத் தமிழகமோ - இந்தியாவோ எப்படி இருக்க வேண்டும்? தமிழர் தரணி எப்படி இருக்கும்? தீர்மானிக்கின்ற இடத்தில் இருப்பவர்கள், வளரும் தலைமுறையைச் சேர்ந்த இந்த நாட்டின் எதிர்காலத்தை தீர்மானிக்கின்ற புதிய வார்ப்புகளாகிய நீங்கள்.

வால்டேரின் கருத்து

மனித உரிமைகளைப் பற்றிப் பேசுவதற்கு இவனுக்கு என்ன தகுதி உண்டு? என்று எனக்கு நானே கேட்டுக் கொண்டேன். 'உன் கருத்து எனக்கு உடன்பாடு அல்ல. ஆனால் உன் கருத்தை நீ சொல்வதற்கு, மரணம் வரையில் போராடுவேன்' என்று சொன்னான் வால்டேர். இந்த அடிப்படையை இந்த சமூகம் எண்ணிப் பார்க்கவேண்டும். என் கருத்து உங்களுக்கு உடன்பாடாக இல்லாமல் இருக்கலாம். ஆனால் என் கருத்தைச் சொல்கின்ற உரிமை இருக்கவேண்டும். உங்கள் கருத்து எனக்குப் பிடிக்காமல் இருக்கலாம். ஆனால், உங்கள் கருத்தைக் கேட்கின்ற மனப்பான்மை வேண்டும். இதுதானே ஜனநாயகக் கோட்பாடு. இதுதானே அடிப்படைத் தத்துவம். ஆகவேதான், உரிமைகளுக்காகப் பேசுகின்ற தகுதி

எனக்கு உண்டு என்று என் மனசாட்சி பதில் சொல்லும்.

புத்தாயிரம் ஆண்டு மலர்ந்ததற்குப் பின்னர், கி.பி. 2000 ஆம் ஆண்டில், ஏப்ரல் திங்கள் 3 ஆம் நாள், நான் ஜெனீவா நகரில் அமைந்து இருக்கின்ற ஐ.நா. மன்றத்தின் மனித உரிமைகள் ஆணையத்தின் கதவுகளைத் தட்டினேன். **Human Rights Commisson** வாசலிலே போய் நின்றேன். மனித உரிமைகள் ஆணையத்தின் துணைத் தலைவரைச் சந்தித்தேன். அற்புதமான ஒரு நடராசர் சிலையைக் கொண்டுபோய்க் கொடுத்தேன். தமிழ்நாட்டில் இருந்து என் பேக்கேஜில் தூக்க முடியாத பாரத்தோடு தூக்கிச் சுமந்து சென்று இருந்த அந்தப் பித்தளைச் சிலையை, மனித உரிமைகள் ஆணையத்தின் துணைத்தலைவரிடம் கொடுத்தேன். 'இது எங்களுடைய கலைப்பொக்கிஷம் என்றேன்.' நான் அதை மதக்கண்ணோட்டத்துடன் பார்க்கவில்லை. அந்தச் சிலையின் அழகைக்கண்டு வியந்த அந்த நல்ல மனிதர், 'இதை என் மேஜையில் வைத்துக் கொள்கிறேன்' என்றார்.

அப்போது அவரிடத்தில், 'நான் மனிதகுலத்தின் மனசாட்சியாகக் கருதுகிற ஐ.நா. மன்றத்தின் மனித உரிமைகள் ஆணையத்தின் வாசலில் வந்து நிற்கிறேன். ஈழத்தில் எங்கள் மக்கள் அழிந்துகொண்டு இருக்கிறார்களே, அவர்களுடைய உரிமைகளைச் சொல்வதற்கு நாங்கள் எங்கே போவது? எங்களுக்கு இதுதான் தேவாலயம். **'This is our Church - This is our Mosque - This is our Temple'** 'இதுதான் எங்கள் கோயில், இதுதான் எங்களுக்கு மசூதி, இதுதான் எங்களுக்குத் தேவாலயம். எனவேதான், இங்கே வந்து இருக்கிறேன்' என்று சொன்னேன்.

செம்மணி புதைகுழிகள்

தமிழ் ஈழத்தில் நடப்பது என்ன என்பதை விவரித்துவிட்டு, அங்கே 400 தமிழர்கள் கொல்லப்பட்டு, 'செம்மணி' என்ற இடத்தில் புதைக்கப்பட்டு இருக்கிறார்கள். அந்த அப்பாவித் தமிழர்கள், அப்பாவித் தமிழச்சிகள் செய்த பாவம் என்ன? தமிழனாகப் பிறந்ததுதான் பாவமா? செய்த குற்றம் என்ன? தமிழச்சியாகப் பிறந்ததா? பச்சிளம் குழந்தைகள் செய்த பாவம் என்ன? தமிழனுக்கும், தமிழச்சிக்கும் குழந்தையாகப் பிறந்ததுதான்.

கொன்று புதைக்கப்பட்டு அந்த 400 பேரும் ஆயுதம் ஏந்தியவர்கள் அல்ல. அவர்கள் துப்பாக்கி ஏந்தியவர்கள் அல்ல. அவர்கள் போர்க்களத்திற்குச் சென்றவர்கள் அல்ல. ஆனால், அவர்கள் புதைக்கப்பட்டு இருக்கிறார்கள். சிங்கள இராணுவத்தின் கொடுமையால் கொல்லப்பட்டு புதைக்கப்பட்டு இருக்கிறார்கள். கொசோவா என்கின்ற இடத்திற்கு ஐ.நா. மன்றத்தின்

சார்பில் Physicians of Human Rights என்ற அமைப்பின் சார்பில் நிபுணர்களை அனுப்பினீர்களே, அதே அமைப்பின் நிபுணர்களை நீங்கள் யாழ்ப்பாணத்திற்குப் பக்கத்தில் இருக்கும் செம்மணிக்கு அனுப்புங்கள். மண்ணைத் தோண்டச் சொல்லுங்கள். புதைக்கப்பட்ட பிணங்கள் அழுகிப்போய், மண்ணோடு மண்ணாக மக்கிப்போனதற்குப்பிறகு மிச்சம் இருக்கிற எலும்புக்கூடுகளை எடுத்துப்பாருங்கள் என்று கேட்டுக்கொண்டேன். அவ்விதமே செய்வதாகச் சொன்னார்.

நிபுணர்கள் அனுப்பப்பட்டார்கள். செம்மணி மண் தோண்டப்பட்டது. மொகஞ்சதாரோ, ஹரப்பா தோண்டப்பட்டபோது, இசையைத் தந்தவன் தமிழன், இசைக் கருவிகளைத் தந்தவன் தமிழன் என்று உலகத்தின் கண்களுக்குத் தெரிய வந்ததைப்போல், செம்மணியில் தோண்டி எடுக்கப்பட்ட எலும்புகளில் கைகளைப் பின்புறமாகக் கட்டி விலங்கு போடப்பட்ட நிலையில், குண்டுகளால் துளைக்கப்பட்ட பிணங்கள் கிடைத்தன. இதை ஏன் கூறுகிறேன் என்றால், மனிதஉரிமைகள் எப்படி மறுக்கப்பட்டு இருக்கின்றன என்பதை உங்கள் பார்வைக்குக் கொண்டு வருவதற்காகத்தான்.

ஈழத்தமிழ்ப் பெண்களின் துயரம்

இங்கே இருக்கக்கூடிய தங்கைகளுக்குச் சொல்வேன். அதன்பிறகு, மனித உரிமைகள் ஆணையத்தில் நிகழ்வுகளைப் பதிவு செய்வதற்காக இருக்கக்கூடிய குழுவினரிடத்தில் என்னை அனுப்பி வைத்தார். எட்டுப் பேர் உட்கார்ந்து இருந்தார்கள். அதில் 4 பேர் பெண்கள். நான் கையெழுத்து இட்ட சான்று ஆவணங்களை அவர்களிடத்தில் கொடுத்தேன். பேசச் சொன்னார்கள். பேசினேன். இரண்டொரு சம்பவங்களைத்தான் சொன்னேன். பொதுவாக மேலைநாட்டினர் அழுவது இல்லை, உணர்ச்சிவசப்படுவது இல்லை, கண்ணீர்விடுவது இல்லை என்றுதான் அதுவரை எண்ணிக்கொண்டு இருந்தேன். ஆனால் அந்த ஆணையத்தில் அமர்ந்த இருந்த பெண்களின் கண்களில், கண்ணீர் முத்துகள் திரண்டன.

முருகேசபிள்ளை கோனேஸ்வரி என்கிற ஒரு அம்மையார். வயது 35. மூன்று குழந்தைகளுக்குத் தாய். பார்ப்பதற்கு நல்ல தோற்றப் பொலிவு உள்ள பெண். வீடு புகுந்து இராணுவத்தினர் அந்தப் பெண்ணை நாசம் செய்து, கற்பழித்துக் கொன்று, சிதைந்துபோன உடலைத் தென்னந்தோப்பில் வீசிவிட்டுச் சென்றார்கள். பிணப் பரிசோதனைக்குப் போராட்டம் நடத்தி, மருத்துவர் பெரிஸ் அவர்கள் பிரேத பரிசோதனை நடத்தியபின்னர், மரணம் எப்படி நடந்தது என்று துணிச்சலாகக்

குறிப்பிட்டார். அந்தப்பெண் எப்படிக் கொல்லப்பட்டார் என்பதை, என் தங்கையர் உட்கார்ந்து இருப்பதால் இங்கே நான் சொல்ல முடியாது. அங்கே சொன்னேன். அவர் என்ன எழுதி இருக்கிறார்? இதுவரை நான் பார்த்து அறியாத, கேட்டு அறியாத முறையில் இந்தப் பெண் கொல்லப்பட்டு இருக்கிறார் என்று எழுதி இருந்தார்.

இன்னொரு பெண் ஹேமலதா. பள்ளிப் படிப்பு முடிந்து கல்லூரிக்குச் செல்கிறாள். 17 வயது. தேர்வுக்காக வீட்டில் பாடம் படித்துக் கொண்டு இருக்கிறாள். தாயும், தகப்பனும் தூங்கி விட்டார்கள். கதவு தட்டப்படுகிறது. கதவைத் திறக்கிறாள். இந்த அகால நேரத்தில் யார்? என்று பார்க்கிறார். சிங்கள இராணுவச் சிப்பாய்கள். தாயும் தகப்பனும் அரவம் கேட்டு விழிக்கிறார்கள். அவர்களை அடித்து உதைத்துக் கட்டிலில் கட்டிப்போட்டுவிட்டு, கதறக்கதற இந்தப் பெண்ணைத் தூக்கிக்கொண்டு போனார்கள். இரண்டு நாள்கள் கழித்து, சிதைந்து போன நிலையில் தோட்டத்தில் கிடைக்கிறது ஹேமலதாவின் உடல். இதை எல்லாம் மறுக்க முடியாத சாட்சியங்களோடு அந்த மன்றத்தில் போய் வைத்தேன். இப்படி ஓராயிரம் சம்பவங்கள்.

இப்பொழுது சில நாட்களுக்கு முன்பு, யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் பயில்கிற தர்ஷிணி என்கின்ற 16 வயதுப்பெண், சிங்கள இராணுவத்தினரால் கற்பழிக்கப்பட்டு, நாசமாக்கப்பட்டு, கல்லைக் கட்டிக் கிணற்றில் போட்டு இருந்தார்கள். சிலநாட்களுக்குப்பிறகு அந்த உடல் கண்டு எடுக்கப்பட்டு, உலகத்தின் பார்வைக்கு வந்தது. எத்தனை பேர் மனசாட்சியை இது தட்டி இருக்கிறது?

எது தீவிரவாதம்?

அங்கே **Uncle Tom's Cabin** இல் எழுதினாரே, நாயின் கழுத்திலே கல்லைக்கட்டிப் போட்டதைச் சொன்னதற்காகக் கொந்தளித்து எழுந்தான் ஆபிரகாம் லிங்கன்.

நான் கேட்கிறேன்.எது தீவிரவாதம்? தீவிரவாதம் ஏன் வருகிறது? ஒடுக்கப்பட்டுக் கிடக்கிறவர்கள், ஒரு நேரத்தில் அதை எதிர்த்துப் போராடவேண்டும் என்ற உணர்வு எழுகிறது. எப்பொழுது? மனிதர்களாக வாழ்வதற்காக, சம உரிமை உள்ளவர்களாக வாழ்வதற்காக, நாங்களும் மனிதர்கள் என்ற நிலையில் வாழ்வதற்காக!

அரசு அமைத்து வாழ்ந்தவர்கள் நாங்கள். எங்கள் நாடு இந்த ஈழத் தமிழ் மண். ஈழம் எங்கள் நாடு. சிங்களவர்களுக்கு நாங்கள் அடிமைகளாக இருக்கமாட்டோம் என்று போராடுகிறார்கள். அவர்களுக்கு விரோதமான

செய்திகள்தானே 99 விழுக்காடு தமிழ்நாட்டு ஊடகங்களில் வருகிறது. எளியவன் சொல்வதைக் கேளுங்கள். அதை ஏற்றுக்கொள்ளச் சொல்லவில்லை. நீங்கள் படித்துத் தெரிந்து கொள்ளுங்கள்.

வருங்கால உலகத்தை வார்ப்பிக்கப்போகிற என் அன்பிற்கு உரிய இளைஞர்களே, அருமைத் தங்கைகளே, அவர்கள் தரப்பு என்ன என்பதைப் படியுங்கள், கேளுங்கள். ரத்தத்தால் நம்மவர்கள் அல்லவா? ஓடும் குருதி ஓட்டத்தில், கலந்து இருக்கும் தமிழ் உணர்ச்சியால் தமிழர்கள் அல்லவா? தெரிந்து கொள்ளுங்கள். அவர்கள் ஏன் போராடுகிறார்கள்? எதற்காக ஆயுதப் போராட்டம்? ஏன் இந்த நிலைமை? என்பதைப் படியுங்கள்.

உணர்ச்சிக் கவிதைகள்

மனிதஉரிமைக்காக அந்தக் கவிஞர்கள், அது இரத்தினதுரையாக இருக்கட்டும், காசி ஆனந்தனாக இருக்கட்டும். அவர்கள் தீட்டிய கவிதைகள்.

பத்துத் தடவை பாடை வராது
பதுங்கிக் கிடக்கும் புலியே தமிழா
சிரித்துக் கொண்டே செருக்களம் வாடா!

என்ற அந்தக் கவிதைகள், உணர்ச்சிக் ஊட்டகூடியன!

போர்க்களத்திற்குப் போகிறான். மார்பில் குண்டு பாய்கிறது. மடியப்போகிறான். இரத்த வெள்ளத்தில் கிடக்கிறான். அப்போது அவன் சொல்கிறான். 'எனக்கு இதைவிட என்ன பாக்கியம் இருக்க முடியும்? "நான் சாகப்போகிறேன். என் சகோதரனே, என்னை ஆழமாகக் குழிதோண்டிப் புதைத்து விடு. என் கையில் இருக்கிற துப்பாக்கியை நீ தூக்கிக் கொண்டு செல். ஏன் என்னை ஆழமாக புதைக்கச் சொல்கிறேன் தெரியுமா? இப்போது உடனடியாக நாய் நரிகள் என் உடலைத் தோண்டித் தின்றுவிடக் கூடாது. வேறு எதற்காகவும் அல்ல. இனி எதிர்காலத்தில் நம் தோழர்களுக்குக் கைகளில் ஆயுதம் கிடைக்காவிட்டால், என் எலும்புகள் அவனுக்கு ஆயுதங்களாகப் பயன்படட்டும்' என்கிறான்.

ஓ மரணித்த வீரனே உன் சீருடைகளை எனக்குத் தா
உன் காலணிகளை எனக்குத் தா
உன் ஆயுதங்களை எனக்குத் தா

எனக்கு மிகமிக பிடித்தப் பாடல் இலக்கியம் என்றால், உரிமைகளுக்கு முரசு கொட்டுகிற பாடல். இந்தப் பாடலை ஷெல்லி சொன்னால் வரவேற்குமா உலகம்? ஷெல்லி இதைத்தானே சொன்னான். மகாத்மா காந்தி இதே கவிதையை 1942 இல் சுட்டிக் காட்டினாரே?

சிங்கங்களைப் போல விழித்து எழுங்கள்
உறக்கத்தில் இருந்து எழுங்கள்
அளவிட முடியாத எண்ணிக்கையில் வாருங்கள்
தூக்கத்தில் இருந்து விழத்து எழுந்து வாருங்கள்
பனித்துளிகளை உதறுவதைப்போல உங்கள்மீது பூட்டப்பட்ட
விலங்குகளைச் சிதறி அடியுங்கள்.
நீங்கள் பலர் – அவர்களோ சிலர்

இதையே இந்த நாட்டின் கோடிக்கணக்கான இளைஞர்களின் நம்பிக்கை நட்சத்திரமாக, இன்றைக்கு நாட்டின் உயர்பதவியில் இல்லாவிட்டாலும் எந்நாளும் இதயப்பதவியில் இருக்கின்ற அப்துல் கலாம், தன்னுடைய 'அக்னிச் சிறகுகளி'ல் சொன்னார். ஒரு மத்திய தரக் காலத்தில் எழுதப்பட்ட கவிதையை, இலக்கியமும் உரிமைகளும் என்பதால் அவர் வார்த்தைகளைச் சொல்வதையே பொருத்தமாக இருக்கும் என்பதால் சொல்கிறேன்.

all the days you prepare
meet them ever alike
எல்லா நாளும் ஆயத்தமாகுங்கள்
எல்லா நாட்களையும் சமமாகவே கருதுங்கள்
when you are the anvil, bear,
பட்டறையாக இருக்கிற காலத்தில் அடிவாங்கிக்கொள்
when you are the hammer, strike
நீயே சம்மட்டியாக மாறுகிறபோது அடி!

நன்றி, வணக்கம்.

(பொள்ளாச்சி நல்லமுத்து கவுண்டர்-நா.மகாலிங்கம் கல்லூரியின் பொன்விழாத் தொடக்க நிகழ்வில், 7.8.2007 அன்று வைகோ ஆற்றிய உரை)

வெற்றியை விரும்புவோர்...

படிக்க வேண்டிய நூல்கள்

- திருக்குறள்
- Encyclopaedia Britannica (Book Rs.45,000 or CD Rs.2000)(தமிழிலும் உள்ளது)
- National Geographic Traveller (ஒவ்வொரு நாட்டைப் பற்றியும் முழுவிவரங்கள் அடங்கிய சுற்றுப் பயண வழிகாட்டிப் புத்தகங்கள்)
- உலகின் சிறந்த 100 புத்தகங்கள்
- உலகை மாற்றிய விஞ்ஞானிகள் - 12 புத்தகங்கள்
- People Who have helped the World - 26 books
- Organizations that helps the world - 6 books (மூன்றும் Orient Longman வெளியீடு)
- 100 Great 19th Century Lives
- 100 Great Adventures
- 100 Great Speeches
- Webster's New World Dictionary of Quotations
- Guinness Book of World Records
- Competition Success Year Book
- Manorama Year Book
- Limca Book of records
- Glimpses of World History
- Shakespeare Drama's
- Gulliver's Travel
- பஞ்ச தந்திரக் கதைகள்
- ஈசாப் நீதிக் கதைகள்
- தெனாலிராமன் கதைகள்
- சிந்துபாத் கதைகள்
- ஜென் கதைகள்
- Time - Stephen Hawkins
- Tell me What?
- Tell me When?
- Tell me Where?
- Tell me How?
- Tell me Who?
- Tell me About.
- புதிய வரலாறு படைத்தோரின் வரிசை முறை - 100 பேர்
- உலகின் சிறந்த 100 சொற்பொழிவுகள்
- உலக சரித்திரம் - நேரு
- ஆங்கிலம் - தமிழ்ச் சொற் களஞ்சியம்
- கணினி கலைச்சொல் களஞ்சியம்
- இன்டர்நெட்
- உச்சி முதல் உள்ளங்கால் வரை (3 பாகம்)
- சிலப்பதிகாரம் & தொல்காப்பியம்
- புறநானூறு, அகநானூறு, சங்க இலக்கியங்கள், கருணாமிர்த சாகரம் (தமிழ் இசை நூல்), தமிழ்த் திரைப்பட வரலாறு
- பகுத்தறிவுக் கருத்துகள் அடங்கிய பெரியார் கணினி, பெரியார் களஞ்சியம். பெரியார் ஈ.வெ.ரா.சிந்தனைகள்
- கம்ப இராமாயணம் & மகாபாரதம்
- தேவாரம், திருவாசகம், திருமந்திரம்
- பைபிள் & குர் ஆன் & பகவத் கீதை
- அர்த்தசாஸ்திரம் & The Prince
- மரியாதை ராமன் கதைகள்
- விக்கிரமாதித்தன் கதைகள்
- இராயர் - அப்பாஜி கதைகள்
- அக்பர் - பீர்பல் கதைகள்
- முல்லா நஸிருத்தீன் கதைகள்
- 1001 இரவு அரபுக் கதைகள்
- பரமார்த்த குருவும், சீடர்களும்

உலகில் சொல்லப்பட்டு வருகின்ற அனைத்துத் தத்துவங்களும், நாம் தெரிந்து கொள்ள வேண்டிய செய்திகளும் மேற்கண்ட நூல்களில் அடங்கி உள்ளன. எனவே, இந்த நூல்களை நீங்கள் படிப்பதுடன், உங்கள் குழந்தைகளை 17 வயதுக்குள் ஒருமுறை படிக்கச் செய்து விடுங்கள். குறிப்பாக, நாள்தோறும் ஒரு திருக்குறளை உங்கள் குழந்தைகளுக்கு, நீங்கள் படித்துக்காட்டி விளக்கம் சொல்லுங்கள். அவர்களின் வாழ்நாள் முழுமையும், அவர்களுடைய காதுகளில் உங்கள் குரல் ஒலித்துக்கொண்டே இருக்கும். நன்மை பயக்கும். மேற்கண்ட நூல்கள் அனைத்தையும் விலைகொடுத்து வாங்க இயலாவிடினும், நூல் நிலையங்களில் தேடிப்பிடித்துப் படியுங்கள். உடல்நலம்-மருத்துவம், விண்வெளி, பொறியியல் கண்டுபிடிப்புகள், பயண நூல்களைப் படியுங்கள். பக்தி, சோதிடம் போன்ற பொய்களைப் படிக்காதீர்கள். தொடர்கதைகள், கவிதைகள் போன்ற கற்பனை இலக்கியங்களில் உங்கள் பொன்னான பொழுதை வீணாக்காதீர்கள். ஒவ்வொரு துறையிலும் சிறந்த நூல் எது என்பதை விசாரித்துத் தெரிந்துகொண்டு, அதைமட்டும் படியுங்கள்.

பிறர் எழுதிய நூல்களைப் படிப்பது மட்டும் போதாது; உங்கள் வாழ்க்கைக் குறிப்புகளை, உங்கள் கருத்துகளை மட்டும் தொகுத்து ஒரு நூலாக நீங்கள் எழுதுங்கள். உங்கள் நூல்களில், 'புணர்ச்சி விதி' என்ற பெயரில் இரண்டு சொற்களைச் சேர்த்து எழுதாதீர்கள். 21 ஆம் நூற்றாண்டு இளைய தலைமுறையினருக்குஎளிதில் புரிகின்ற வகையில், தமிழ்ச்சொற்களைத் தனித்தனியாக, முழுமையாக எழுதுங்கள். புதிய தமிழ்ச்சொற்களை உருவாக்குங்கள். தமிழ் எழுத்துகளை நேராக அச்சிடுங்கள் - *சாய்த்து அச்சிடாதீர்கள்.* உங்கள் குடும்ப ஆவணங்களை, படங்களுடன் உருவாக்குங்கள். அதன்மூலம் நீங்கள் ஆயிரம் ஆண்டுகள் வாழ்வீர்கள். ஏற்கனவே பிறப்பைத் தீர்மானித்துவிட்ட மனிதன், இறப்பையும் வெல்லக்கூடிய காலம் நெருங்கி விட்டது. இனி, உடலாலும் ஆயிரம் ஆண்டுகள் வாழ முடியும். குறிப்பிட்ட கால இடைவெளியில் மருத்துவப் பரிசோதனைகள் செய்து கொள்ளுங்கள். நடை, நீச்சல், உடற்பயிற்சி செய்யுங்கள். குருதிக்கொடை வழங்குங்கள். மற்றவர்களை, 'நூறு ஆண்டுகள் வாழ்க' என்று வாழ்த்துவதற்குப் பதிலாக, 'ஆயிரம் ஆண்டுகள் வாழ்க' என்று வாழ்த்துக!

இரண்டு விரல்களால் எழுதுவதை நிறுத்துங்கள் - பத்து விரல்களால் எழுதுங்கள்

J இரண்டுவிரல்களால் எழுதுகின்ற காலம் முடிந்து விட்டது. கையெழுத்தை மட்டும் கையினால் எழுதுங்கள். நீங்கள் நினைக்கின்ற கருத்தை அதே வேகத்தில் எழுத வேண்டுமானால் கணினியில் பத்து விரல்களால் எழுதுங்கள். வீட்டுக்கு வீடு தொலைபேசி, தொலைக்காட்சி, துணி துவைக்கும் பொறி, அரவைப் பொறிகள் இடம் பிடித்ததுபோல், தற்போது பெரும்பாலான நடுத்தரக் குடும்பங்களில் கணினி மிக வேகமாக இடம் பிடித்துக்கொண்டு இருக்கிறது. வீடுகளில் இருந்தவாறே கணினியில் பணி ஆற்றி பெண்கள் வருமானம் ஈட்டத் தொடங்கி விட்டார்கள். எனவே, உங்கள் இல்லத்தில் கணினியை இடம்பெறச் செய்யுங்கள். கணினி இல்லாத வீடு கடைத்தேற

முடியாது. கணினி இயக்கும் பயிற்சியை நீங்கள் பெறாவிட்டால் மருத்துவராக இருந்தாலும், பொறியாளராக இருந்தாலும், கணினியில் கடிதங்களை எழுதுவதற்கு வேறொருவரின் உதவியைத்தான் நாட நேரிடும். அப்போது, கணினியில் எழுதத் தெரியாதவர்கள் பட்டியலில் நீங்கள் இடம் பெற்று விடுவீர்கள். எச்சரிக்கை! வருமுன் காப்போம்! தற்போது, பல தனியார் பள்ளிகளில் 1 ஆம் வகுப்பு முதலே கணினி கல்வி சொல்லித் தருகிறார்கள். எனவே, அரசுப் பள்ளிகளில் குறைந்தது ஆறாம் வகுப்பில் இருந்து அனைத்து மாணவ, மாணவியருக்கும் தனித்தனியாக ஒரு கணிணியை ஒதுக்கி பயிற்சி அளிக்க வேண்டும். குறைந்தது இரண்டு அல்லது மூன்று மாதங்கள் முறையாகத் தட்டச்சுப் பயிற்சி பெற்றுக் கொண்டால் மட்டுமே, கணினியில் பத்து விரல்களையும் பயன்படுத்தி வேகமாகப் பணி ஆற்ற முடியும்.

அயல்நாடுகளில் வேலை வாய்ப்புகள் : உங்கள் மின்அஞ்சல் முகவரி என்ன?

1. அரபிக் 2. சைனீஸ் (மாண்டரின்) 3. ∴பிரெஞ்ச் 4. ரஷ்யன் 5. ஆங்கிலம் 6. ஸ்பானிஷ். உலகில் அதிக மக்களால் பேசப்படுகின்ற மேற்கண்ட ஆறு மொழிகளில்தான் உலக நாடுகள் ஒன்றியத்தின் (United Nations) அலுவல்கள் நடைபெறுகின்றன. இந்த ஆறு மொழிகளையும் படிப்பதற்கு முயற்சி செய்ய வேண்டும். அல்லது ஏதேனும் ஒன்றிரண்டு மொழிகளையாவது படிக்க வேண்டும். அதன் மூலம் ஏராளமான வேலைவாய்ப்புகளைப் பெற முடியும். இதில் குறைந்தது நான்கு மொழிகளாவது தெரிந்து இருந்தால்தான் உலக நாடுகளின் ஒன்றிய அலுவலகத்திலும்,உலகம் முழுமையும் உள்ள உ.நா. அமைப்புகளிலும் பணியாற்றும் வாய்ப்பு கிடைக்கும். அது மட்டும் அல்ல; ஏறத்தாழ 30க்கும் மேற்பட்டபொருளாதார வளமிக்க மேலை நாடுகளில் பிறப்பு விகிதம் குறைந்து வருகிறது. அந்த நாடுகளில் அனைத்துத் துறைகளிலும் பணியாற்றுவதற்கு வெளிநாடுகளில் இருந்து வேலைக்கு ஆள் எடுக்க வேண்டிய சூழ்நிலை உருவாகி இருக்கிறது. மருத்துவர்கள், பொறியாளர்கள், செவிலியர்கள், உணவக மேலாண்மை பயிற்சி பெற்றவர்களுக்கு உடனடியாக இலட்சக்கணக்கான வேலைவாய்ப்புகள் உள்ளன. வெளிநாட்டுத் தொடர்புகளை உருவாக்கிக் கொள்ளுங்கள். கடிதங்கள் எழுதி காலத்தை வீணாக்காதீர்கள். தொலைபேசியில் தொடர்பு கொள்ளுங்கள். இணையத்தில், உங்களுக்கென மின் அஞ்சல் முகவரியை உருவாக்கிக் கொண்டு, தினமும் உங்கள் மின் அஞ்சலைத் திறந்து பார்க்க வேண்டும், பதில் எழுத வேண்டும். என்னுடைய மின் அஞ்சல் முகவரி: chessarunagiri@yahoo.com தொடர்பு கொள்ளுங்கள்.

உலகம் ஒரு கிராமம் – ஒரு முறையேனும் சுற்றி வாருங்கள்

J உலகில் இந்தியாவின் நிலப்பரப்பு 7 விழுக்காட்டுக்கும் குறைவுதான். இதற்குள், தமிழ்நாட்டின் நிலப்பரப்பு எவ்வளவு? அதிலும் நாம் எந்த

மூலையில் இருக்கிறோம்? இந்தக் குறுகிய வட்டத்துக்கு உள்ளேயே நாம் எவ்வளவு இடங்களைப் பார்த்து இருக்கின்றோம்? என்பதை எண்ணிப் பாருங்கள். நாம் வசிக்கும் உலகத்தின் பெயரே தற்போது "உலகளாவிய கிராமம்"(Global village) என்றுதான் அழைக்கப்படுகின்றது. மேற்கு நாடுகளில், ஒவ்வொரு வார இறுதியிலும் சனி, ஞாயிறு இரண்டு நாள்களும் உள்நாட்டுச் சுற்றுலா செல்கிறார்கள். பத்து மாதம் வேலை செய்து வருமானம் ஈட்டுகின்றார்கள். சேமிக்கின்றார்கள். ஓராண்டில், இரண்டு மாதங்கள் பிற நாடுகளில் சுற்றுலா செல்கின்றார்கள். அதைப்போல நீங்களும் வெளிநாடுகளுக்கு அல்லது தொலைவில் உள்ள இடங்களுக்கு சுற்றுலா செல்லுங்கள் - பயண அனுபவங்களைப் பெறுங்கள். உங்கள் வாழ்நாளில் குறைந்தது 25 நாடுகளையாவது சுற்றிப்பார்க்க வேண்டும் என்பதைக் குறிக்கோளாகக் கொள்ளுங்கள். உங்கள் பயண நிகழ்வுகளை ஒளிப்பதிவு செய்து, காட்சிகளைத் தொகுத்து குறுவட்டுகளாக மாற்றி, நண்பர்கள், உறவினர்களைப் பார்க்கச் செய்யுங்கள்.

புதிய தொழில் செய்வோம்

J அமெரிக்க நாட்டின் மக்கள் தொகையில் நூற்றுக்கு இரண்டு பேரே விவசாயிகள். அவர்களே 98 விழுக்காட்டினருக்கும் உணவுப் பொருள்களை விளைவிக்கிறார்கள். வெளிநாடுகளுக்கும் ஏற்றுமதி செய்கிறார்கள். மற்ற அனைவரும் பிற தொழில்களைச் செய்கிறார்கள். எனவே, எந்த ஒரு பொருளுக்காகவும் அவர்கள் வெளிநாடுகளைச் சார்ந்து இருக்க வேண்டிய கட்டாயம் இல்லை. ஆனால், இந்தியாவில் ஏறத்தாழ நூற்றுக்கு 50 பேர் இன்னமும் விவசாயம் சார்ந்த தொழில்களைத்தான் செய்துகொண்டு இருக்கின்றார்கள். ஒரு வீட்டில் பத்துப் பேருக்குத் தேவையான உணவை இரண்டு பேர் சமைத்தால் போதும். ஆறு பேர் தேவை இல்லை. 1990 ஆம் ஆண்டுக்குப் பின்னர், எஸ்.டி.டி. தொலைத் தொடர்பு மையங்கள், கம்பிவழித் தொலைக்காட்சி (Cable TV), இண்டர்நெட், கணினி மையங்கள், கோழி வளர்ப்பு, வாகன போக்குவரத்து, ஆட்டோ இதுபோன்ற புதிய தொழில்களின் மூலம் உங்கள் பகுதியில், தமிழ்நாட்டில் எத்தனை லட்சம் இளைஞர்கள் புதிதாக வேலைவாய்ப்புப் பெற்று இருக்கின்றார்கள் என்பதைக் கணக்கிட்டுப் பாருங்கள். இன்னும் எத்தனையோ புதிய தொழில் வாய்ப்புகள் உருவாகி இருக்கின்றன. தொலைக்காட்சிகளில் பார்க்கின்ற விளையாட்டுகளை உங்கள் பகுதியில் அறிமுகப்படுத்தலாம்.

100 கோடி மக்கள் தொகை கொண்ட இந்தியாவில் நடைபெறுகின்ற வணிகத்தின் மதிப்பு, உலக வணிகத்தில் ஐந்து விழுக்காட்டுக்கும் குறைவுதான். எனவே, சாதாரண அரசுப் பணிகளை நாடாமல், நீங்களே ஒரு தொழில் முனைவோர் ஆக வேண்டும். உங்கள் பொருட்களை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய வேண்டும். வாணிபம் செய்வதற்காகப் புறப்பட்ட ஐரோப்பிய நாட்டவர்கள்தான் உலகின் பாதிக்கும் மேற்பட்ட நாடுகளை வெற்றி கொண்டார்கள் என்பதை நினைவில் கொண்டு,

திரைகடலோடி திரவியம் தேடுங்கள். படித்த இளைஞர்களே, நாட்டை விட்டு வெளியேறுங்கள். பொருள் குவித்த இளைஞர்களே, நாட்டுக்குத் திரும்பி வாருங்கள். மற்றவர்களுக்கு வேலை வாய்ப்பு வழங்குங்கள். பங்குச் சந்தைகளில் முதலீடு செய்து, வங்கிகளில் டீமேட் கணக்குகளைத்தொடங்கி, (Demat A/C) கணினித்திரைகளின் வழியாகவும் திரவியம் தேடுங்கள். கூடி வாழ்ந்தால் கோடி நன்மை. நகர்ப்புறங்களில் குடியேறுங்கள். ஆறு கண்டங்களிலும் தலா ஐந்து ஆண்டுகள் வாழுங்கள்.

உங்கள் இல்லத்தின் சுவர்களில் கீழ்க்காணும் படங்கள் இடம் பெற்று இருக்கின்றதா?

J உலக வரைபடம், உலக உருண்டை (Globe) J தமிழ்நாடு வரைபடம், J இந்திய வரைபடம்,J உலக நாடுகளின் கொடிகள் J உலக நாடுகளின் நாணயங்கள், J உலக நாடுகளின் அரசு முத்திரைகள் J பெருநகரங்களில் வசிப்பவர்களாக இருப்பின், அந்த நகரின் வரைபடம்.

தினமும் எதைப் பார்க்கிறோமா அந்தக் காட்சி நம் மனதில் ஆழப்பதிந்து விடும். எனவே, தேவையற்ற படக்காட்சிகளை வீட்டுச் சுவர்களில் இடம்பெறச் செய்யாதீர்கள். மனதில் பதிய வைக்காதீர்கள். மேற்கண்ட வரைபடங்களைத் தினமும் ஒருமுறை உற்றுப் பாருங்கள். அவற்றை மனதில் பதிய வைத்துக் கொள்ளுங்கள். ஆண்டுக்கு ஒருமுறை வீட்டின் உள் அமைப்பை மாற்றுங்கள். உலகில் எத்தனை நாடுகள் இருக்கின்றன என்பதை நீங்கள் தெரிந்து கொண்டு இருக்கின்றீர்களா? உலக வரைபடத்தில் நீங்கள் எங்கே இருக்கின்றீர்கள் என்பதைத் தெரிந்து கொண்டு இருக்கின்றீர்களா? செய்தித்தாள்களில் அல்லது தொலைக்காட்சியில் ஒரு நாடு குறித்த செய்திகளைப் படிக்கும்போதும், பார்க்கும்போதும் அந்த நாடு எங்கே இருக்கிறது என்பதை உலக வரைபடத்தில் உடனே பார்த்துத் தெரிந்து கொள்ளுங்கள். வட துருவத்தில் சைபீரியக் கண்டத்தில் இருந்து பத்து ஆயிரம் மைல்களைக் கடந்து வேடந்தாங்கலுக்கு வருகின்ற பறவைகள், மீண்டும் அதே பாதையில் திரும்பிச் செல்கின்றன. அந்த வழித்தடம் பறவையின் சிறிய தலையில் பதிந்து இருக்கின்றது. அது போல் உங்கள் நினைவில் உலக வரைபடத்தைப் பதிய வைத்துக் கொள்ளுங்கள். உலகில் நாம் எங்கே இருக்கின்றோம்? பயணங்கள் மேற்கொள்ளும்போது - எந்தத்திசையில் செல்கிறோம் - எவ்வளவு தொலைவு செல்கிறோம்? அதற்கான காலம் எவ்வளவு? என்று பயணத்தில் மட்டும் அல்ல, வாழ்க்கைப் பாதையிலும் உங்கள் இலக்கைத் தீர்மானித்துக் கொண்டு செல்லுங்கள். திட்டமிட்டுச் செயல்படுங்கள். வெற்றி உங்களுக்கே!

அருணகிரி
(வைகோவின் செயலர்)
☎ 9444 39 39 03, 044-28516565/66

கோவிந்தராஜுலு அவர்களின் மூத்த மகன்
பிரேம்குமார் – வித்யா திருமணம்
மணமக்களின் பெற்றோருடன் பத்மாவதி அம்மையார், சரஸ்வதி,
திருமதி. சாவித்திரி



ஜி.ஆர்.கோவிந்தராஜுலு – ஜி.அமிர்தம்

மா.மாரியப்பன் – மா.ஆதிலட்சுமி
(சத்யவனிதா பெற்றோர்)

சத்யவனிதாவுக்கு சந்தோஷ் கணையாழி அணிவித்தல்

ஜி.பிரேம்குமார் – வித்யா திருமணத்தில்...
வித்யாவின் பெற்றோர் பி. சுந்தர்–ஜமுனா ராணி, அண்ணன் கார்த்திக்

தமிழ் வளர . . . தமிழர் உயர்நிலை பெற . . .

1. எல்லோரும் எழுத்தாளர்களே. புத்தகங்களைப் படிப்பதுடன் நின்று விடாமல், ஒவ்வொரு மனிதரும் தன் வாழ்க்கையில் கிடைத்த படிப்பினைகளை எழுதி நூலாக வெளியிட வேண்டும். உங்கள் குடும்பத்தின் வருங்காலத் தலைமுறையினருக்காக, உங்கள் கொடிவழியை, குடும்பத்தினரைப் பற்றிய செய்திகள், உறவினர்களின் முகப்படங்களை - குடும்ப ஆவணமாகப் பதிவு செய்து வைக்க வேண்டும். இங்கிலாந்து, ஃபிரான்ஸ் போன்ற மேற்கு நாடுகள், ஜப்பான், சீனா போன்ற கிழக்கு நாடுகளில் பல நூற்றாண்டுகளாக இந்தப் பணியைச் செய்து இருக்கிறார்கள். ஜப்பானில், ஒவ்வொரு குடும்பத்திலும் 30 தலைமுறையினரைப் பற்றிய செய்திகள் இருக்கின்றன.

2. தமிழைப் பேசுகிற ஒவ்வொரு தமிழரும், பத்து புதிய தமிழ்ச் சொற்களை உருவாக்க வேண்டும். அச்சொற்களை, இயக்குநர், தமிழ் வளர்ச்சித் துறை, குறளகம், சென்னை; தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்; தமிழகத்தில் உள்ள பல்கலைக்கழங்களின் தமிழ்த்துறைகள்; உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம்,தரமணி,சென்னை; (Centre of Indian Languages, Mysore) ஆகிய அமைப்புகளுக்கு எழுதி அனுப்ப வேண்டும்.

3. தமிழகத்தில் நடைபெறுகின்ற ஒவ்வொரு திருமணத்திலும், புதிய செய்திகள் இடம் பெறுகின்ற ஒரு புதிய நூல் வெளியிடுதல் வேண்டும். திருமணத்துக்கு வருகை தருவோருக்கு அன்பளிப்பாக வழங்குதல் வேண்டும். அந்த நூலில், திருமண அழைப்பிதழ், மணமக்களின் முகப்படங்கள், திருமணத்துக்கு வருகை தந்தோருக்கான நன்றி அறிவிப்பு ஆகியவை இடம் பெற வேண்டும். நான் இதுவரையிலும், 15 திருமணங்களில், நூல்களை உருவாக்கிக் கொடுத்து இருக்கிறேன்.

4. தமிழில் வடமொழிச் சொற்கள், ஆங்கிலக் கலப்பைக் கண்டு அறிந்து, முழுமையாகத் தவிர்க்க வேண்டும். தமிழ்நாட்டில் உள்ள நகரங்களின் வரலாறு களைத் தொகுத்து எழுத வேண்டும். சங்கரன்கோவில் நகர வரலாற்றைத் தொகுத்து எழுதும் முயற்சியை நான் மேற்கொண்டு இருக்கிறேன்.

5. சோதிடம், பக்தி நூல்கள் எழுதுவதைத் தடை செய்ய வேண்டும். கடந்த இருபது நூற்றாண்டுகளாக எழுதப்பட்ட நூல்களுள் பக்தி வழிபாடு மட்டுமே இடம் பெற்றது. அறிவியல் நூல்கள் இல்லை. இருபதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில்தான் பிற இலக்கியங்கள் உருவாகின. எனவே, இனியும் பக்தி நூல்களை எழுதக்கூடாது - பதிப்பிக்கக் கூடாது. பக்தி இலக்கியம் என்பது பொய் இலக்கியமே. கதை, கவிதை எழுதுவதை நிறுத்துங்கள். சிறுகதைகள் போதும், தொடர்கதைகள் வேண்டாம். அன்றாடச் செய்திகளை அலசுகின்ற கட்டுரைகளைத் தக்க சான்றுகளுடன் எழுத வேண்டும். மருத்துவம், அறிவியல், விண்வெளி இயல், பயணக் கட்டுரை நூல்களைப் பெரும் அளவில் தமிழில் கொண்டு வரும் பணியைச் செய்ய வேண்டும். மொழிபெயர்ப்பு நூல்கள் பெருக வேண்டும். நூல்களை உயரிய தரத்தில், தெளிவாகப் படிக்கும் வகையிலான நேரான எழுத்து உருக்களில் அச்சிட வேண்டும். *தமிழைச் சாய்த்து அச்சிடக் கூடாது.*

6. 'புணர்ச்சி விதி' என்ற பெயரில், இரண்டு சொற்களைச் சேர்த்து எழுதக் கூடாது. புணர்ச்சி விதி என்பது எளிதில் புரியாத விதியே! இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் செய்யுள் நடையில், பாட்டு வடிவில் இருந்த தமிழ், அந்த நூற்றாண்டின் பிற்பகுதியில் உரைநடை, கவிதை என்ற புதிய வடிவங்களைப் பெற்றது. எனவே, இருபத்து ஒன்றாம் நூற்றாண்டுக்கு ஏற்ற வகையில், தமிழை எளிமையாக, தமிழ்ச்சொற்களைத் தனித்தனியாக, முழுமையாக எழுதுதல் வேண்டும். அப்போதுதான், தற்கால, வருங்கால இளைய தலைமுறையினர் தமிழை எளிதில் படித்துப் புரிந்து கொள்வர். இந்தக் கட்டுரையில் அவ்வாறு எழுதி உள்ளேன். எழுத்தாளர்கள் அனைவரும், தங்களுடைய படைப்புகளில் சொற்களைப் பிரித்து எழுதுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

7. அயல்நாடுகளுக்குச் செல்கின்ற தமிழ் இளைஞர்கள், பொருள் சேர்த்தபின்பு சொந்தமாகத் தொழில் நிறுவனங்களைத் தொடங்கி முதலாளிகள் ஆக வேண்டும்.தமிழகத்திலும் தொழில்களைத் தொடங்க வேண்டும். வாழ்நாள் முழுமையும் பிறரிடம் வேலை பார்த்துக்கொண்டு இருக்கக்கூடாது. அயல்நாடுகளில் உள்ள தமிழர்களுக்கும், தமிழ்நாட்டுத் தமிழர்களுக்கும் இடையே வணிகத் தொடர்புகள் பெருக வேண்டும். உலகத் தமிழர் முகவரிக் களஞ்சியம் உருவாக்கப்பட வேண்டும்.

8. தமிழர்கள் அனைவரும் வானூர்திகளில் பறக்க வேண்டும். ஒருமுறையேனும் உலகம் சுற்றி வர வேண்டும். நீங்கள் பறந்து இருக்கிறீர்களா? இல்லையேல், எப்போது பறக்கப் போகிறீர்கள்? எத்தனை நாடுகளைப் பார்க்கப் போகிறீர்கள்?

இனி வருங்காலத் தலைமுறையினர், ஆயிரம் ஆண்டுகள் வாழ்வதற்கான சாத்தியக்கூறுகள் உள்ளன. இதுகுறித்து, '**ஆயிரம் வயசு**' என்ற தலைப்பில் நான் விரிவாக ஒரு கட்டுரை எழுதி உள்ளேன். 2050 க்குப் பின்னர் பிறக்கின்றகுழந்தைகள், உடலாலும் ஆயிரம் ஆண்டுகள் வாழ முடியும். ஏற்கனவே பிறப்பைத் தீர்மானித்துவிட்ட மனிதன், இறப்பையும் வெல்வது உறுதி.

நமக்கும்கூட ஆயிரம் வயசுதான். எப்படி என்கிறீர்களா? திருக்குறள் போன்று ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு எழுதப்பட்ட நூல்களை இன்று நாம் வாசிக்க முடிவது போல், நீங்களும், நானும் எழுதுகின்ற நூல்களை ஆயிரம் ஆண்டுகளுக்குப் பின்னரும் அழியாமல் பாதுகாக்கக் கூடிய கருவிகள், கணினிகள் வந்து விட்டன. எழுத்துகள் அவற்றில் பதிவு செய்யப்படுகின்றன. எனவே, புத்தகம் எழுதினால், உங்களுக்கும் ஆயிரம் வயசுதான்! நீங்கள் எழுதுகின்ற நூலில், 'கம்பர் சொன்னார் - காந்தி சொன்னார் - விவேகானந்தர் சொன்னார் - பாரதி சொன்னார்' என்று ஒரு வரி கூட மேற்கோள்களை எழுதாதீர்கள். உங்கள் கொடிவழியை, உங்கள் வாழ்க்கையில் பெற்ற படிப்பினைகள், உங்களுக்குத் தோன்றிய கருத்துகளை மட்டும் பதிவு செய்யுங்கள்.

ஒரு மனிதன் வாழ்ந்து மறைந்தான் என்பதற்கு மூன்று அடையாளங்கள்! 1. ஒரு குழந்தையைப் பெற்று இருக்க வேண்டும். 2. ஒரு வீட்டைக் கட்டி இருக்க வேண்டும். 3. ஒரு புத்தகம் எழுதி இருக்க வேண்டும்.

அருணகிரி
9444 39 39 03
044-2851 6565; 66

சத்யவனிதா - சந்தோஷ்
ஆயிரம் ஆண்டுகள் வாழ்க